கலை
இலக்கிய
மாத
சஞ்சிகை

225

தை 2024
10.01.2024

# ஜீவநதி

100/-

பிரதம ஆசிரியர் : க.பரணீதரன்



இளம்பிறை எம்.ஏ.ரஹ்மான்
எம்.ஐ.அப்துல் ஜப்பார்
அ.அ.நவரெத்தினம்
சா.திருவேணிசங்கமம்
பேராசிரியர் சி.மௌனகுரு
பேராசிரியர் செ. யோகராசா
செங்கதிரோன்
தீரன்.ஆர்.எம்.நௌஷாத்
பரணீ
திக்குவல்லைக்கமால்
அ.யேசுராசா

## ஏ.பீர்முகம்மது சிறப்பிதழ்

பொதுசன நூலகம்
02 MAR 2024
யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலை இலக்கிய மாத சஞ்சிகை
2024.01.10 - தை - ஆளுமைச் சிறப்பிதழ்

# பொருளடக்கம்

## கட்டுரைகள்

**இளம்பிறை சஞ்சிகையில் துவங்கி இன்றுவரை எழுத்தூழியத்தில் ஈடுபட்டுவரும் ஏ.பீர்முகம்மது**
இளம்பிறை எம்.ஏ.ரஹ்மான்................ 03

**ஏ.பீர் முகம்மது : கல்விப் புலத்தில் அவரின் பங்களிப்புகள்**
எம்.ஐ.அப்துல் ஜப்பார்........................... 06

**எஸ்.பொன்னுத்துரை: முஸ்லிம்களுடனான உறவும் ஊடாட்டமும் இன நல்லுறவைப் பேசும் எழுத்தின் பிரதி**
அருட்பணி அ.அ.நவரெத்தினம்.............. 09

**தலைசிறந்த இலக்கிய ஆளுமை**
சா.திருவேணிசங்கமம் .......................... 11

**விபுலாநந்த அடிகளும் முஸ்லிம்களும் என்ற நூல் பற்றிய குறிப்புகளோடு... ஏ.பீர்முகம்மது : மாணவனாகவும் வளர்ந்த மனிதனாகவும்**
பேராசிரியர் சி.மௌனகுரு...................... 13


**ஆறுதலும் பரவசமும் தரும் கட்டுரைகள்**
பேராசிரியர் செ.யோகராசா..................... 17

**கவிஞர் பீர்முகம்மது அவர்களின் கவிதை வெளி**
செங்கதிரோன்...................................... 18

**கடல் ஒருநாள் எங்கள் ஊருக்குள் வந்தது... அழிவிலிருந்து ஆக்கம் பெறுதலை வலியுறுத்தும் சிறுவர் கவிதைப் பிரதி**
தீரன் ஆர்.எம்.நௌஷாத்......................... 23

**"தைலாப்பெட்டி" முழுமையான பேச்சுவழக்கு சிறுகதைத்தொகுப்பு**
திக்குவல்லைக் கமால்............................ 32

**இளம்பிறை எம்.ஏ. ரஹ்மான் இருட்டடிப்புகளை மீறி வெளிச்சத்துக்கு வந்தவர்**
அ.யேசுராசா........................................ 35




பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

**சிறுகதை**
பீர்முகம்மது - 30



**உருவகக்கதை**
பீர்முகம்மது - 34




**நேர்காணல்**
பீர்முகம்மது - 26

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

[Ptejp

2024 தை இதழ் - 225

**பிரதம ஆசிரியர்**
க.பரணீதரன்

**துணை ஆசிரியர்கள்**
வெற்றிவேல் துஷ்யந்தன்
ப.விஷ்ணுவர்த்தினி

**பதிப்பாசிரியர்**
கலாநிதி த.கலாமணி

**தொடர்புகளுக்கு :**
கலை அகம்
சாமணந்தறை ஆலடிப்பிள்ளையார் வீதி
அல்வாய் வடமேற்கு
அல்வாய்
இலங்கை.

**ஆலோசகர்கள்:**
திரு.கி.நடராஜா
திரு தில்லைநாதன் கோபிநாத்

**தொலைபேசி** : 0775991949
0212262225

**E-mail** : jeevanathy@yahoo.com

**வங்கித் தொடர்புகள்**
K.Bharaneetharan
Commercial Bank, Nelliady
A/C - 8108021808 - CCEYLKLY



இச்சஞ்சிகையில் இடம்பெறும் அனைத்து ஆக்கங்களின் கருத்துக்களுக்கும் அவற்றை எழுதிய ஆசிரியர்களே பொறுப்புடையவர்கள்.



ஜீவநதி சந்தா விபரம்

தனிப்பிரதி - 100/= ஆண்டுச்சந்தா - 3000/=
வெளிநாடு - $ 100U.S
மணியோடரை
அல்வாய் தபால் நிலையத்தில்
மாற்றக்கூடியதாக அனுப்பி வைக்கவும்.
அனுப்ப வேண்டிய பெயர்/முகவரி
**K .Bharaneetharan,**
**Kalaiaham ,**
**Alvai North west, Alvai.**
வங்கி மூலம் சந்தா செலுத்த விரும்புவோர்
K.Bharaneetharan Commercial Bank - Nelliady Branch
A/C No.- 8108021808 CCEYLKLY



**ஜீவநதி**

**(கலை இலக்கிய மாத சஞ்சிகை)**

அறிஞர் தம் இதய ஓடை
ஆழ நீர் தன்னை மொண்டு
செறி தரும் மக்கள் எண்ணம்
செழித்திட ஊற்றி ஊற்றி...
புதியதோர் உலகம் செய்வோம்.!
- பாரதிதாசன்-


# புலமையாளர் பீர் முகம்மது

பீர் முகம்மது அவர்கள் பல்துறை ஆளுமையுள்ள படைப்பாளர். படைப்பாளர் என்பதற்கும் அப்பால் சிறந்ததொரு கல்வியியலாளர். இலக்கியப் பரம்பரையில் தோன்றியவர். ஆழ்ந்த தமிழ்ப்புலமை மிக்கவராக காணப்படுகின்றார். சிறுகதை, கவிதை, ஆய்வு, கட்டுரை, விமர்சனம் என இலக்கியத்தின் பல்வகைமைகளிலும் இயங்கி வருபவர். இரண்டாம் விசுவாமித்திரன் என்னும் புனைபெயரிலும் எழுதி வருபவர். கணித பாட ஆசிரியராக தனது கல்விச் சேவையை ஆரம்பித்து அதிபர், கோட்டக்கல்விப் பணிப்பாளர் என தன் கல்விச் சேவையை நல்கியவர். 10 நூல்களை வெளியிட்டுள்ள இவர் இளம்பிறை சஞ்சிகையூடாக வெளிவந்த படைப்பாளி. இளம்பிறை எம்.ஏ.ரஹ்மான், எஸ்.பொ போன்றவர்களுடன் மிக நெருக்கமான தொடர்பைக் கொண்டவர். இவர்கள் இருவரையும் பற்றிய அருமையானதொரு நூலையும் வெளியிட்டுள்ளார். தெற்காசிய இலக்கியப் பெருவிழாவில் கலந்து சிறப்பித்தவர். பல்வேறு விருதுகளையும் பெற்றவர். தொடர்ச்சியாக இலக்கியத்தில் ஈடுபாடு காட்டி வருபவர். இரண்டாம் விசுவாமித்திரன் என்னும் புனைபெயரில் பல நூல்கள் பற்றிய விமர்சனங்களை செங்கதிர் சஞ்சிகையில் மேற் கொண்டார். பல கவியரங்குகளுக்கு தலைமை வகித்து வருகின்றார். சில சிறுகதைகளையே எழுதினாலும் மிக சிறப்பான கதைகளாக அவை அமைந்துள்ளன. அமைதியாக இனிமையாக அனை வருடனும் பழகும் பீர்முகம்மது அவர்களுடைய இலக்கியச் சேவையை கௌரவித்து அவரது பவளவிழா ஆண்டில் இச்சிறப்பிதழை வெளியிட்டு ஜீவநதி மகிழ்கின்றது.

- க.பரணீதரன்


**ஜீவநதி கிடைக்கும் இடங்கள்/ விற்பனையில் உதவுவோர்**

1. புத்தகக்கூடம் - திருநெல்வேலி
2. பூபாலசிங்கம் புத்தகசாலை - யாழ்ப்பாணம், கொழும்பு செட்டித்தெரு
3. புத்தகப்பண்பாட்டுப் பேரவை, 68, நீதிமன்ற வீதி, மல்லாகம்
5. பண்டாரவன்னியன் புத்தகசாலை - வவுனியா
4. அ.யேசுராசா
5. பரணி புத்தகக்கூடம் - நெல்லியடி
6. மு.யாழவன்- திருகோணமலை,
7. கந்தர்மடம் அ.அஜந்தன்
8. சி.ரமேஷ்
9. நா.நவராஜ்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளம்பிறை சஞ்சிகையில் துவங்கி இன்றுவரை எழுத்தூழியத்தில் ஈடுபட்டுவரும் ஏ.பீர்முகம்மது



எஸ்பொவின் மனைவி ஈஸ்பரமும் மகள் மேகலாவும் 2015 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் சென்னை வந்தனர். இங்கு மித்ர அலுவலகம் சரியாக செயல்படாத தாலும் மிகுந்த நஷ்டம் ஏற்பட்டதா லும் அதை நிர்வகிக்க நேர்மை யான நல்ல நபர் கிடைக்காததா லும் அதை காலி செய்தனர். அதி லிருந்த நூல்களில் பெரும் பாலானவை அவர்மகன் அநுரவுக்கு அவுஸ்திரேலியா அனுப்ப ஒன்பது பெட்டிகளில் நிரப்பப்பட்டன.

ஒரு பெட்டி மட்டக் களப்புக்கு எஸ்பொவின் மனைவி யின் அக்காள் மகள் திருமதி சசிகலாவுக்கு அனுப்ப ஏற்பாடு செய்து கொண்டிருந்தோம். அந் நேரத்தில் திடீரென என் நினைவுக்கு வந்தார் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த பீர் முகம்மது அவர்கள். எஸ்பொவின் நூல்கள்பற்றி அவர் அடிக்கடி விசாரித்துக் கொண்டிருந்தவர். இளம்பிறையுடனான அவரின் தொடர்புகள்பற்றி அந்நேரம் என் நினைவில் வரவில்லை. இருந்தா லும் இந்த அளவுக்கு அவர் அவாவுறும் விதத்தை வியந்து திருமதி பொன்னுத்துரையுடன் கலந்துபேசி எஸ்பொ நூல்களை ஒரு பெட்டியில் அடைத்து சசிகலா வுக்கு அனுப்பி வைத்து பீர் முகம்மதுவுக்குக் கிடைக்கச் செய்தேன். அது ஓர் அற்புதமான செயல் என்று இன்று உணர் கிறேன். அதன் விளைவே இக் கட்டுரையும்.

இலங்கையின் தமிழ் இலக்கிய சஞ்சிகைகளின் வர லாற்றில் என்னால் வெளியிடப்பட்ட இளம்பிறை சஞ்சிகை ஆற்றிய பங்களிப்பு கொஞ்சநஞ்சமல்ல.

ஆனால் அதன் வரலாற்றை திட்டமிட்டு சிலர் மறைக்க முயற்சித்தார்கள்.

இலங்கையின் பிரபல இலக்கியவாதிகள் பலர் இளம்பிறை ஊடாகவே அறிமுகமானவர்கள். அவர்களில் குப்பிளான் சண்முகம், இக்கவிஞர் பீர் முகம்மது, ஐ.சாந்தன், சதாசிவம், மொயின் சமீன், எஸ். எல்.எம்.ஹனீபா, வை. அகமது, ரி.எல்.எம் புகாரி ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். என்னுடைய நண்பர் சை.பீர்முகம்மது மலேசியாவில் வாழ்ந்து கொண்டு இளம்பிறையை வாங்கி வாசித்தவர். மற்றவர்களையும் வாசிக்கச் செய்தவர். அவர் அண்மை யில் நம்மை விட்டு பிரிந்து சென்றுவிட்டார். அந்தச் செய்தி அறிந்து நான் வெதும்பினேன்.

எமது நிறுவனமான அரசு வெளியீடு வில் இருந்து 36 நூல்கள் வெளிவந்தன. அவற்றில் வ.அ.இராசரத்தினம் எழுதிய தோணி, புலவர் மணி ஏ.பெரியதம்பிப்பிள்ளை எழுதிய பகவத் கீதை வெண்பா ஆகிய நூல்கள் 1962ம் ஆண்டுக்கான சாகித்திய மண்டலப் பரிசு வென்றன.

இந்தக் கட்டுரை எழுதுவதற்காக பழைய இளம்பிறைக் கட்டுகளோடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போராடினேன். வயதுமூப்பு காரணமாக சில விடயங்களை பீர்முகம்மதுவுடன் கலந்துரையாடி செம்மைப் படுத்திக் கொண்டேன். அவருடைய தகவல்கள் இளம்பிறைக்குள் சென்று தேடுவதற்கு எனக்கு உதவியது.

அவருடைய பெயர் ஒவ்வொரு மலரிலும் இருந்தது. யுக்தி, மக்குமாலா, புதிர்போட்டி போன்ற வற்றில் பங்கு பங்குபற்றியிருந்தார்.

அசலும் நகலும், குறும்பா நயம் போன்ற வற்றிலும் தவறாமல் கலந்து கொள்வார்.

கண்ணதாசன் எழுதிய பலே பாண்டியா படத்தில் வரும் அத்திக்காய் காய் காய் என்ற பாடல் பழங்கால இலக்கியப் பாடல் என்பதை காதல் என்ற சஞ்சிகையில் இருந்து எடுத்து அசலும் நகலும் என்ற பகுதிக்கு அனுப்பியிருந்தார். அதற்காக இளம்பிறை யிடமிருந்து

பரிசு கிடைத்ததாக அவர் நினைவூட்டினார். வளரும் பயிர் என்ற பகுதியில் இவரின் குழந்தை என்ற கட்டுரை 1966 டிசம்பர் மலரில் உள்ளது.

அதற்கு முன்னரே குறும்பா ஒன்றை எழுதினார். இலக்கியத்துள் காலடி வைத்தார்

இவர் எழுதிய குறும்பா 1965 செப்டம்பர்-அக்டோபர் மாத இளம்பிறையில் சாகித்திய மலரில் வெளியானது.

அன்றைய காலகட்டத்தில் சிரேஷ்ட கவிஞர்கள் பலர் குறும்பா வடிவத்தில் கவிதை புனைவதை தவிர்த்தநிலையில் இளைஞர்கள் மிகுந்த ஆர்வம் கொண்டு குறும்பா எழுதினர். அவ்வாறானவர்களில் ஒருவரே இவர். அக்குறும்பாவே இவரின் இலக்கிய வாழ்வின் ஆரம்பம்.அது எனக்கு பெருமகிழ்ச்சி.

கவிஞர் மஹாகவிக்குப் பின்னரான காலத்தில் பலர் குறும்பா வடிவத்தை சரியாகக் கையாண்டு வந்தனர். அவர்களில் இவரும் ஒருவர்.

லிமரிக் என்ற ஆங்கிலக் கவிதை வடிவம் தமிழில் குறும்பா ஆனது. பத்தொன்பதாம் நூற்றாண்டில் எட்வேர்ட் லியர் என்பவர் லிமரிக் கவிதை வடிவத்தை பரவலாகப் பயன்படுத்தியவர்.

லிமரிக் என்பது வெறுமனே எள்ளல் மற்றும் நையாண்டிக் கவிதை. நகைச்சுவை இருக்கும். அங்கதம் இருக்கும். பாலியல் சேட்டையும் இருக்கும். ஆனால் மனித சமூகத்தின் சிந்தனையை அது தூண்ட வில்லை.

மஹாகவியின் குறும்பா அப்படி அல்ல.லிமரிக் வடிவத்தைக் கொண்டிருந்தாலும் லிமரிக் கவிதையின் இயல்புகளுக்கு மேலதிகமாக சிந்தனை விரிவுக்கும் முக்கியத்துவம் கொடுப்பதாய் அமைந்திருந்தது.

நீர்கொழும்பிலே 1965இல் தமிழ் விழா ஒன்று நடைபெற்றது. இந்நிகழ்வில் கலந்து கொள்ள வந்திருந்த கவிஞர் மஹாகவி தான் எழுதிய குறும்பா கவிதை தொகுதிக்கு பிரபல எழுத்தாளர் எஸ்பொவிடம் அணிந்துரை கேட்டு அதனைக் கையளித்திருந்தார்.

கவியரங்கத்திற்குத் தலைமை தாங்கிய எஸ்பொ தனது உரையில்,

தொகுதியில் இருந்த முதலாவது குறும்பாவை வாசித்துக் காட்டினார்.

உத்தேசம் வயது பதினேழாம்
உடல் இளைக்க ஆடல் பயின்றாளாம்
எத்தேசத் தெவ்வரங்கும்
ஏறாளாம். ஆசிரியர்
ஒத்தாசையால் பயிற்சி பாழாம்

நமக்கு அறிமுகமான முதலாவது குறும்பா இதுதான்.

கூட்டமுடிவில் இளம்பிறை ஆசிரியர் என்ற தகுதியில் மஹாகவியிடம் குறும்பா தொகுதியைப் பெற்று சஞ்சிகையின் மூன்றாவது இதழில் (மாலை1 பூ3 ) ஒரு குறும்பாவை பிரசுரித்தேன்.

அல்லையிலே வாழ்பவளாம் முல்லை
அவளழகால் ஆடவர்க்குத் தொல்லை
இல்லை எனும் தன் இடையை
இல்லைஎனா தீந்ததனால்
இல்லைஎன்பார் இப்பொழுதோ இல்லை

இதுவே அச்சில் வெளிவந்த மஹாகவியின் முதலாவது குறும்பா, தொடர்ந்து மாதம்தோறும் ஆறு ஏழு குறும்பாக்கள் இளம்பிறையில் பிரசுரம் கண்டன.

மஹாகவி லிமரிக் கவிதைகளின் அருட்டுணர்வினால் தமிழில் குறும்பா எழுதி வெளியிட்டார். அது தமிழுக்கு புது வடிவம் என்றார். எஸ்பொவுடன் நானும் எமது குழு நண்பர்கள் சிலரும் அக்கருத்தை ஆதரிக்க சில்லையூரார் தலைமையில் ஒரு குழுவினர் குறும்பா தமிழுக்கு புது வடிவமே அல்ல என்று எதிர்வாதம் புரிந்தனர்.

இளம்பிறை புதிய தலைமுறையினரிடையே குறும்பா மீதான ஈர்ப்பை உண்டாக்கும்வகையில் குறும்பாவுக்கு நயம் எழுதும் போட்டிகளை வைத்து பரிசுகளும் வழங்கியது. பரிசு பெற்றவர்களில் இங்கே நாம் பேசுகின்ற பீர் முகம்மதுவும் ஒருவர்.

எமது நட்பு இளம்பிறை 1972 இல் நின்று போனதாலும் நான் எனது தாயகமான சென்னை வந்து சேர்ந்ததாலும் துண்டிக்கப்பட்டது.

தொழில்நுட்ப வளர்ச்சியும் சமூகஊடகங்களின் ஏற்பாடுகளும் நாம் மீண்டும் சந்தித்து மகிழ ஏற்பாடு செய்து தந்தது.

பல விடயங்கள் பேசினோம். பழைய விடயங்களும் பேசினோம்.

இன்றுவரை அந்த உறவு நீண்டுகிடக்கிறது.

இளம்பிறையில் துவங்கி இன்றுவரை எழுத்தூழியத்தில் ஈடுபட்டுவரும் ஏ.பீர் முகம்மதுபற்றிய இக்கட்டுரையின் முதலாவது பகுதி கவிஞரோடு எனக்கு எவ்வாறு தொடர்புகள் ஏற்பட்டது என்பதை பேசுகின்றது.

இக்கட்டுரையின் பின் அரைவாசியில்
மற்றொரு விடயம் உள்ளது.

பீர் முகம்மது அவர்கள் மாணவப் பருவத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திலேயே இளம்பிறையை சந்தா கட்டி வாசிக்கத் துவங்கினார். அதன் காரணமாக இலக்கியத்தில் ஈடுபடலானார். இளம்பிறையில் வருகின்ற கட்டுரைகள் அவரை இலக்கியத்தின்பால் ஈர்க்கத் துவங்கின. குறிப்பாக எஸ்.பொன்னுத்துரையின் எழுத்தை சுவைத்து மகிழ்ந்தார்.

எஸ்பொவின் உண்மை விசுவாசியாகவே அவர் இன்றுவரை வாழ்ந்து வருகிறார்.

கவிஞர் கலாபூஷணம் பீர்முகம்மது அவர்கள் எஸ்பொ பற்றி பல கட்டுரைகள் எழுதினார்.

எஸ். பொன்னுத்துரை :

முஸ்லிம்களுடனான உறவும் ஊடாட்டமும் என்ற தலைப்பில் நூல் எழுதி வெளியிட்டார்.

மேற்படி நூல் 2021 இல் வெளிவந்தது. எனக்கும் எஸ்பொவுக்கும் இடையிலான உறவுபற்றி விபரமான தகவல்கள் அதில் உள்ளன. அண்மைக் காலத்தில் எங்கள் இருவருக்கும் இடையிலான உறவு எழுத்தில் பதிவு பெற்றமைக்கான சான்றாக இந்நூல் விளங்குகின்றது. அதனை செயலாக்கியவர் பீர் முகம்மது அவர்களே.

எஸ்பொ முஸ்லிம்களுடன் கொண்டிருந்த உறவுபற்றிப் பேசிய மேற்படி நூலின் தொடர்ச்சியாக இன்னுமொரு நூல் 2022 இல் வெளிவந்தது.

இளம்பிறை எம்.ஏ.ரஹ்மான் : இருட்டடிப்புகளை மீறி வெளிச்சத்துக்கு வந்தவர் என்ற தலைப்பில் ஏ.பீர்முகம்மது அந்நூலை வெளியிட்டார்.

இலங்கையில் இருந்து நான் 1976 இல் வெளியேறினேன். தொடர்ந்து எனது இலக்கியப் பணிகள் இந்தியாவில் ஆரம்பமாயின. இளம்பிறை பதிப்பகம் துவங்கினேன். இயங்கினேன்.

சென்னை சென்றதால் இலங்கையில் நான் இயற்றிய பங்களிப்புகள் மங்கலாகவே இருந்தன. குறிப்பாகச் சொன்னால் வெளியில் பெரிதாகப் பேசப்படவில்லை.

ஆனால் பீர் முகம்மது எழுதிய இந்த நூலால் மீண்டும் எனக்கு வெளிச்சம் கிடைத்தது.

அந்த நூல் அக்கரைப்பற்றில் 09.10.2022 இல் வெளியீடு செய்யப்பட்டது. அத்துடன் புத்தகப் பண்பாட்டு வளர்ச்சிக்கான வாழ்நாள் பங்களிப்பு விருதும் எனக்கு வழங்கி கௌரவித்தார்கள். அந்த விருதினை பிரபல எழுத்தாளர் வ.அ.இராசரத்தினம் அவர்களின் மகள் வசந்தி எனக்காகப் பெற்றுக் கொண்டார். கிழக்குப் பல்கலைக்கழக சிரேஸ்ட விரிவுரையாளர் அருட்தந்தை அ.அ.நவரத்தினம் (வ.அ.வின் மகன்) விழாவில் சிறப்புரையாற்றினார்

நூல் வெளியீட்டு விழாவில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு பேசிய பேராசிரியர் எம்.ஏ.நுஃமான் இந்த விருதுக்கு எம்.ஏ.ரஹ்மான் மிகவும் பொருத்தமான ஒருவர் என்று என்னைச் சிலாகித்து பேசியது எனக்கு மகிழ்ச்சி தந்தது.

பீர் முகம்மதுவின் எழுத்தில் வெளிவந்த அந்த நூலை பேஜஸ் புத்தக இல்லம் பதிப்பித்து வெளியிட்டது. அதன் உரிமையாளர் அக்கரைப்பற்று சிராஜ் மஸ்ஹூர். அவர் 25.11.2023 இல் சென்னை வந்து சந்தித்து பேசி மகிழ்ந்து சென்றார்.

அக்கரைப்பற்று ஏயாரெம்.சலீம், பி.எஸ் மீரா போன்றவர்களும் என்னுடன் மிக்க நெருக்கத்தில் இருந்தவர்கள். 1962இல் சாகித்திய மண்டல பரிசு பெற்ற ஏயாரெம் சலீமின் ஈழத்து முஸ்லிம் புலவர்கள் என்ற நூல் எனது ரெயின்போ அச்சகத்திலேதான் அச்சிடப்பட்டது.

வித்துவத்தீபம் அருள்வாக்கி அப்துல் காதர் ஞாபகார்த்தமாக அருள்வாக்கி நேசன் விருது- 2022 எனக்கு கிடைத்தது

கண்டி தெல்தோட்ட ஊடக மன்றம் ஏற்பாடு செய்த விழாவில் எனது இலங்கை நண்பன் ராமன் அந்த விருதைப் பெற்று எனக்கு அனுப்பி இருந்தார்.

பீர்முகம்மது எழுதிய இரண்டு நூல்கள் வெளியான பின்னர் இலங்கையில் நான் மேற்கொண்ட இலக்கிய செயற்பாடுகள் மீண்டும் பேசப்படலாயின என்பதன் அடையாளமே இந்த நிகழ்வுகள்.

இன்றைய தலைமுறையினரிடையே என்னையும் எனது இலக்கிய முனைப்புகளையும் வெளிக்கொண்டுவர இக்கவிஞர் காரணமாயிருத்தார் என்பதைச் சொல்வதில் என் மனம் பேருவகை கொள்கின்றது.

பீர்முகம்மது அவர்கள் இன்றைய இலக்கியச் சூழலில் மிகவும் அறியப்பட்டவராக இருக்கிறார் என்பது எனக்கு மகிழ்ச்சி தருகிறது.

கவிதை, கட்டுரை, சிறுகதை, ஆய்வு, விமர்சனம் என்று அவர் இயங்கி வருவதை நான் அறிவேன். வாரத்துக்கு இரண்டு முறையாவது சிலவேளைகளில் தினமும் அவரோடு தொலைபேசியில் உரையாடுவேன். அவர்பற்றி இன்னும் எழுதலாம்.

அண்மைக்காலத்தில் சூம் நிகழ்ச்சிகளில் அவரின் உரைகள் பலவற்றைக் கேட்டு மகிழ்ந்திருக்கிறேன்.

இவர்போன்று நன்றியும் விசுவாசமும் உள்ள இலக்கிய ஆளுமை ஒருவர் எனது இளம்பிறையிலே சுமார் அறுபது வருடங்களுக்கு முன்னர் அறிமுகமானார் என்பது எத்தகைய பெருமகிழ்ச்சியை என்னுள் ஏற்படுத்துகின்றது.

இன்று வாழும் எழுத்தாளர்களில் எஸ்பொவின் இலக்கியம்பற்றி தெளிவாகவும் நுட்பமாகவும் அறிந்தவர் ஏ பீர் முகம்மது அவர்களே என்று சான்று பகர்கின்றேன். அவர் எஸ்பொபற்றிய விவரங்களை விரல் நுனியில் வைத்திருப்பவர். எதைக் கேட்டாலும் ஒரு நொடியில் கூறிவிடுவார். நான் நூலுக்குள் சென்று அறிய வேண்டிய விவரங்களை அவரிடம் பேசித் தெரிந்து கொள்வேன். அந்த அளவுக்கு அவர் அறிந்து வைத்துள்ளார் என்பது உண்மையாகும்.

அவரின் எழுத்துப் பணியும் நன்றி விசுவாசமும் இன்றைய இளம்தலை முறையினருக்கு சிறந்த முன் னெடுப்பாகத் திகழும் என்று நான் விசுவாசிக்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம்.ஐ.அப்துல் ஜப்பார்

# ஏ.பீர் முகம்மது : கல்விப் புலத்தில் அவரின் பங்களிப்புகள்

ஏ. பீர்முகம்மது அவர்கள் மிக மதிநுட்பம் வாய்ந்த ஒருவர். பேச்சாற்றல் மிக்கவர். அவரது பேச்சுக்கள் எப்பொழுதும் சுவை தரக் கூடியவை. தெளிவான மொழிப் பயன்பாடு அவரது சிறப்பம்சமாகும். சிறந்த கல்வி வளவாளர். கசக்கும் கணித பாடத்தை சுவைக்கும் கரும்பாகக் கற்பிப்பதில் பெயர் பெற்றவர்.

கல்விமான்களும் பேராசிரியர்களும் அவரின் நெருங்கிய நண்பர்கள். முப்பத்தாறு வருடங்களுக்கு மேலாக கல்வித் துறையில் பெரும் பங்களிப்புச் செய்தவர். கணித ஆசிரியராக நியமனம் பெற்று உதவி அதிபராக பிரதி அதிபராக கடமையாற்றி தான் கல்வி கற்ற அதே பாடசாலையில் கல்முனை ஸாஹிரா தேசிய பாடசாலையில் அதிபராகவும் உயர்ந்தவர். கல்விப் பின்னணி கொண்ட குடும்பத்தில் பிறந்து வளர்ந்தவர். இவரது தந்தை சாய்ந்தமருது கரைவாகு தெற்கு உள்ளூராட்சி சபையில் ஒரு உறுப்பினராக இருந்தவர். கல்முனை ஸாஹிரா கல்லூரி, சாய்ந்தமருது அல்ஜலால் வித்தியாலயம், சாய்ந்தமருது அல்கமறூன் வித்தியாலயம் ஆகிய மூன்று பாடசாலைகளின் தோற்றத்திற்கும் தொடர் வளர்ச்சிக்கும் காரணமாக இருந்தவர்களில் இவரின் தந்தை முக்கிய மானவர். இவரின் மூத்த சகோதரரான மருதூர் மஜீது அவர்கள் கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளராக பதவி வகித்ததுடன் கிழக்கு மாகாண கல்வி அமைச்சில் கலாசார பணிப்பாளராகவும் கடமை ஆற்றியவர். பண நெருடல் காரணமாக விரைவான கல்வி மற்றும் பதவி உயர்வுகளை பீர்முகம்மது அவர்கள் பெற முடியாதிருந்தார். ஆயினும் தாமதமாகவேனும் உயர் கல்வியும் பதவிகளும் பெற்றவர். பேராதனைப் பல்கலைக்கழக பட்டதாரியான அவர் பட்டமேற் கல்வி டிப்ளோமா கல்வி முகாமைத்துவ டிப்ளோமா மற்றும் உளவியல் டிப்ளோமா ஆகிய பட்டங்களைப் பெற்றவர்,

அவருக்கு வாய்க்கப் பெற்ற வாசிப்பு மீதான ஆர்வம் பல்கலைக் கழகத்தில் விரிவுரையாளராகப் பணியாற்றும் தன்மை கொண்டது. ஆனாலும் அது போன்ற பதவிகளை அவரால் அடையமுடியவில்லை. எனினும் கல்விப் பணியில் இருந்து அவர் பின்வாங்கியதில்லை.



தொழில்முறை ஓய்வில் இருந்தும்கூட முன் பள்ளி ஆசிரியர்களைப் பயிற்றுவிக்கும் வளவாளராக இன்றுவரை அவர் பணியாற்றி வருகிறார்.

3-5 வயதுக்கு இடைப்பட்ட குழந்தைகளுக்கான உளவியல் சார்ந்து செயல் நூல் ஒன்றை வடிவமைப்பதற்காக அமைக்கப்பட்ட முதன்மைநிலை - 1 க்கான குழந்தை உளவியல் செயல்முறை நூலாக்க ஆலோசனைக் குழு உறுப்பினராக இருந்தவர்.

தாம் - 1 மாணவர்களுக்காக "அனுபவம் பெறுவோம்" என்ற செயல் நூலை எழுதியவர்.

க.பொ.த (உ/த) மாணவர்களுக்காக "கருது கோள்" என்ற அளவையியலும் விஞ்ஞானமும் பாடத்துக்கான நூல் ஒன்றையும் வெளியிட்டவர்.

ஏ. பீர் முகம்மது அவர்கள் 1989 தொடங்கி முதலாந்தர அதிபர் பதவியில் பதினெட்டு வருடங்கள் கடமையாற்றியதுடன் தொலைக்கல்வி போதனாசிரியர் பதவியில் அமர்ந்து சுமார் ஆறு வருட காலங்கள் ஆசிரியர்களை பயிற்றுவித்தவர்.

அரசாங்கம் 1999இல் புதிய கல்விச் சீர் திருத்தத்தை தெரிவு செய்யப்பட்ட மாவட்டங்களில் அறிமுகம் செய்தபோது சம்மாந்துறை வலயக் கல்வி அலுவலகத்தின் பிரதிக் கல்விப் பணிப்பாளராக் கடமை புரிந்தார். அவ்வேளை ஆசிரியர்களுக்கும் அதிபர்களுக்கும் கல்வித்துறை வளவாளர் என்ற வகையில் பெரும் பணியாற்றியவர்.

சுனாமி அனர்த்தம் 2004 டிசம்பரில் ஏற்பட்ட போது அவர் கல்முனை வலயக் கல்வி அலுவலகத்தில் உதவி கல்வி பணிப்பாளராக கடமை ஆற்றியவர். அவ்வேளை சர்வதேச நிறுவனமொன்றுடன் இணைந்து (action aid international) சியாத் பௌண்டேசன் அமைப்பின் ஊடாக கனவுப் பாடசாலை (Elated School) என்ற திட்டத்தை அமுல்படுத்த பெரிதும் உதவினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சர்வோதய இயக்கம் 2006 இல் சுனாமிக்குப் பின்னரான காலத்தில் பாடசாலை மற்றும் சமூகத்தைக் கட்டியெழுப்ப அரும்பணி ஆற்றியவர்களைத் தெரிவு செய்து தேசிய விருது வழங்கிக் கௌரவித்தது.

அவ்வாறு விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்ட வர்களில் பீர்முகம்மதும் ஒருவர். சர்வோதய இயக்கத் தின் தாபகத் தலைவர் டாக்டர் ஏ.ரி. ஆரியரத்னா அவர்களால் விருது வழங்கப்பட்டது.

2006ஆம் ஆண்டு வடக்கு கிழக்கு மாகாணங் கள் இணைந்திருந்தன. எனவே வடக்கு கிழக்கு மாகாணத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி தமிழ் முஸ்லிம் இனங்களிலிருந்து இவர் ஒருவர் மாத்திரமே இவ் விருதுக்கு தெரிவு செய்யப்பட்டிருந்தார். ஏனைய மாகாணங்களைப் பிரதிநிதித்துவப்படுத்திய மூன்று பிரதேச கல்விப் பணிப்பாளர்கள் உட்பட ஏழு பேர் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்கள் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

தான் கல்வி கற்ற பாடசாலையான கல்முனை ஸாஹிரா கல்லூரியின் அதிபராக 1999 இல் நியமிக்கப் பட்டார். அவரின் நிர்வாகத்திறன் அதிபர் பதவியின் ஊடாக நிரூபணமாக அக்காலம் போதுமானதாக இருந்தது.

தரம்- 6 இலிருந்து உயர் தர விஞ்ஞானம் வரை யான வகுப்புகளில் 2000 க்கு மேற்பட்ட ஆண் மாணவர் களை மட்டுமே கொண்டிருந்த ஒரு தேசியப் பாடசாலை யாக கல்முனை ஸாஹிரா கல்லூரி அப்போது திகழ்ந்தது. நூற்றுக்கு மேற்பட்ட ஆசிரியர்கள் கடமை புரிந்தார்கள். நாடு முழுவதும் இருந்து நூற்றி ஐம்பது மாணவர்கள் விடுதியில் தங்கியிருந்து கல்வி கற்றார்கள். வருடந்தோறும் இலங்கையின் தேசிய பல்கலைக்கழகங்களுக்கு நூற்றுக்கு மேற்பட்ட மாணவர்களை அனுப்பும் புகழ் மிக்க கல்லூரியாக கல்முனை ஸாஹிரா புகழ் பெற்று விளங்கியது.

ஸாஹிராவின் 69 வது வருட பூர்த்தியை முன்னிட்டு முன்னாள் அதிபர் என்ற வகையில் "நவமணி" பத்திரிகை 16.11.2018 இல் பீர் முகம்மது அவர்களை நேர்காணல் கண்டது.

குறிப்பிட்ட நேர்காணலில் அவரது அதிபர் காலத்தைய கல்விப் பணிகள் தொடர்பில் கேட்கப்பட்ட கேள்வியும் பதிலும் பின்வருமாறு.

கேள்வி :

கல்முனை ஸாஹிரா கல்லூரியில் 2000 ஆண்டில் பதவியில் இருந்த அதிபர் நீங்கள். அப்படி யாயின் உங்கள் காலத்தில் என்ன நடந்தது?

பதில் :

நான் ஒரு வருடத்திலும் 90 நாட்கள் குறைவான காலமே அக்கல்லூரியின் அதிபராக பதவி வகித்தேன். ஆனாலும் உற்சாகமாக இயங்க முடிந்தது.

சாதாரண மற்றும் உயர்தர பரீட்சை முடிவுகள் சிறப்பாக அமைந்தன. கல்லூரி வரலாற்றில் முதன் முறையாக க.பொ.த உயர்தர பரீட்சையில் (1999 ஆகஸ்ட்) யூ.எல். முகம்மது நியாஸ் என்ற மாணவன் விஞ்ஞான உயிரியல் பிரிவில் 4 ஏ சித்தி பெற்றதுடன் மாவட்ட மட்டத்தில் முதலிடத்தையும் பெற்று சாதனை புரிந்தார். அம்மாணவனைப் பாராட்டி கொழும்பில் எனது தலைமையில் விழா எடுக்கப்பட்டது. அமைச்சர் எம்.எச்.எம்.அஷ்ரப் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு சிறப்பித்தார்.

தேசிய ரீதியாக நடைபெற்ற 15 வயதுக்குட்பட்ட பாடசாலை மென்பந்து கிரிக்கெட் போட்டியின்போது கொழும்பு ரோயல் கல்லூரி, நீர்கொழும்பு ஸ்ரெலா மேரிஸ் கல்லூரி போன்ற கிரிக்கெட் ஜாம்பவான்களை தோற்கடித்து முன்னேறி 22.08.2000இல் நடைபெற்ற இறுதிப் போட்டியில் எமது கல்லூரி தேசிய சாம்பியன் ஆனது.

அகில இலங்கை தமிழ் மொழி தின விழா 28.07.2000 இல் நடைபெற்றது. அதில் திறந்த போட்டி (குழு) முஸ்லிம் பிரிவில் எமக்கு முதல் இடம் கிடைத்தது. 27 வருடங்களுக்குப் பின்னர் இதுபோன்ற வெற்றி கிடைத்தது.

மாணவர்களின் எழுத்தாக்க முயற்சிகளுக்காக கையெழுத்து சஞ்சிகைப் போட்டி ஒழுங்கு செய்யப் பட்டது. 348 சஞ்சிகைகள் தெரிவு செய்யப்பட்டு 17.06.2000 இல் கண்காட்சி நடைபெற்றது. அமைச்சர் அஷ்ரப் பிரதம விருந்தினராகவும் பிரதி கல்வி அமைச்சர் ஏ.எல்.எம். அதாவுல்லா கௌரவ விருந்தினராகவும் கலந்து கொண்டனர். பெருந்தொகையிலான கையெழுத்துச் சஞ்சிகைகள் இப்பிரதேசத்தில் முன்னர் இவ்வாறு காட்சிப்படுத்தப்படவில்லை என்பதனாலும் அமைச்சர் கள் கலந்து கொண்டதினாலும் இக்கண்காட்சி முக்கியத்தும் பெறுகின்றது.

பள்ளிவாசல் புனரமைப்புப் பணிகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டன. தொலைத்தொடர்பு விடயங்களில் கவனம் செலுத்தப்பட்டது. கல்லூரிக்கென தனியான தபால் பை போட்டோ பிரதி இயந்திரம் போன்றவை பெறப்பட்டன. சாதனைகளின் எண்ணிக்கை நாட்களின் எண்ணிக்கையில் தங்கியிப்பதில்லை என்பது நான் பெற்ற அநுபவம்.

மேலுள்ள கேள்வியும் பதிலும் அதில் உள்ள உள்ளடக்கங்களும்

கல்லூரியின் நிர்வாக மற்றும் கல்வி அபிவிருத்தி தொடர்பாகவும் இணைப்பாடவிதான செயற்பாடுகள் தொடர்பிலும் அவர் ஆற்றிய பணிகளுக்குச் சான்றாக அமைகின்றன.

அவரின் கல்வி தொடர்பான சேவையும் தேவை யும் பாடசாலை மட்டத்துக்கு வெளியிலும் உணரப்பட்டது.

2005 இல் கல்முனை கோட்டக் கல்வி அதிகாரியாக நியமனம் பெற்றார். தமிழ் தினப் போட்டிகள் விளையாட்டுப் போட்டிகள் என்பன புது மெருகு பெற்றன.

புதிய கல்விச் சீர்திருத்தம் நடைமுறைக்கு வந்த தரம்- 10 வகுப்பு மாணவர்களுக்கென நுண்முறை வினாக் கொத்துகள் ஆசிரிய ஆலோசகர்களைக் கொண்டு தயாரிக்கப்பட்டு சிடி மூலமும் நூலாக்க முறையிலும் தயாரித்து பாடசாலைகளுக்கு விநியோகம் செய்யப் பட்டன.

கோட்டமட்ட விளையாட்டுப் போட்டிகள் தனியார் மயப்படுத்தப்பட்டு ஒழுங்கமைக்கப்பட்ட போட்டியாக மாற்றம் கண்டது.

ஏ.பீர் முகம்மது அவர்கள் பாடசாலைகளோடும் கல்வித் துறை உயர் அலுவலர்களோடும் இன்றும் தொடர்பில் இருந்து வருகின்றார்.

அவரின் கல்விப்பணி இன்றும் தொடர்கின்றது என்பது மகிழ்ச்சியான செய்தியாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# எஸ்.பொன்னுத்துரை : முஸ்லிம்களுடனான உறவும் ஊடாட்டமும் இன நல்லுறவைப் பேசும் எழுத்தின் பிரதி

அருட்பணி அ. அ. நவரெத்தினம்

ஆய்வாளர், விமர்சகர், இலக்கிய விற்பன்னர் எனப் பன்முகப் பார்வை கொண்ட இரண்டாம் விசுவாமித்திரன் திரு ஏ. பீர் முகம்மது அவர்களைக் குறித்து வெளியாகும் "ஜீவநதி" சிறப்பிதழுக்கு அவரே எழுதிய "எஸ். பொன்னுத்துரை : முஸ்லிம்களுடனான உறவும் ஊடாட்டமும்" எனும் நூல் தொடர்பில் என் கருத்துகள் இங்கு பகிரங்கமாகின்றன

பாடசாலைக் காலமுதலே வாசிப்பின்மீது கொண்ட தீராக் காதலால் உந்தப்பட்டு தமிழ் இலக்கிய வெளியினுள் நீச்சலடிக்க முனைந்த திருவாளர் பீர் முகம்மது பலரையும் போன்று ஒரு சிலரின் எழுத்துத் தாக்கத்தால் கவரப்பட்டார். ஒன்பதாம் தரத்தில் கற்கின்றபோதே "இளம்பிறை" சஞ்சிகையினை வாசிக்கின்ற வாய்ப்பினைப் பெற்ற எழுத்துலப் படைப்பாளி அவர்.

அவர் தனது அனுபவத்தினைப் பகிர்கின்றபோது "இளம்பிறையில் எழுதிய பலருள் எஸ். பொன்னுத்துரையும் ஒருவர். அவரின் எழுத்துக்களால் மிகவும் கவரப்பட்டேன், பின்னாளில் அவரைப்போன்று எழுதவும் முயன்றேன். என்னைக் குறித்து "வரலாற்றில் வாழ்தல்" என்கிற அவரது சுயசரிதை நூலில் அவரிடம் எழுத்துப் பயின்றவர்கள் எனும் பட்டியலில் தன்னையும் இணைத்துக் கொண்டமை மகிழ்ச்சி அளிக்கின்றது"என்கிறார்.

பீர்முகம்மது அவர்களின் தாயும் தந்தையும் தமிழ் இலக்கிய ஈடுபாடு கொண்டவர்கள் என்பதை அறிய முடிகின்றது. கம்பன் வீட்டுக் கட்டுத்தறி போன்று அவரது இலக்கிய ஆர்வமும் சிறுவயது முதலே அவரில் சூழ்கொண்டிருந்தது.

அவர் தனது கல்விப் பணிகளுக்கும் அப்பால் தன்னுள் மையம் கொண்டிருந்த இலக்கியப் பணியில் விருப்பத்துடன் செயற்பட்டார். கட்டுரைகள், ஆய்வுகள், திறன் நோக்கு போன்றவற்றில் அதிக ஆர்வம் கொண்டவராவதால் அவை அவரது படைப்புக்களில் தனியிடம் பெறுகின்றன. பல்வேறுபட்ட ஆய்வரங்குளில் உள்ளூரிலும், வெளிநாடுகளிலும் ஆய்வுக் கட்டுரைகளை படித்ததோடு மட்டுமல்லாது அவற்றிற்கான பாராட்டினையும் பெற்றுள்ளார்.

பல விருதுகளை அவர் பெற்றிருந்தாலும் அவற்றினால் மயங்கி மதியிழந்திடாது இன்றுவரையிலும் தனது ஆக்க இலக்கியம் மற்றும் ஆய்வுப் பணிகளில் அதிக அக்கறையுடனும், சிரத்தையுடனும் ஈடுபடும் ஒருவராக இலக்கிய பரப்பில் அறியப்படுவராக பீர் முகம்மது அவர்கள் திகழ்வது மகிழ்வினைத் தருகிறது. அதுமட்டுமல்லாது "செங்கதிர்", "ஞானம்" அட்டைப்படத்தை அலங்கரித்த எழுத்துச் சிற்பியுமாவார். இன்று "ஜீவநதி" அவருக்கெனத் தனிச் சிறப்பிதழொன்றை வெளியிட்டு மகிழ்கிறது.

பீர்முகம்மது எழுதிய எஸ். பொன்னுத்துரை முஸ்லிம்களுடனான





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறவும் ஊடாட்டமும் எனும் நூலினூடாக இச் சிறப்பிதழில் அவரைத் தரிசிக்க நான் விரும்புகிறேன்.

இக்கட்டுரையின் உள்ளடக்கங்கள் யாவும் எஸ். பொ பற்றிய நூலிலிருந்தே பெறப்பட்டவை என்பது குறிப்பிடத்தக்கது.

ஆசிரியரும் தமது கருத்துக்களை உறுதி செய்யும் வகையில் அவற்றை எஸ். பொ. வின் வரலாற்றில் வாழ்தல், இஸ்லாமும் தமிழும் இன்னும் பல நூல்கள், நபர்களை ஆதாரப்படுத்தி இவ்வாய் வினை மேற்கொண்டு உறுதி செய்துள்ளார் என்பது மேலும் நோக்கத்தக்கது.

எஸ். பொ. என்று சுருக்கமாக அறியப்படுகின்ற எஸ். பொன்னுத்துரை என்கிற இலக்கியவாதியினை அறியாதவர்கள் தமிழ் இலக்கியப் பரப்பினுள் இருக்கவே முடியாது. தமிழ் இலக்கியப் பரப்பினுள் தனக்கெனத் தனியிடத்தினைப் பதித்தவர். மொழிபெயர்ப்பு இலக்கியத்தினுள்ளும் நன்கு அறியப்படுகின்ற ஒருவர்.

எஸ். பொ. வின் முஸ்லிம் மக்களுடனான ஊடாட்டமானது அவரது சிறுபருவம் தொடங்கி ஆரம்பமான ஒரு விடயமாகும்.

யாழ்ப்பாணம் புனித பத்திரிசியார் கல்லூரியில் அவரது சிறுபராய வகுப்புத்தோழன் ரஹீம் கூடவே 1940களில் இது ஆரம்பமானது. அன்று தொடங்கிய முஸ்லிகளுடான ஊடாட்டம், நெருக்கம் பின்னர் அவரது பணிக்கால கம்பளை வாழ்விலும் மட்டக்களப்பு வாழ்விலும் இளம்பிறை ரகுமானுடனான நெருக்கத்தின் ஊடாக இன்னும் அதிகமாக வளர்ந்தது என்பது கூடுதல் சிறப்பாகும். அவரது நட்பு வட்டத்தினுள் அளவுக்கதிக மான முஸ்லிம் நபர்கள் கலந்திருந்தார்கள் என்பது அவரது வாழ்விலிருந்து நாம் அறிந்துக்கொள்ளக்கூடிய விடயமாகவுள்ளது.

முஸ்லிம் மக்களுடனான அவரது நெருக்க மானது இஸ்லாத்தை இன்னும் ஆழமாக அறியவும், அதனைக் குறித்த தேடலில் ஈடுபடவும் தூண்டியது. இந்தியாவில் தனது பட்டப்படிப்பினை மேற்கொள்கின்ற போது தனது ஆய்விற்காக "முஸ்லிம் இந்தியா" என்கிற தலைப்பினை தேர்ந்தெடுத்தமையானது இதற்கு சான்றாதரமாக அமைகிறது.

"நான் ஆயிரத்திற்கும் அதிகமான இஸ்லாமிய நூல்களைக் கற்றுள்ளேன். அறபுமொழியின் இயல்பு கள் பற்றியும் அறபுத்தமிழ் வளர்ச்சி பற்றியும் ஓரளவுக்கு ஆராய்ச்சியும் செய்துள்ளேன்" என்கிற அவரது வார்த்தைகள் இஸ்லாம் மற்றும் அச்சமூகத்தின் மீதான அவரது நேசிப்பினை எடுத்தியம்புகிறது.

முஸ்லிம் மக்களுடனான அவரது உறவின் சாட்சியாக அமைவது அவர் எழுதிய "இஸ்லாமும் தமிழும்"என்கிற நூலாகும். இந்நூல் 1975இல் வெளியீடு கண்டு, 2002இல் மீள்பதிப்பாக வெளிவந்தது.

இந்நூலானது முஸ்லிம்கள் தமிழுக்கு ஆற்றிய பங்களிப்பினை விலாவாரியாக எடுத்துரைப்பது மட்டுமல்லாது பல வரலாற்றுப் பிழைகளையும் திருத்திக் கொள்வதற்கு உதவியாகின்றது.

அதுமட்டுமல்லாது இலங்கை முஸ்லிம்களின் முழுமையான வரலாற்றினை அறிய அல்லது எழுத முற்படுகின்றவர்கள் இந்நூலினைத் தவிர்த்துவிட்டு செயற்பட முடியாத அளவிற்கு தகவல்களையும், தரவுகளையும் இந்நூல் கொண்டுள்ளது.

தனது பட்டப்படிப்பினை பூர்த்திசெய்த பிற்பாடு ஆசிரியராக கம்பளை ஸாஹிராக் கல்லூரியில் தனது பணியினை ஆற்றியபோது கிடைத்த முஸ்லிம்களின் நட்பினை தன் வாழ்வின் பேறாகவே போற்றுகின்றார்.

"பல்கலைக்கழக வாழ்க்கையிலும் எனக்கு பல முஸ்லிம் நண்பர்கள் வாய்த்தார்கள். ஆனாலும் இஸ்லாம் கற்பித்துள்ள சகோதரத்துவத்தின் மேன்மை களையும் அவர்கள் பயிலும் வாழ்க்கை முறையின் இங்கிதங்களையும் கம்பளையில் வாழ்ந்த காலத்திலே தான் என்னால் முதன்முறையாக அறிந்து அநுபவிக்க முடிந்தது. "சகன் சாப்பாடு"என்ற விசேட விருந்து முறை யையும் முதன்முதலில் கம்பளை வாழ்க்கையிலேயே அநுபவித்தேன்."

இக்கூற்றானது அவரது முழு இஸ்லாமியப் புரிதலுக்கும், முஸ்லிகளுடனான நட்பின் தொடக்கத் திற்கும் விதையாக அமைகிறது.

கம்பளைக் கற்பித்தலின் பிற்பாடு மட்டக்களப்பு மெதடிஸ்த மத்திய கல்லூரியின் ஆசிரியராகக் கடமை யேற்றுக் கொண்டார். அங்கு பணியாற்றிய காலத்தில் ஏராளமான முஸ்லிம் மாணவர்களின் நட்பினைப் பெற்றுக்கொண்டார். "வரலாற்றில் வாழ்தல்" "இஸ்லா மும் தமிழும்" என்கிற அவரது நூல்களில் முஸ்லிம் மாணவர்களின் குறிப்புக்கள் அதிலும் குறிப்பாக மெதடிஸ்த மத்திய கல்லூரியில் கற்றவர்கள் அதிக இடத்தினைப் பிடித்துள்ளார்கள்.

இம்மாணவர்களில் சிலர் அவரது இலக்கிய வாழ்விலும் அசையாத இடத்தினை கடைசிவரை பிடித்திருந்தார்கள் என்பது நோக்கத்தக்கதாகும்.

கவிஞர் நீலாவணனின் நட்பின் ஊடாகக் கிடைத்த முஸ்லிம் நட்புக்களைக் குறித்து பின்வருவாறு எழுதுகிறார்:

"நீலாவணனின் நட்பினாலே இளம் தலை முறையைச் சார்ந்த முஸ்லிம் எழுத்தாளர்களிடமிருந்து நான் நிறையக் கற்றேன். அவர்களுடைய பழக்கமும் அநுபவமும் என்னுடன் சேர்ந்திருக்காவிட்டால் முஸ்லிம் மக்களுடைய வாழ்க்கை அழகுகளை என்னாலே தரிசிக்க இயலாது போயிருக்கக்கூடும்."

இவ்வாறு அவரது வாழ்வில் பல முஸ்லிம் நட்புக்கள் இணைந்திருந்தார்கள். அவர்களை அவர் தனது வாழ்வின் உண்மை நட்புக்களாகவே என்றும் கொண்டாடினார்.

தனது ஆசிரியப் பணியினூடாக எங்கெங்கெல் லாம் சென்றாரோ அங்கெல்லாம் உள்ள தமிழ், முஸ்லிம் மாணவர்களுடன் நிறைந்த அன்பும், நட்பும் பாராட்டி எஸ். பொ. என்றும் அவர்களின் உள்ளங்களில் நிறைந் துள்ளார்.

வந்தாறுமூலை மத்திய கல்லூரி, காத்தான்குடி மத்திய கல்லூரி, ஏறாவூர் அலிகார் தேசிய பாடசாலை போன்றவற்றில் பணியாற்றிய காலங்களில் தனது இஸ்லாமிய, முஸ்லிம் உறவினை இன்னும் வளர்த்துக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டார்.

“அபூர்வ விசுவாசங்களும், நேசிப்புக்களும் பாசங்களும் எனக்கு மட்டக்களப்பு மாநிலத்தில் முஸ்லிம் மாணவர்களிடமிருந்து பூரணமாகக் கிடைத்தன. ஓர் உயரிய குரு விசுவாசப் பண்பு மட்டக் களப்பு மண்ணில் முஸ்லிம் சமூகத்தினால் உயிர்ப்புடன் வளர்க்கப்படுகின்றதென்பதை நன்றியுடன் பதிவு செய்கின்றேன்”என்கிற வார்த்தைகள் இந்நட்பின் உச்சத்தைத் தொட்டு நிற்கின்றன.

எஸ். பொ. வின் முஸ்லிம் நட்பின் ஊடாட்டத் தின் உச்சமாக காணப்படுவது அவருக்கும் இளம்பிறை ரஹ்மான் என அறியப்படுகிற எம். ஏ. ரஹ்மான் அவர்களுக்கும் இடையிலான உறவாகும். 1960களில் தொடங்கிய இந்நட்பானது இறக்கும்வரையிலும் அவர்கள் இருவருக்கும் இடையிலான பசுமை குறையாத தெவிட்டா இன்பமாகத் திகழ்ந்தது.

இளம்பிறை ரஹ்மானின் இலக்கியத்திற்கான பங்களிப்பு காலத்தால் மறக்க முடியாதவை. அதைக் குறித்து இன்னும் அதிகம் பேசலாம்.

கொழும்பு ஸாஹிராக் கல்லூரியில் நடை பெற்ற மாநாடனது எஸ். பொ. வையும் ரஹ்மானையும் இன்னும் ஆழமாக பிணைத்தது எனலாம்.

“ஸாஹிரா களத்திலே எஸ். பொவுக்கும் எம். ஏ. ரஹ்மானுக்கும் இடையே ஏற்பட்ட உறவு தமிழ் இலக்கிய கதியின் நவீன கட்டத்திலே பாரிய பங்களிப்புக்குச் காரணமாய் அமைந்திருக்கிறது”என்று பேராசிரியர் பொன் பூலோகசிங்கம் பதிவு செய்துள்ளார்.

இவர்கள் இருவரினதும் அபரிதமான உறவின் மேன்மைக்கு இலக்கியமும் எழுத்தும் பொதுக்காரணி களாய் அமைந்தன.

“என்னுடைய எழுத்தாற்றலைச் செப்பனிடவும் வளப்படுத்தவும் ரஹ்மானின் படைப்பாற்றலும் இலக்கிய நயப்பும் பெரிதும் உதவியிருக்கின்றன என்ற உண்மையை மிகுந்த நன்றிப் பெருக்குடன் இங்கு பொறித்து வைக்க விரும்புகின்றேன்”என்கிற எஸ். பொவின் வார்த்தைகள் அந்த உறவின் ஆழத்தை கோடிட்டுக் காட்டுகின்றது.

இந்த உறவில் நான் எனது தந்தை வ. அ. என அறியப்படுகின்ற வ. அ. இராசரத்தினத்தையும் நினைவு கூர்கின்றேன். ஏனென்றால் எஸ். பொ. மற்றும் இளம்பிறை ரஹ்மானுடன் அவர் மிகுந்த தோழமை பாராட்டியவர். அவர்களது உறவானது “அடுப்புக்கல்” உறவாகும். அவர்கள் இருவரையுமே எங்கள் வீட்டில் இன்றுவரை எஸ். பொ மாமா, ரஹ்மான் மாமா என்று அழைக்கும் பாரம்பரியம் உண்டு.

இந்த நட்பின் நீட்சியானது பின் நாட்களில் பல்வேறுபட்ட முஸ்லிம் நபர்களுடனும் பேராளர் களுடனும் இலக்கிய ஆளுமைகளுடனும் தொடர்ந்தது. அவர்களுள் குறிப்பிடத்தக்கவர்களாக எம்.ஏ.எம். சுக்ரி, வி.ஏ.கபூர், எம்.எச். குத்தூஸ், ஹாபிஸ் எம்.கே. செய்யத் அகமது, ஏ. முகம்மது சமீம், மானா மக்கீன், புலவர்மணி ஆ.மு.சரிபுத்தீன், ஜே.எம்.எம். அப்துல் காதிர், எஸ்.ஏ.ஆர்.எம். செய்யத் ஹசன் மௌலானா, இளங்கீரன், ஏ. இக்பால், எஸ்.எல்.எம். ஹனிபா, பி.எச். அப்துல் ஹமீத், ஏ.சி.எம். சுபியான், அஸாரியா நுபைல், சுஹைர் ஹமீது போன்றவர்களைக் குறிப்பிடலாம்.

இவர்கள் எல்லோரும் ஏதோவொரு விதத்தில் எஸ். பொவுடன் தங்கள் உறவினைப் பேணியவர்கள்,

இங்கு குறிப்பிடப்படுவதுபோன்று இன்னும் பல முஸ்லிம்கள் அவரது வாழ்வுடன் பின்னிப் பிணைந்தவர் களாவர். இயல்பாகவே இடதுசாரிக் கொள்கைகளால் கவரப்பட்ட எஸ். பொ. தனது அரசியல் பயணத்திலும் அதன்பால் கவரப்பட்டார். முஸ்லிம் அரசியல்வாதிகளின் உறவில் கட்சி அரசியலுக்கு அப்பால் நட்பினைப்பேணி வந்தார் என்பது நோக்கத்தக்கது.

அவர்களுள் கலாநிதி பதியுத்தீன் மகுமூத், மூதூர் ஏ.எல்.ஏ. மஜீது, டாக்டர் பரீத் மீராலெப்பை, எம்.எம். முஸ்தபா, எம்.ஏ. அப்துல் மஜீத், ஏ.எச்.எம். அஸ்வர், இசட்.எம். மசூர் மௌலானா, எம்.எஸ். காரியப்பர் என பட்டியல் தொடர்கிறது.

முஸ்லிம்களுடன் நெருக்கமான உறவினையும் நட்பினையும் பேணிய எஸ்.பொ. அவர்கள் முஸ்லிம்கள் தனித்துவம் வாய்ந்த இனமாகக் கொள்ள வேண்டு மென்பதில் மிகவும் உறுதியாகவிருந்தார்.

“முஸ்லிம்களினுடைய தனித்துவம் என்கிற அடையாளம் மதம் சார்ந்து பெறப்படுகின்றது என்பது உண்மை. இதனை நான் அழுத்திச் சொல்வதற்கு காரணம் இருக்கிறது. முஸ்லிம்கள் மொழி சார்ந்த அடை யாளத்தினை என்றும் முதன்மைப்படுத்துவதில்லை. அவர்கள் இஸ்லாத்தை ஏற்றுக்கொள்ளும்போது அறபு மொழியின் மேன்மையினையும் புனிதத்தையும் ஏற்றுக்கொள்கிறார்கள். எனவே நாடு சார்ந்தும் மொழி சார்ந்தும் இனம் சார்ந்தும் கோரப்படும் அடையாளங் களிலும் பார்க்க மதம் சார்ந்த அடையாளத்தையே முதன்மைப்படுத்துகிறார்கள் என்பது அங்கீரிக்கப்பட்ட உண்மை. எனவே மொழி சார்ந்த அடையாளங்களை அடிப்படையாகக் கொண்ட நாடுகளிலே முஸ்லிம்கள் அறபு மொழியின் வழிபாடு காரணமாக தனி இனமாகக் கருதப்படுதல் மகா நியாயமானது.”

முஸ்லிம் மக்கள் ஊடான தனது தொடர்பினால் அவர்கள் மட்டில் மிகுந்த பேரன்பும் நட்பும் பேணிய எஸ். பொன்னுத்துரை அவர்கள், குறித்த தனது தேடலையும், மரியாதையையும் வாழ்வின் இறுதிவரை பேணினார் என்பது ஈண்டு நோக்கத்தக்கது.

இந்நூலின் ஊடாக நூலாசிரியர் ஏ.பீர் முகம்மது அவர்கள் எஸ். பொ. வின் முஸ்லிம் மக்களுடனான உறவையும் ஊடாட்டத்தையும் தெளிவாக வெளிக் கொணர்ந்துள்ளார். பலரும் அறியாத பல விடயங்கள் நமக்குத் தெரிய வருகின்றன. அதன்மூலம் ஏ.பீர்முகம் மது என்றும் நமது பாராட்டுக்குரியவராகிறார்.

எஸ்.பொவின் முஸ்லிம் நேச உறவு பற்றி மட்டு மல்ல பீர்முகம்மது என்ற இலக்கியச் செயற்பாட்டாளரின் இனங்களுக்கிடையிலான நல்லுறவுக் குரலின் பிரதியாகவும் இந்நூல் அமைந்துள்ளது.

இதுபோன்ற பணிகளே இன்றைய நமது தேவையுமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெற்காசிய இலக்கிய விழா - 2019 புது டில்லியில் நடைபெற்றபோது தற்செயலாக பீர் முகம்மது அவர்களைச் சந்தித்தேன்.

சார்க் அமைப்பின் உபநிறுவனமான சார்க் நாடுகளுக்கான எழுத்தாளர்கள் மற்றும் இலக்கியத்திற்கான அமைப்பு(FOSWAL) அப்பெருவிழாவினை ஏற்பாடு செய்திருந்தது.

சி.டி.தேஸ்முக் கேட்போர் கூடத்தில் 2019 ஒக்டோபர் 18,19,20 ஆகிய மூன்று தினங்கள் நடைபெற்ற அவ்விழாவின் முதல் அமர்வில் ஏ. பீர் முகம்மது அவர்கள் கலந்து கொண்டு ஆங்கிலத்தில் தனது கவிதையைப் படித்தார்,

விழாவின் தொடக்க நிகழ்வும் அதனைத் தொடர்ந்த நிகழ்ச்சிகளும் ஆச்சரியம் தருவதாக அமைந்தன. தெற்காசியாவின் தேர்ந்தெடுக்கப்பட்ட இலக்கியவாதிகளால் நிகழ்வுகள் மெருகேறி இருந்தன.

அங்குரார்ப்பண நிகழ்வு பார்ப்பதற்கு உற்சாகம் தருவதாக அமைந்திருந்தது. அலங்கரிக்கப்பட்டு நீர் நிரப்பிய சாடிக்குள் பல வண்ண மயமான ரோஜா இதழ்களை மாண்புமிகு அதிதிகள் மிதக்கிவிட்டனர். அது செல்வத்தையும் செழிப்பையும் அடையாளப்படுத்தும் ஒரு குறியீடாகும்.

இப்படியான சாடிகளை வீடுகளிலும் புனித தலங்களிலும் வழமையாக நாம் காணலாம்.

ஊசி விழுந்தால் ஓசை கேட்கும் அமைதியான பவுத்திரமான சூழ்நிலை. கேட்போர்கூடத்தில் நிலவிய அமைதி இந்த மாபெரும் தெற்காசிய இலக்கிய விழாவில் பங்கேற்க வந்திருந்த எங்கள் ஒவ்வொருவருக்கும் மன ஆறுதலைக் கொண்டு வந்தது.

இந்த ஆறுதலை இன்னும் மிகைக்கும் வகையிலும் அதன் அழகையும் வண்ணத்தையும் எடுத்துக்காட்டும் வகையிலும் அஞ்சலி பனிஷ்வால் என்ற அழகிய சிறுமி பாடிய பாட்டு அமைந்தது.

இந்தச் சூழ்நிலை விழாவில் கலந்து கொண்டவர்களிடையே நாமெல்லாம் அற்புத பேறு பெற்றவர்கள் என்ற உணர்வைத் தூண்டியது. இந்தப் பிரபஞ்சத்தில் நாங்களெல்லாம் ஒரு அங்கம் என்பதை கூட்டத்தின் கைதட்டல் வெளிப்படுத்தின.

தொடர்ந்து முக்கிய பிரமுகர்களின் உரைகளும் அனைத்துலகப் பெறுமதி கொண்ட விருதுகள் வழங்கும் நிகழ்வுகளும் இடம்பெற்றன.

இந்தியாவுக்கான இலங்கை தூதுவர் மேன்மை தங்கிய ஒஸ்ரின் பெர்ணான்டோ மற்றும் இந்தியாவுக்கான மாலைதீவு தூதுவர் மேன்மை தாங்கிய ஐசத் முகம்மது டிடி ஆகியோர் கௌரவ அதிதிகள் என்ற முறையிலான தங்கள் உரையினை நிகழ்த்தினர்.

சார்க் நாடுகளின் இலக்கியச் செயற்பாடுகள் பற்றிய கலந்துரையாடலின்போது பல்வேறு சர்வதேச விருதுகள் பெற்றவரும் பல்வேறு அமைச்சுகளில் பல உயர்பதவி வகித்தவருமான சுனில் சரத் பெரேரா இலங்கை தொடர்பில் உரையாற்றினார்.

அனைத்துலக அமைதி நட்சத்திர விருது அமைப்பின் ஸ்தாபகர் ஸ்ரீமத் அஜித் கோர் அவர்களுக்கு வழங்கப்பட்டது.

பிற்பகல் 3 மணிக்கு ஆரம்பமான முதலாவது நிகழ்வுக்கு பங்களாதேசத்தைச் சேர்ந்த முகம்மது

# தலைசிறந்த இலக்கிய ஆளுமை

ஆங்கிலத்தில் : பிரதீப் குணசேன - தமிழில் : சா.திருவேணிசங்கமம்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூருல் /ஹதா தலைமை வகித்தார். ஐந்து சார்க் நாடு களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஐந்து படைப்பாளிகள் தங்கள் எழுத்துக்களின் தேர்ந்தெடுத்த ஒரு படைப்பை கூடியிருந்த கேட்போருக்கு வாசித்துக் காட்டினார்கள். அவர்கள் பாட்டல் நடேறி (ஆப்கானிஸ்தான்).ஏ.ஜே. தோமஸ் (இந்தியா) ஏ.பீர்முகம்மது (இலங்கை) ஆதம் ஸாகிர் (மாலைதீவுகள்) முகம்மது நூருல் /ஹதா (பங்களாதேஷ்) ஆகியோராவர்.

மனதை கவரும் பல இலக்கிய வாசிப்புகளைக் கேட்டுக் கொண்டிருக்கையில் ஒரு கவிதை எனக்கு பரவசத்தையும் சிலிர்ப்பையும் உண்டாக்கியது. அது வேறு யாருடைய கவிதையும் அல்ல. நமது பீர்முகம்மதுதான் அங்கு நின்று கவிதை மழை பொழிந்து கொண்டிருந்தார்.

"தண்ணீரின் மரணம்" மற்றும்

"காலடியில் போர்" ஆகிய தனது இரண்டு கவிதைகளை அவர் அங்கு வாசித்தார். அவரது கவிதை வசன கவிதை வடிவில் பேச்சோசை விரவ எழுதப் பட்டிருந்தது.

மனித இனமும் மற்றும் விலங்குகளும் தாவரங் களும் நீருக்காக சவால்களை எதிர்நோக்கிப் போராடு கின்றன. அதனால் நாங்கள் ஒன்றிணைந்து நீர்ச் சக்கரத்தை புதுப்பிக்க அவசியமான மரங்களை நட வேண்டும் என்று கவிஞர் வலியுறுத்துகிறார்.

நாங்கள் வாழாவிருந்தால் ஏற்படப் போகும் பாதக விளைவுகளை எடுத்துக் காட்டுகின்றார்.

என்ன விலை கொடுத்தாயினும் ஓய்வில்லாம லும் முடிவில்லாமலும் தண்ணீருக்காக யுத்தம் ஒன்றை நடத்துவதற்கு நாங்கள் தள்ளப்பட்டிருக்கிறோம் என்றார்

பொருத்தமான கவிதை வரிகளில் தர்க்க ரீதியாக அவர் தனது வாதத்தை முன்வைக்கிறார்.

"நாட்டு ஒவ்வொரு நாளும் ஒரு மரம்" என்று மரங்களை நட்டு வாழ வாசகர்களுக்கு சொல்லுகிறார்.

கடைசி அடியில் மழைநீர்ப்பாசனம் என்ற கருத்தை முன்வைத்து தனது கருத்தை சுருக்கமாக உரைக்கிறார்.

மழைநீர் சேர்த்து
வாழ்வினை மாற்று

என்று தனது கவிதையை முடித்தார்.

தன் கவிதைகளால் வாசகர்களின் கவனத்தைப் பெரிதும் ஈர்த்தார்.

காலடியில் போர் என்ற

இரண்டாவது கவிதை தன்னிலை விவரிப்புப் பாங்கில் அமைந்திருந்தது.

அக்கவிதையில் கவிஞர் தான் கண்ட ஒரு கனவை விவரிக்கிறார். அக்கனவு அவ்விடத்திற்கு மாத்திர மில்லாது முழு உலகத்திற்கு உரியதாகவும் விரிகிறது.

கவிதையில் வரும் உலகத்தை நோக்குகையில் என்ற அடிகளால் இதனை நாம் விளங்கிக் கொள்ளலாம்.

போர் உலகின் எல்லா இடங்களிலும் பல்வேறு வடிவங்களில் நடந்து கொண்டிருக்கிறது என்ற அசாதாரண கருத்தை முன்வைத்து அதை விளக்கு கிறார்.

யுத்தம், சண்டை, முரண்பாடு, கைகலப்பு என்று வெவ்வேறு பெயர்களால் அவை அழைக்கப்பட்டாலும் ஒரே பார்வையில் அவையெல்லாம் போர்தான். பெயர் களும் அணிந்திருக்கும் ஆடைகளும்தான் வேறு பாடானது. வேறுவேறு கோலங்கள். அவ்வளவுதான்.

கவிஞர் அடுத்த அடியில் ஆட்சியாளர்கள் தேசிய பாதுகாப்பு என்ற போர்வையில் போர் ஏற்பாடு களில் ஈடுபட்டு தங்களின் அதிகாரத்தை நிலைநிறுத்த பாடுபடுகின்றனர் என்றும் கூறுகின்றார்.

மேலும் அவர் தனது கவிதையினூடாக ஆசியா, ஆப்பிரிக்கா,அமெரிக்கா, ஐரோப்பா ஆகிய இடங்களின் கள நிலவரங்களை ஆராய்கிறார். ஆயுத உற்பத்தி, சிறுவர்களை படையில் சேர்த்தல், மனிதக் கேடயங் களை உருவாக்குதல் போன்றவற்றையும் பேசுகிறார்.

"ஒன்றாக அணிதிரள எங்களுக்கு உரிமை இருக்கிறது. நாங்கள் குரலை எழுப்புவோம். அக்குரல் இமாலய முகடெல்லாம் எதிரொலிக்கட்டும்" என்று கூறி "ஒன்றிணைந்தால் உயர்ச்சி. பிளவுபட்டால் வீழ்ச்சி" என்று ஓங்கி ஒலித்து கவிதையை முடிக்கிறார்.

அவரின் இலகுவான ஆழமான கவிதை வாசிப்பால் கிளர்ச்சி அடைந்த என்னால் நெடுநேரம் அவரைப் பாராட்டாமல் இருக்க முடியவில்லை.

இது இலங்கைத் தாயின் பெருமைக்குரிய மகனான அவரின் வாழ்வில் நடந்த ஒரு மகிழ்வான தருணம் ஆகும். ஏனென்றால் பீர் முகம்மது தெற் காசியாவின் தலைசிறந்த இலக்கியவாதிகளிடையே தனது கெழுமிய சிறப்பை நிலைநாட்டி இருக்கிறார்.

பீர் முகம்மது என்னும் தமிழ் இலக்கிய மேதமையோடு ஓரிரு சொற்களை பகிரக்கூடிய சந்தர்ப்பமும் எனக்கு வாய்த்தது.

அவர் இலங்கை கிழக்கு மாகாணத்தில் அம்பாரை மாவட்டத்தில் கல்முனையில் இருந்து வந்திருந்தார். அவரோடு நடந்த உரையாடலில் அவரது கவிதையைப் பாராட்டி சில வார்த்தைகளைக் கூறினேன்.

இன்றைய உலகில் அவரைப் போன்ற எளிய வாழ்வும் உயரிய சிந்தனையும் கொண்ட மனிதரை காண்பது அரிது. அவரோடு நடந்த உரையாடலில் இருந்து அவரது அனுபவங்கள் அவரின் திறமைக்குக் காரணமாக உள்ளன என்பதை அறிந்து கொண்டேன்.

அவர் கல்முனையில் உள்ள பிரபல தேசிய பாடசாலையின் அதிபராகவும் பிரதிக் கல்விப் பணிப்பாளராகவும் கோட்டக் கல்விப் பணிப்பாளராகவும் மதிப்புமிக்க பணிகளைப் புரிந்துள்ளார்.

இதைவிட கலாபூஷணம் போன்ற விருதுகளை யும் பெற்றுள்ளார். பல படைப்புகளை எழுதி வெளி யிட்டுள்ளார். அவரின் கவிதைகளை உற்று நோக்குகிற போது அவை ஒரே நேரத்தில் இலகுவாகவும் ஆழமாக வும் இருக்கும் பெற்றியை எண்ணி வியக்கிறேன்.

அவர் இலக்கிய உலகின் அடையாளச் சின்னம். அவர் தனது ஊற்றுக்களை இந்த நிலத்தில் பாய்ச்சி அது வருங்காலத்தில் வளமாக மாற உறுதுணை புரிவார் என்று எதிர்பார்க்கிறேன்..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேராசிரியர் சி.மௌனகுரு

# விபுலாநந்த அடிகளும் முஸ்லிம்களும் என்ற நூல் பற்றிய குறிப்புகளோடு... ஏ.பீர்முகம்மது : மாணவனாகவும் வளர்ந்த மனிதனாகவும்

பீர்முகமதுவை நான் எப்போது கண்டேன்?

முதன்முதலாக...

எனக்கு அரசாங்கத்திலிருந்து 1966 இல் ஓர் அரசாங்க நியமனக் கடிதம் வந்தது.

பட்டதாரி ஆசிரியர் நியமனம். அப்போது எனக்கு வயது 23. மருதமுனை அல்மனார் மகா வித்தியாலயத்துக்கு ஆசிரியராக என்னை நியமித்திருந்தார்கள்.

கல்முனைக்கருகில் அது இருக்கின்றது என்று யாரோ சொன்னார்கள். மட்டக்களப்பில் நான் பிறந்திருந்தபோதும் கல்முனை எனக்குப் பரிச்சயமாகாத இடம். அந்தப் பக்கத்தில் யாரையுமே எனக்கு தெரியாது. மருதமுனை என்ற பெயரும் எனக்குச் சற்றுப் புதிதாக இருந்தது. ஆனால் என் தந்தையார் இவை எல்லாம் அறிந்திருந்தார். அது இஸ்லாமிய மக்கள் வாழும் கிராமம் என்று என்னிடம் கூறினார்.

அரச நியமனக் கடிதத்தோடு முதல் முதலில் கல்விக் கந்தோருக்குத்தான் சென்றேன். கல்முனைக் கல்வி அதிகாரியான. கபூர் எனக்கு இன்னொரு கடிதம் தந்தார்.

அது சாய்ந்தமருது மகா வித்தியாலயதுக்கான (தற்போது கல்முனை சாகிறாக் கல்லூரி) நியமனக் கடிதமாக இருந்தது.

மருதமுனையிலிருந்து மேலும் ஆறு ஏழு மைல் பிரயாணம். எப்படி அங்கு போக வேண்டும் என்றும் கபூர் எனக்குக் கூறினார். அதன்படி சென்று பாடசாலையில் அதிபரைக் கண்டேன்.

அதிபர் கே.எம்.அபூபக்கர். மன்னாரைச் சேர்ந்தவர். பல்கலைக் கழகப் பட்டதாரி. அந்தப் பாடசாலையில் க.பொ.த.சாதாரண தர வகுப்பு வரையுமே இருந்தது. பட்டதாரி ஆசிரியர்கள் போதிய அளவு இல்லாத காரணத்தால் உயர்தர வகுப்புகள் அப்போது ஆரம்பிக்கப்படவில்லை.

இரண்டு கலைப் பட்டதாரிகளும் இரண்டு விஞ்ஞான பட்டதாரிகளும் தான் இருந்தார்கள். அதிபரிடம் நேரசூசியைப் பெற்றுக் கொண்ட நான் வகுப்பறைக்குள் சென்றேன். அது க.பொ.த சாதாரண வகுப்பு (11ம் வருடம்) என்பது எனது ஞாபகம். அது ஒரு நல்ல வகுப்பு என்று கூறித்தான் அதிபர் அபூபக்கர் என்னை அங்கு அனுப்பினார்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டு பக்கமும் திறந்திருந்த வெட்ட வெளி வகுப்பறை. மாணவர்கள் "கசமுசா" என்று பேசிக் கொண்டே இருந்தார்கள். நான் உள்ளே சென்றதும் அமைதியானார்கள். என்னை அறிமுகம் செய்து கொண்டு பாடத்தை ஆரம்பித்தேன்.

அரசாங்க உத்தியோகத்தின் முதலாம் நாள் அன்றுதான் எனக்கு ஆரம்பமாகின்றது.

என்னை அவர்களுக்கு அறிமுகம் செய்த பின்னர் ஒவ்வொரு மாணவராக எழுப்பி பெயர் கேட்டமை ஞாபகம் வருகிறது.

அந்த வகுப்பில் சுமார் இருபது மாணவர்கள் இருந்திருக்ககூடும்.

அவர்களில் ஒருவர் பீர்முகம்மது.

பீ.எம்.கமால்தீன் என்பவர் அங்கு எனது சக ஆசிரியர். கணித பாடம் கற்பித்தார்.

பீர் முகம்மதுவின் தமையனார் மஜீது. அவரும் எனது சக ஆசிரியர். அவர் தமிழ்ப்பாட ஆசிரியர்.

எல்லா மாணவர்களையும்விட பீர்முகம்மது மற்றும் முகம்மது அலி என்ற இரண்டு மாணவர்கள் எனக்கு வித்தியாசமாகத் தெரிந்தார்கள்.

அதிலும் பீர் முகம்மது தனித்துத் தெரிந்தார்.

நான் கேட்ட வினாக்களுக்கு அவர் தந்த பதிலும் அவரது உடல் மொழியும் ஏனைய மாணவர் களிடமிருந்து அவரைத் தனித்துவமாகக் காட்டின.

அவர் மஜீதினுடைய தம்பி என்று எனக்குத் தெரியாது. ஆசிரிய அறைக்கு வந்தபோது கமால்தீனும் மஜீத்தும் என்னிடம் எப்படி அந்த வகுப்பு என்று கேட்டார்கள். நான் முகம்மது அலி பற்றியும் பீர் முகம்மது பற்றியும் அவர்களிடம் கூறி "இரண்டு சுட்டிப் பையன்களை அங்கே கண்டேன்" என்றேன்.

சிரித்தபடி அவர்கள் என்னிடம் அவர்கள் இருவரும் திறமையான மாணவர்கள் எனக் கூறியதோடு பீர்முகம்மது தனது தம்பி என்று மஜீது கூறினார்.

இப்படித்தான் பீர் முகம்மது எனக்கு அறிமுகம் ஆனார். மஜீதுக்கு இன்னொரு பெயர் மருதூர் மஜீது. அவர் ஒரு எழுத்தாளர். அவருக்குப் பல சகோதரர்கள். ஊரிலே பேர் பெற்றவர்கள். அவர்களுள் கடைக்குட்டி இந்த பீர் முகம்மது. மஜீதின் தம்பி என்று அறிந்த பிறகு பீர் முகம்மதுவை சற்று உன்னிப்பாகக் கவனிக்கலானேன். தமையனாரின் குணாதிசயங்கள் அந்த சிறு வய திலேயே அவரிடம் செல்வாக்குச் செலுத்தி இருந்தன.

தமிழ்க் கட்டுரை எழுதுவதிலே முகம்மது அலியும் பீர் முகம்மதுவும் போட்டியாளர்களாக இருந்தார்கள். வகுப்பிலே முதலாம் இரண்டாம் பிள்ளைக்கு இருவருமே போட்டியிட்டார்கள்.

அன்று இந்த இருவருமே பாடசாலை அறிந்த புத்திக்கூர்மை உள்ள மாணவர்களாக இருந்தார்கள்.

அப்போது சக்காப் மௌலானாவும் அங்கு ஆசிரியராக இருந்தார்.

நாடக வெறியரான அவர் சில நாடகங்களை அங்கு மேடையிட்டார். அவற்றிலே பீர் முகம்மது நடித்தது ஞாபகம் வருகிறது.

பாடசாலையிலே ஒரு பேச்சாளராகவும் பீர்முகம்மது அறிமுகமானார்.

இவ்வகையில் ஒரு கட்டுரையாளனாக பேச்சாளனாக நாடக நடிகனாக பீர்முகம்மது எனக்கு தெரிந்தார்.

விளையாட்டுப் போட்டிகளில் பங்கு கொண்ட போது அவர் விளையாட்டு வீரனாகவும் அறிமுகம் ஆனார்.

பல்துறை ஆற்றல் வாய்ந்த இந்தப் பையன் எதிர்காலத்தில் பிரகாசிப்பான் என்று என் மனம் கூறியது.

தொடர்ந்தும் இரண்டு வருடங்கள் அவர்களுக்கு தமிழ் வகுப்பு எடுத்திருப்பேன் என்று நினைக்கிறேன்.

பின் ஒரு முறை என்னை பீர் முகம்மது சந்தித்த போது அந்த வகுப்புகள் தன்னை மேலும் பதப்படுத்தி நன்றாக கட்டுரைகள் எழுத வைத்தன என்று கூறியது ஞாபகம் வருகிறது.

பீர் முகம்மதுவின் கட்டுரைகள் வாசிக்க சிறப் பாக இருக்கும். அவரது கையெழுத்தும்கூட அழகானது தான்.

அவருக்கு பலர் தமிழறிவு ஊட்டினாலும்

மௌனகுருசேரிடம் தான் தமிழ் படித்தேன் என்று அவர் அடிக்கடி கூறுவது வழக்கமாகிவிட்டது.

அது அவர் என் மீது கொண்ட அன்பினால் கூறும் மொழியா?

அல்லது உண்மையிலேயே என் தமிழ் கற்பித்தலால் அவர் ஆட்கொள்ளப்பட்டாரா? என்பது எனக்கு தெரியவில்லை.

வகுப்பிலே பேச்சுவாக்கிலே என் தமிழ் ஆசிரியர் களைப் பற்றி நான் கூறுவது வழக்கம். உயர்தர வகுப்பிலே எனக்கு புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை தமிழ் கற்பித்திருக்கிறார்.

பீர் முகம்மதின் வகுப்பில் ஒரு நாள் நான் அதனை கூறுயிருக்கிறேன் போலத் தெரிகிறது.

ஒரு நாள் பீர் முகம்மது என்னோடு போனிலே உரையாடும்போது இப்படிச் சொன்னார்.

"சேர். நான் விபுலாநந்த அடிகளாரின் தமிழ்ப் பாரம்பரியத்தில் வந்தவன்" என்றார். "எப்படி" என்று நான் கேட்டேன்.

"நீங்கள் புலவர்மணி பெரியதம்பிப் பிள்ளையின் தமிழ் மாணவன்.

புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை விபுலாநந்த அடிகளாரின் தமிழ் மாணவன். நான் உங்களது தமிழ் மாணவன். எனவே எனது தமிழ் அறிவுப் பாரம்பரியம் விபுலாநந்த பாரம்பரியம்"என்று கூறினார்.

எனக்கு ஆச்சரியமாகப் போய்விட்டது. தமிழ் கற்பித்தல் பாரம்பரியத்தை இப்படி ஒரு நேர்கோடு போட்டுப் பார்க்கிறாரே என்று.

பீர் முகம்மதுவின் இன்னொரு சிறப்பு என்ன வென்றால் அவர் தமிழ் மக்களுடன் கொண்டிருந்த இறுக்கமான பிணைப்பு ஆகும்.

எஸ் பொன்னுத்துரை மற்றும் விபுலாநந்த அடிகளார் ஆகியோர் இஸ்லாமிய மக்களுக்கு செய்த பணிகளைப் பற்றி பீர்முகம்மது பேசியிருக்கிறார். எழுதியிருக்கிறார்.

தன் பேச்சுகளிலே இந்த உறவை பீர் அதிகமாக வலியுறுத்துவர்.

தமிழ் எழுத்தாளர்களோடு அவருக்கு நெருக்க மான உறவும் இருக்கிறது.

மாணவனாக இருந்த அவர் உயர்கல்வி பயின்று பின்னர் அதே கல்லூரிக்கு அதிபராகவும் ஆகி யிருக்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் அதிபராக இருந்த காலத்தில் அந்தக் கல்லூரி பல வளர்ச்சிகளைக் கண்டது எனவும் நான் அறிந்தேன்.

பீர் முகம்மதுவின் இன்னொரு சிறப்பு

அவரது சிறப்பான சொற்பொழிவு.

அவர் பேச்சில் நான் மயங்குவது உண்டு

பேச்சை ஒழுங்கமைத்து கட்டங்கட்டமாக வகுத்து அதை வளர்த்துச் செல்லுகின்ற முறை கேட்கச் சுவாராசியமாக இருக்கும். ஒரு தேர்ந்த வழக்கறிஞரை அதிலே நாங்கள் காணலாம்.

அங்கொன்றும் இங்கொன்றுமாக நிகழ்ச்சிகளைச் சொல்லி அவற்றை இணைத்து ஒரு உருவமாக்கி பேச்சிலே காட்டுவதில் அவர் வல்லவர்போல அவர் எனக்கு தெரிந்தார்.

பின்னாளிலே அவர் ஒரு கவிஞரும் ஆனார்.

கல்முனையில் கடற்கரைப் பள்ளிவாசல். பாண்டிருப்பில் திரௌபதி அம்மன் ஆலயம்.

இதை ஏன் கூறுகிறேன் என்றால் இரண்டுமே கொண்டாட்டம் மிகுந்த வணக்கத் தலங்கள்.

பாண்டிருப்பு திரௌபதி அம்மன் திருவிழாவுக்கு இஸ்லாமிய மக்கள் செல்வதும் கடற்கரைப் பள்ளிவாசல் கொடியேற்றத்திற்கு தமிழ் மக்கள் செல்வதும் இப்போது குறைந்திருந்தாலும் ஒரு காலத்தில் இவை இரண்டுமே அந்தப் பகுதியில் வாழ்ந்த இஸ்லாமியரையும் தமிழர்களையும் இணைக்கும் பண்பாட்டு நிலையங்களாக இருந்திருக்கின்றன.

இவை பற்றிய தகவல்கள் தருவதிலும் அந்தக் கொண்டாட்டங்களை வேறு வகையான பார்வையில் பார்த்து விளக்குவதிலும் அவர் வல்லவர்.

இஸ்லாமிய தமிழ் உறவுகள் சீர் குலைந்து இருந்தபோது நிதானமாக இருந்து அந்தப் பிரச்சினையை இரு பக்கத்திலும் அணுகியவர்கள் மிகச் மிகச் சிலரே. இரண்டு சமூகங்களிலும் இருந்த "இந்த சிலரே" இன உறவுகளுக்கு பாலமாக இருந்திருக்கிறார்கள். அவர்களுள் மிக முக்கியமானவர் பீர் முகம்மது.

அவரது எழுத்துக்களும் பேச்சுக்களும் அவர் கொண்டிருக்கும் உறவுகளும் இதற்குச் சான்று.

ஓய்வு பெற்ற பின்னரும் ஓய்வு பெறாது உழைத்துக் கொண்டிருக்கிறார்.

சுறுசுறுப்பு, கலகலப்பு, மேலும் மேலும் கற்றல், இன உறவுகளைப் பேணுதல், பெரியோரை மதித்தல், அவர்களைத் தேடிச் சென்று அவர்களை மகிழ்வித்தல் போன்ற குணாதிசயங்களுடன் வாழும் ஒரு எழுத்தாளனாக பீர்முகம்மது கணிக்கப்பட வேண்டிய ஒருவர்.

அண்மைக்காலமாக சிறிய ஆய்வுக் கட்டுரைகளை தேசிய நாளிதழ்கள், இலக்கிய சஞ்சிகைகள், இணைய வழி இதழ்கள் போன்றவற்றில் அவர் எழுதிவருகிறார்.

"பாரதியாரின் பிரமாண்டத்தைக் காட்சிப் படுத்திய விபுலாநந்தர்".

"குறும்பாவே கவிஞர் மஹாகவியை தமிழுக்கு அறிமுகப்படுத்தியது".

"பாரதியார் யானை தாக்கி மரணமடையவில்லை"

"பொன்னியின் செல்வனும் வீரபாண்டியன் மனைவியும்"

"நாராய் நாராய் செங்கால் நாராய்"

போன்ற தலைப்புகளில் சிறிய ஆய்வுக் கட்டுரைகளை எழுதியுள்ளார்.

அவர் எழுதிய நூல்களில் ஐந்து நூல்கள் மிக முக்கியமானவை.

"கடல் ஒருநாள் எங்கள் ஊருக்குள் வந்தது" என்று சுனாமி பற்றிய ஒரு சிறுவர் கவிதை நூலை அவர் வெளியிட்டார். 2010 இல் வெளியான அந்த நூலுக்கு நான் அணிந்துரை வழங்கியிருந்தேன்.

"காமினி வந்து கருணை காட்டினான் கந்தசாமியும் கை கொடுத்துதவினான். மத்தியூ வந்து மனதை தேற்றினான். தௌபீக் வந்து தைரியம் ஊட்டினான்" என்று சிங்கள தமிழ் முஸ்லிம்களிடையேயான இன நல்லுறவைப் பேசிய கவிதை நூல் அது.

மற்றொரு நூல் "எஸ்.பொன்னுத்துரை: முஸ்லிம்களுடனான உறவும் ஊடாட்டமும்" என்பது. அந்த நூல் முஸ்லிம்களுடன் எஸ்.பொன்னுத்துரை கொண்டிருந்த உறவுகளை விலாவாரியாகியாகப் பேசியது. அது ஒரு வாழ்வியல் ஆய்வு நூல்.

இன்னுமொரு நூல்

"இளம்பிறை எம்.ஏ.ரஹ்மான் : இருட்டடிப்புகளை மீறி வெளிச்சத்துக்கு வந்தவர்" என்பதாகும்.

அறுபது எழுபதுகளில் வெளிவந்த "இளம்பிறை" என்ற தமிழ் இலக்கிய சஞ்சிகையின் ஆசிரியராக இருந்தவர் எம்.ஏ.ரஹ்மான். அவர் வெளியிட்ட அச் சஞ்சிகை தமிழ் இலக்கிய, இஸ்லாமிய இலக்கிய விடயங்களைத் தாங்கி ஒரு கனதியான தமிழ் இலக்கியச் சஞ்சிகையாக வெளிவந்தது. தமிழ் மற்றும் முஸ்லிம்களின் கலை இலக்கியப் பாலமாகவும் அது அமைந்தது.

பிறிதொன்று "திறன் நோக்கு" என்ற பெயரில் இருபத்தைந்து நூல்கள் பற்றிய மதிப்பீட்டுக் கட்டுரைகளைத் தாங்கி வெளிவந்தது. கிழக்கில் இருந்து த.கோபாலகிருஸ்ணனை ஆசிரியராகக் கொண்டு வெளிவந்த "செங்கதிர்" சஞ்சிகையில் "இரண்டாம் விசுவாமித்திரன்" என்ற புனைபெயரில் அவர் எழுதிய மதிப்பீட்டுக் கட்டுரைகளின் தொகுப்பு.

இங்கு பேசப்பட வேண்டிய இன்னுமொரு நூல் "விபுலாநந்த அடிகளும் முஸ்லிம்களும்" என்ற நூலாகும்.

இந்நூல்கள் அனைத்துமே முஸ்லிம் தமிழ் உறவின் நெருக்கத்தைப் பேசிய நூல்கள்.

எனவே பீர்முகம்மதுவின் நூலாக்க சிந்தனையின் அடிநாதமாக முஸ்லிம் தமிழ் உறவு இருப்பதை உணரலாம்.

அந்த வகையில் "விபுலாநந்த அடிகளும் முஸ்லிம்களும்" என்ற நூல் மிக முக்கியமானது. அந்த நூலுக்கான அணிந்துரையையும் நானே வழங்கி இருந்தேன்.

அந்த நூலின் சிறப்பம்சம் பற்றி நான் என்னுடைய அணிந்துரையில் குறிப்பிட்ட சில விடயங்களை இங்கு தொட்டு காட்ட விரும்புகின்றேன்.

கவிஞன் ஒருவன் புலமையாளனாக ஆராய்ச்சியாளனாக மாறியிருப்பது நமக்கு மகிழ்ச்சி தரும் செய்தியாகும்..

மாணவன் ஒருவன் கவிஞனாக இருப்பதை விரும்புகிறீர்களா அல்லது ஆராய்ச்சியாளனாக இருப்பதை விரும்புகிறீர்களா என்று சட்டென்று விடை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறுங்கள் என்று கேட்டால் நான் தயங்காமல் கவிஞனாக இருப்பதையே விரும்புவேன் என்று கூறு வேன். காரணம் கவிஞன் உணர்வு ஜீவி. கவிஞனுடைய புலமையும் ஆராய்ச்சியும் இணைகையில் அவனை அது இன்னொரு தளத்துக்கு எடுத்துச் செல்லும் என்பதையும் மறுப்பதற்கில்லை. காலம் சென்ற கவிஞர் முருகையனிடம் இவ்விணைப்பண்பு உண்டு.

கவிஞன் சமூக பொறுப்புடையவன். ஈனநிலை கண்டு துள்ளுபவன்.

கவிஞன் ஆராய்வாளனாகையில் அச்சமூகப் பொறுப்பும் கொதிப்பும் ஆராய்ச்சிகளிலும் வருவது தவிர்க்க முடியாததே.

பீர் முகம்மதின் இந்த ஆய்வு நூல் "விபுலாநந்த அடிகளும் முஸ்லிம்களும்" என்பதாகும்.

விபுலாநந்த அடிகள் கிழக்கு மாகாண பண் பாட்டின் ஒரு குறியீடு. வேதாந்த தத்துவத்தை ஏற்றுக் கொண்ட அவர் அனைத்தையும் சமமாகக் கண்டார். அதனால் அவர் எழுத்துக்களில் வாழ்வில் சமூக சமய சாதி இன குரோதங்கள் வரவில்லை.

தனது காலை இந்து மதத்தில் ஊன்றினாரா யினும் அவரது கரங்களும் சிரசும் அதனைக் கடந்து பரந்தன. காரைதீவில் பிறந்த அவர் தனது அயல் கிராம மான மாளிகைக்காடு சாய்ந்தமருது நிந்தவூர் இஸ்லா மிய மக்களுடன் தன் இளம் வயதிலேயே தொடர்பு கொண்டிருந்தார். முஸ்லிம் பண்பாட்டின் தாக்கத்திற்கு உட்பட்டிருந்தார். முஸ்லிம்களின் நண்பராக இருந் திருந்தார். விபுலாநந்த அடிகளை மையமாகக் கொண்டு பண்டைய முஸ்லிம் தமிழ் உறவினை அரசியல் பண்பாட்டுத் தளங்களில் இந்நூலில் கொண்டு வர முயல்கிறார் பீர் முகம்மது.

அரசியலில் முஸ்லிம்கள் தங்கள் வாக்கினை அளித்து நல்லையா மாஸ்டரை தேர்தலில் வெற்றி பெறச் செய்ததும் தமிழர்தம் வாக்கினை அளித்து எம்.எஸ். காரியப்பரை வெற்றி பெறச் செய்ததும் இன்றைய சூழலில் கற்பனை கூடப் பண்ண முடியாத நிகழ்ச்சி.

ஒரு சமூகத்தை இன்னொரு சமூகம் புரிந்து கொண்டு ஒன்றின் வளர்ச்சிக்காக இன்னொன்று உதவிய அற்புத காலங்கள் அவை

விபுலாந்தர் அந்தப் பணியாளர்களில் ஒருவராக முகிழ்க்கிறார். அவரின் முக்கிய பணிகளில் ஒன்று கல்விப் பணியாகும். அவர் பல முஸ்லிம்களுக்கு கல்வி கற்பித்த துடன் முஸ்லிம் மக்களின் கலை கலாச்சாரம் பற்றிப் பேசக்கூடிய தமிழ் அறிஞர்களையும் உருவாக்கினார்.

இந்நூலின் 28, 29 ஆம் பக்கங்களில் விபுலாநந்தரிடம் பாடம் கேட்ட முஸ்லிம்களின் பட்டியல் ஒன்றை பீர்முகம்மது தருகிறார்.

பிரபல அரசியல்வாதியாகவும் முஸ்லிம் அமைச்சராகவும் இருந்த ஏ.எல்.அப்துல் மஜீது (மூதூர்) இவரிடம் கற்றவர். சம்மாந்துறை பீ.ஏ.மஜீது அமைச் சருக்கு வித்தியாரம்பம் செய்து வைத்தவர் விபுலாநந்தரே என்ற தகவலும் நூலில் காணப்படுகின்றது.

புலவர்மணி ஆ.மு .சரீப்தீனும் இவரிடம் பாடம் கேட்டவரே. முஸ்லிம்களை நேசித்த அறிஞரான புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளையும் விபுலாநந்தரின் மாணவரே. கல்வி மூலம் இரு இனங்களையும் இணைத்து ஒரு புரிந்துணர்வை ஏற்படுத்திய சுவாமி விபுலாநந்தர் கிழக்கு மாகாண முஸ்லிம்கள் கல்வித் தரத்தில் பின் தங்கியிருந்தவேளை முஸ்லிம் கல்வி நிறுவனம் ஒன்றைக் கொண்டு நடாத்த ஆலோசனையை வழங்கினார் என்ற செய்தியையும் பீர் முகம்மது தருகிறார்.

அறிஞர் அஸீசுக்கும் விபுலாநந்த அடி களாருக்கும் இருந்த உறவுகள் பற்றிய பகுதியும் அடிகளார் காலத்தில் வாழ்ந்த முஸ்லிம் பிரபலங்கள் பற்றிய பகுதியும் இவ்வாய்வு நூலுக்கு மேலும் வளம் தருகின்றன. அடிக்குறிப்புகள் உசாத்துணை நூல்கள் என்பன முறைப்படி தரப்பட்டு இது ஒரு ஆராய்ச்சி நூல் எனப் பறைசாற்றுகின்றது.

கவிஞன் ஒருவன் ஆராய்ச்சியாளனாக மலர்ந்துள்ளமையை இந்நூல் காட்டி நிற்கின்றது.

இனங்களுக்கிடையே காணப்பட்ட ஒற்றுமையை அடிநாதமாகக் கொண்டு பின்னப்பட்ட இவ்வாய்வு நூல் இன்றைய தேவையை மறைமுகமாகச் சுட்டிக் காட்டுகின்றது. குரோதங்களாலும் வன்மங் களாலும் காழ்ப்பு களாலும் ஒவ்வொரு இனமும் மற்றைய இனம்மீது பகை பொறாமை நம்பிக்கையீனம் சந்தேகம் என்பவற்றைச் சுமந்து கொண்டு வாழும் காலம் இவை. இக்குணாம்சங் கள் நெருப்புச் சுவாலை போல அவர்கள் மனதில் நிற்கின்றன. இச்சுவாலையில் குளிர்காய முனையவும் தன்னலம் பெருக்கவும் முனைவோர இன்று அதிகம். இந்நிலையில் வேற்றுமைகளைப் பற்றிப் பேசிப் பேசி மேலும் இச்சுவாலையை விசிறி விடுகின்றனர்.

நாம் இப்போது இனங்களுக்கிடையே காணப்படு கின்ற ஒற்றுமைகளைப் பற்றி அதிகம் பேச வேண்டும். உரத்துப் பேச வேண்டும்.

இச்சமூகப் பொறுப்புடைய ஆய்வாளர்கள் இன்று மிகக் குறைவு. அப்பாரிய பணியை துணிவோடு செய்ய முன்வந்த பீர் முகம்மது என்ற மாணவனுக்கு கற்பித்திருக்கிறேன் என்று நான் பெருமிதம் கொள்கிறேன்

"சேர். நான் சுவாமி விபுலாநந்தரின் வழிவந்த தமிழ்ப் புலமைப் பரம்பரை" என்று பெருமிதத்தோடு என்னிடம் அவர் அடிக்கடி கூறுவது மீண்டும் ஞாபகம் வருகின்றது.




அது உண்மை. ஊர்ஜிதம் ஆகிறது. அந்தப் பகுதியில் தமிழ் இஸ் லாமிய இனத்தவர்களை அரவணைத்து வாழ்ந்தவர் சுவாமி விபுலாநந்தர்.


அதனைச் செய்பவர்களில் ஒருவராக இன்று அங்கு இருக்கிறார் பீர்முகம்மது. அவரது செயற்பாடுகளும் அவரது எழுத்துகளும் "நான் விபுலாநந்தர் கல்விப் பாம்பரை" என்று என்னிடம் அன்று கூறிய அவரது கூற்றை நிரூபிப்ப தாகவே உள்ளது.

கவிஞனாகவும் சமூகப் பொறுப்பு மிக்க ஆய்வாளனாகவும் பரிணமித் துள்ளார் பீர்முகம்மது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேராசிரியர் செ.யோகராசா




# ஆறுதலும் பரவசமும் தரும் கட்டுரைகள்

கவிதை, சிறுகதை, ஆய்வு, விமர்சனம் எனப் பல துறைகளிலும் ஈடுபாடுகாட்டி வருகின்ற ஏ.பீர் முகம்மது அவர்களது நூல் விமர்சனக் கட்டுரைகளின் தொகுப்பாக "திறன் நோக்கு" என்ற இந்நூல் அமைந் துள்ளது. இந்நூலிலுள்ள பெரும்பாலான ஆக்கங்கள் "செங்கதிர்" சஞ்சிகையில் இவரால் தொடர்ச்சியாக எழுதப்பட்டவை. இவை "செங்கதிரில்" வெளிவந்த காலத்தில் வாசகர்கள் பலரது ஈர்ப்பிற்கும் பாராட்டிற்கும் உள்ளானவை என்ற விதத்தில் இவ்வேளை நூலுக்கு அணிந்துரை எழுத முற்படுவது களி பெருவகை தருகின்றது.

ஈழத்தில் இன்று வருகின்ற விமர்சனக் கட்டுரைகள் சார்ந்த நூல்கள் இருவகைப் படுகின்றன. ஒன்று குறிப்பிட்ட விடயம் தொடர்பாக எழுதப்படுபவை. மற்றொன்று நூல்களுக்கு எழுதப்பட்டு வருகின்ற மதிப்புரைகள் அல்லது விமர்சனங்கள். இந்நூல் இரண்டாவது வகை சார்ந்தது

மேற்கூறிய துறையில் அதிக நூல்களை வெளி யிட்டு வருகின்ற மூத்த தலைமுறையினருள் கே.எஸ்.சிவகுமாரனும் புலோலியூர் ஆ.இரத்தின வேலோனும் குறிப்பிடத்தக்கவர்கள். எனினும் நூலுருவில் தராமல் வேறு பலரும் ஒவ்வொரு சஞ்சிகை யிலும் எழுதி வருவது நாம் அறிந்ததே. இவர்களுள் பலரும் எழுதுவன நூல் விமர்சனம் என்று அழைக்கப்பட்டாலும் இரசனைக் குறிப்புகளாகவும் பாராட்டுரைகளாகவுமே காணப்படுகின்றன. அதுவும் கடந்த சில வருடங்களாக வெளிவருவன பலவும் எழுதியவரது பெயர்களையும் எழுவாய், செயற்படு பொருள், பயனிலை வாக்கிய வடிவில் தருவனமாக மட்டுமுள்ளன. சில வேளைகளில் அடைகளோ உட் தொடர்களோ இருத்தல் கூடும். ஈழத்தில் நாற்பதுகளில் வெளிவந்த "பாரதி"(கொழும்பு) முதலான சஞ்சிகை களில் வெளிவந்த நூல் அறிமுகங்கள் இரத்தினச் சுருக்கமாக குறள் போன்று இறுக்கமாக நூல் விமர்சனம் செய்திருப்பதை நினைவு கூர்கின்றபோது எமது நூல் விமர்சனம் பற்றிய வரலாறு உலக்கை தேய்ந்து உளிப்பிடியான கதைதான். இத்தகைய ஆரோக்கியமற்ற விமர்சனச் சூழலில் இத்தொகுப்பில் உள்ள நூல் விமர்சன கட்டுரைகள் ஆறுதலும் பரவசமும் ஏற்படுத்துவனவாகின்றன.

கவிதை,சிறுகதை,நாவல்,கட்டுரை, விமர்சனம், ஆய்வு, வாழ்க்கை வரலாறு, நூல் பட்டியல் முதலான பல்வகை நூல்கள் பற்றிய மனப்பதிவுகள் கொண்ட இவ்வாக்கங்கள் பற்றி ஆழமாக நோக்கும் போது நான்கு சிறப்புகள் தலை நீட்டுகின்றன

அவை பெரும்பாலான ஆக்கங்கள் நிறைகளை மட்டுமின்றி குறைகளையும் எடுத்துரைத்தல்

மூத்த எழுத்தாளர்,இளைய எழுத்தாளர், நண்பர்கள், உறவினர்கள் என்ற பேதமின்றி அவற்றை வெளிப்படுத்துதல்.

குறைகள் கூறும்போது நயத்தகு நாகரீகத்தைக் கடைபிடித்தல்.

காரமான கருத்துக்களையும் இனிப்பாக தருதல்.

விரிவஞ்சி எடுத்துக்காட்டுகள் தரப்படவில்லை. அவற்றை இனம் காண்பது வாசகர்களது பொறுப்பாகிறது.

நூலின் தலைப்பு பற்றியும் ஒரு வார்த்தை கூற வேண்டும். விமர்சனம், திறனாய்வு என்ற இரு சொற் களையும் ஒன்றாக கருதுவோர் எம்மிடமுளர்.இரண்டுமே வெவ்வேறானவை என்று வாதிடுவோருக்கும் குறைச்ச லில்லை. இந்நிலையில் அவ்விரண்டையுமே தவிர்த்து "திறன் நோக்கு" என்ற சொல்லைக் கையாண்டுள்ளார் ஏ.பீர்முகம்மது (இரண்டாம் விசுவாமித்திரன்).

அதுபற்றி அலசுவதற்கு "மூன்றாவது விசுவா மித்திரர்" எவராவது முன்வர வேண்டும்.ஏனைய சிறு சஞ்சிகைகள் போன்று அற்ப ஆயுளில் "செங்கதிரும்" தன் "கதிரை" முடித்து விட்டது.

எனினும் குறுகிய காலத்துள் அது ஆற்றிய வற்றின் சான்றாக உள்ளார் இரண்டாம் விசுவாமித்திரன். ஆயுள் முடிந்தது "செங்கதிருக்கு" மட்டுமே என்பதை நன்குணர்ந்து "செங்கதிர்" நினைவை - கனவை மெய்ப்பித்துக்கொண்டிருப்பது

இவ்வாசிரியரின் பொறுப்பாகின்றது.

குறைந்தது "மூன்றாவது விசுவாமித்திரன்" அம்பாறை மாவட்டத்தில் வரும்வரையாவது "விபு

விபுலாநந்த அடிகளும் முஸ்லிம்களும்"என்ற ஆய்வு நூலூடாக தம்மை வலுப்படுத்திய ஆய்வுலகை வளப்படுத்திய இந்நண்பரின் மற்றுமொரு நூலுக்காகவும் காத்திருப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிஞர் பீர்முகம்மது அவர்களின் கவிதை வெளி

நீண்ட காலமாக ஈழத்தின் தமிழ் இலக்கியப் பரப்பில் சலிக்காது பயணித்து வருபவர் ஏ.பீர் முகம்மது அவர்கள். கடந்த ஒரு தசாப்த காலமாக இரண்டாம் விசுவாமித்திரன் என்ற பெயரிலும் அவருடைய ஆக்கங்கள் பத்திரிகைகள் - சஞ்சிகைகள் - மின் இதழ்கள் போன்றவற்றில் பிரசுரமாகி வருகின்றன. கவிதை - கட்டுரை - சிறுகதை - ஆய்வு - ஆளுமைகளின் வாழ்வியல் திறன்நோக்கு - கவியரங்கச் செயல்பாடு - சொற்பொழிவுகள் என்று பல தளங்களில் ஈடுபட்டு வந்தாலும் தற்போது கட்டுரை ஆய்வு - சிறுகதை போன்றவற்றிலேயே கூடிய கவனம் செலுத்தி வருகிறார்.

ஆங்கிலத்திலும் கவிதை எழுதும் ஆற்றல் உள்ளவர்.

இக்கட்டுரை அவரது கவிதை வெளியினை நுணுகி நோக்கும் எத்தனமாகும்.

கவிஞர் ஏ. பீர் முகம்மது அவர்களின் கவிதைகளின் பரப்பை சிறு சிறு பகுதிகளாகப் பிரித்துத் தலைப்பு வழங்கிக் கட்டுரையை கொண்டு செல்வது வாசகர்களுக்கு வசதியாக இருக்கும் என்று கருதுகிறேன்.

**முதலாவது கவிதை**

கவிஞர் ஏ.பீர்முகம்மது அவர்கள் பாடசாலைக் காலத்தில் பத்தாம் வகுப்புப் பயிலும்பொழுது எம்.ஏ.ரஹ்மான் என்பவரை ஆசிரியராகக் கொண்டு வெளிவந்த இளம்பிறை என்ற சஞ்சிகையில் தன்னுடைய இலக்கியப் பயணத்தை ஆரம்பித்தவர். அக்கால கட்டத்தில் வெளிவந்த தமிழ் இலக்கியச் சஞ்சிகைகளில் முக்கியமான ஒன்றாக "இளம்பிறை" இடம் பிடித்திருந்தது. பிரபலம் பெற்றிருந்த எழுத்தாளர்களும் கவிஞர்களும் இச்சஞ்சிகையில் தங்கள் ஆக்கங்களை எழுதி வந்ததுடன் மாணவர்களும் இளம் தலைமுறையினரும் இலக்கியப் பயணத்தில் ஈடுபட வாய்ப்புகளையும் இச்சஞ்சிகை வழங்கியது. இளம்பிறையில் தனது ஆக்கங்களை தொடராக வெளிவர செய்தவர்களில் கவிஞர் மஹாகவி என அறியப்பட்ட த.உருத்திரமூர்த்தியும் ஒருவர் அவர் தமிழ்க் கவிதை உலகுக்கு குறும்பா என்னும் கவிதை வடிவத்தை அறிமுகம் செய்தார். அவ்வடிவம் பதின்மூன்று சீர்களையும் மூன்று அடிகளில் ஐந்து வரிகளையும் கொண்டது. தனக்கென இலக்கண அமைப்பும் அதற்குண்டு.

கவிஞர் பீர்முகம்மது இளம்பிறையில் குறும்பா எழுதி தனது இலக்கியப் பயணத்தை ஆரம்பித்தவர். இன்றும்கூட குறும்பாவை அதன் சரியான வடிவத்தில் எழுதுவதற்கு பலரும் திணறும்நிலையில் கவிஞர் மஹாகவி குறும்பா எழுதத் தொடங்கிய காலத்தில் அவருக்குப் பின்னர் முதன்முதலாக குறும்பாவை அதன் சரியான வடிவத்தில் கையாண்டு தொடர்ந்தும் குறும்பாவை எழுதி வருபவர் பீர்முகம்மது என்பதை இங்கே குறிப்பிட விரும்புகின்றேன். இதுபற்றி குறும்பா என்ற தலைப்பில் ஜீவநதி சஞ்சிகையில் (மே 2019) நான் எழுதிய கட்டுரையில் விபரமாக எழுதியுள்ளேன்.

இளம்பிறையில் 1965 செப்டம்பரில் வெளியான அவரின் குறும்பா இது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்தனையைக் கிளறுகிறான்
பாடி சிரிப்பும் உடனே வருமாம் கூடி
வந்து, குறும்பாவினைநம்
வாய்கிழிய மெய்சிலிர்க்கத்
தந்திடுவான் ஊழல்களைச் சாடி

இவருடைய குறும்பாக்கள் (செங்கதிரோனை ஆசிரியராகக் கொண்டு) கொழும்புத் தமிழ் சங்கம் வெளியிட்ட "ஓலை" சஞ்சிகையிலும் (ஜூன் 2003 ) வெளிவந்தது.

"கவிதை கேளுங்கள்" என்ற மெய்நிகர் நிகழ்ச்சியில் "குறும்பாவில் எனது அநுபவங்கள்" என்ற தலைப்பில் உரையாற்றியுள்ளார் என்பது குறும்பா மீதான அவரின் ஈடுபாட்டைக் காட்டுகின்றது.

#### காதல் கவிதைகள்

இளம்பராயத்தின் இலக்கியப் பயணம் பலரா லும் காதல் கவிதையோடு தொடங்குவதே வழமை. ஆனால், இவர் தன்னுடைய இலக்கியப் பயணத்தைக் குறும்பாவில் ஆரம்பித்தவர்.

அதனைத் தொடர்ந்துதான் காதல் கவிதை களை எழுதும் முனைப்பில் ஈடுபட்டார்.

1960 களின் மத்திய காலப்பகுதியில் ஆரம்பிக்கப்பட்ட "தினபதி", "சிந்தாமணி" ஆகிய பத்திரிகைகளின் பிரதம ஆசிரியராக எஸ்.டி சிவநாயகம் இருந்தார்.

தினபதி பத்திரிகையில் கவிதா மண்டலம் என்றொரு பகுதி ஆரம்பிக்கப்பட்டது. இளந்தலைமுறை யினரின் கவிதைகளைப் பிரசுரிசிக்கும் களம் அது. சிரேஷ்ட கவிஞர் ஒருவரின் சிபார்சினைப் பெற்றுக் கவிதைகளை அனுப்ப வேண்டும் என்ற நிபந்தனையும் சிரேஷ்ட கவிஞர்களின் பட்டியலும் கவிதா மண்டலத் தில் வெளியாகி இருந்தது.

அந்த வகையில் தன்னுடைய முதலாவது காதல் கவிதையை கவிஞர் எம்.ஏ.நுஃமான் அவர் களிடம் (பேராசிரியர்.எம்.ஏ.நுஃமான்) கொடுத்துச் சிபார்சு பெற்று கவிதா மண்டலத்திற்கு அனுப்பி வைத்தார். 17.02.1968 இல் நினைவில் தோன்றுகிறாள் என்ற தலைப்பில் அந்தக் கவிதை வெளியானது.

எண்சீர் விருத்தம் அறுசீர் விருத்தம் ஆசிரியப்பா வெண்பா முதலிய பாவடிவங்களில் அவர் தன்னுடைய காதல் கவிதைகளை எழுதினார்.

கலாவதி தினபதி சிந்தாமணி தினகரன் போன்ற பத்திரிகைகளில் அவை பிரசுரமாயின. அவருடைய காதல் கவிதைகள் அனைத்தையும் இக்கட்டுரைக்குள் கொண்டு வருவது சாத்தியமல்ல. சிறப்பான இரண்டு கவிதைகளின் தெரிவு செய்யப்பட்ட வரிகள் மட்டும் சோற்றுப் பதமாக இங்கே எடுத்தாளப் படுகின்றன.

கறுப்புக் கண்ணாடி அணிந்த ஒரு இளம் கன்னியைக் கண்டதும் "கண்ணாடிப் பெண்" என்ற கவிதை பிறக்கிறது. அவள் கண்ணாடி அணிவதற்குப் பல காரணங்களைக் கற்பனையில் அடுக்கி இருந்தார். சிந்தாமணியில் (07.06.1987) அது பிரசுரம் கண்டது.

வண்டுகள் மதுவருந்தி
வருகையில்
கண்கள் தம்மைக்
கண்டுவிடக் கூடாதென்றா
கண்ணாடி அணிந்து வந்தாள்.

தமிழ்க்கவி யாரும் கண்டால் தப்பாது கண்கள் என்று மறைப்பதற்கா, பெண் சிருஷ்டி யாரும் அருகில் வந்து பேசுகையில் கண்திருஷ்டிபடுமென்றா, சுகத்திற் காய் அலைபவர்கள் கண்சிமிட்ட கற்பினுக்கேதும் களங்கம் வரலாமென்றா அல்லது தூரக் குறைபாட்டுத் தொல்லைகளா என்று கவிதை காரணி தேடிப் பயணிக் கின்றது.

வெண்பா வடிவில் அமைந்த "பொல்லாத இரவு" (1973 கலாவதி) என்ற தலைப்பிலான கவிதையின் வரிகள் இவை

ஆர்த்தெழும்பும் எங்களிடைக்
-காதலினைக் கண்ணுற்றுப்
பார்த்தழிந்து போகுதடி பாழுநிலா
-நேர்த்தியளே
உன்பார்வை பட்டவுடன்
உயிர்த்தெழுதே பட்டநிலா
என்செய்தாய் கோலம் இயம்பு

நூலகம் யாழ்ப்பாணம்

வெண்பாவில் அவரின் இயலுமையை இங்கே காணலாம்

தினகரனில் (23.09.1975) வெளியான "உலகை நினைந்து" என்ற கவிதையும் சிறப்பான ஒரு காதல் கவிதை என அக்காலத்தில் அடையாளம் காணப்பட்டது

கண்ணதாசன் போன்றவர்களின் கவிதைகளை வாசித்துக் காதல் கவிதைகளை எழுதும் ஆற்றலை வளர்த்துக் கொண்டதாகக் கூறும் கவிஞர் ஒரு கட்டத்தில் காதல் கவிதைகளை எழுவதை நிறுத்திக் கொண்டார்

#### சமூக சீர்திருத்தம்

காதல் கவிதையிலும் சமூக சீர்திருத்தம் பேசும் கவிதைகளே பயனுடையது என்ற சிந்தனை அவருடைய இருபது வயது கடந்த பருவத்தில் ஏற்படத் தொடங்கியது போலும்.

"மாங்காய் விழுத்த மந்திரமா ஓதுகிறீர்?"

என்று வினாத் தொடுத்து (19.02.1976 தினகரன் ) பத்திரிகையிலே சமூக உள்ளடக்கம் கொண்ட கவிதை ஒன்று பிரசுரமானதும் அதற்குச் சில கவிஞர்கள் பதில்கள் எழுதியதும் நடந்த சம்பவங்கள்,

கம்பளையைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகும் கொண்ட மொகமட் சனீர் என்பவரினால் "கல்பனா" என்ற பல்சுவை கொண்ட சிறு பத்திரிகை ஒன்று வெளியிடப்பட்டது ஆங்கிலத்திலும் தமிழிலும் வெளிவந்த அப்பத்திகையில் "கொள்கை" என்ற தலைப்பில் பீர் முகம்மது அவர்களின் கலிதை ஒன்று பிரசுரமானது கம்யூனிஸ சித்தாந்தத்திற்கு எதிராக வும் அந்த. மரபுக் கவிதை பேசியது. வித்தியாசமான உள்ளடக்கம் அக்கவிதையைச் சிறப்பித்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆன்மீகக் கவிதை

ஐம்பதுகள் கடந்த பருவத்திலே ஆன்மீக கவிதைகளை அவர் எழுதி இருப்பார் என்று நீங்கள் நினைக்கலாம். அப்படி அல்ல. காதல் கவிதைகளை எழுதத் தொடங்கிய பொழுதிலேயே அவர் ஆன்மீகக் கவிதைகளையும் எழுதினார்

பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில்1972 இல் நடைபெற்ற கவிதை போட்டியில் இவருடைய கவிதை முதலாம் பரிசு பெற்று வெள்ளிப் பதக்கத்தைச் சுவீகரித்துக் கொண்டது.

“தனிமை” என்ற தலைப்பிலான அக்கவிதை ஆன்மீகப் பொருளை உள்ளடக்கமாகக் கொண்டது கலாசாலையின் “யாழ்பிறை” என்ற சஞ்சிகை அதைப் பிரசுரித்து மகிழ்ந்தது.

உனையெண்ணித்தனித்திருந்துவணக்கம்செய்யும்
ஒருகோடிச் சிருஷ்டிகளில்
நானும் ஒன்று
எனத் தொடங்கி
உண்மையிது சிறுபிழைகள்
பொறுத்துக் கொள்வாய்

என்று முடிகிறது.

ஆன்மீகம் தொடர்பான இவருடைய பல கவிதைகள் அவருடைய முகநூல் பக்கத்தில் அக்டோபர் 2016 தொடங்கி பெப்ரவரி 2017 வரை பதிவாகியுள்ளன.

வாரம் தவறாமல் வியாழக்கிழமை மாலை அக்கவிதைகள் வெளிவரும். முஸ்லிம்கள் சந்திர வட்டக் கணக்கைப் பின்பற்றுவர்கள். வியாழக்கிழமை மாலை என்பது அவர்களைப் பொறுத்தவரையில் வெள்ளிக்கிழமை மாலை என்பதாகும். எனவே முகநூலில் வெளிவரும் அவரின் கவிதைகள் வெள்ளி மாலை என்ற தொடரில் சிறிய தலைப்புகளைத் தாங்கி வெளிவந்தது. இருள்,தேடல்,அறிவு,மாட்சி,நிழல், யாக்கை,போர்வை,விடிவு,வாழ்வு, தெளிவு, மேன்மை, மறைவு, தவம், கேள்வி, பேராசை, விளைவு, போர்வை, தனிமை போன்ற தலைப்புகளாகளில் அமைந் திருந்தன. “தேடல்” என்ற கவிதை பின்வருமாறு

இருளின் வெளிச்சத்தில்
என்னைத் தேடுகிறேன்.
மண்புழுக்களின் முதுகில் மலைகள்.
தேனீர் கோப்பைக்குள்
கடலும் சமுத்திரமும்
இரவின் இரு அந்தங்களிலும்
பகலின் முகங்கள்
காற்றின் தோள்களில் தாங்கப்படுகின்றன வானம்
என் பார்வையில்
மீண்டும் இருள்.
இருளின் வெளிச்சத்தில்
மீண்டும்
என்னைத் தேடுகிறேன்.
இன்னுமொரு பொழுது விடிகிறது

(கவிஞரின் முகநூலில் 04.11. 2017)

இதுபோன்ற பதினேழு கவிதைகளை வாசிக்கும் வாய்ப்பு முகநூலில் நமக்குக் கிடைக்கும் பொதுவான உள்ளடக்கங்களைக் கொண்ட கவிதைகள் காதல், ஆன்மீகம் , சமூகம் என்பன தொடர்பில் அவர் எழுதிய கவிதைகளுக்கும் அப்பால் பொதுவான சில உள்ளடக் கங்களைக் கொண்ட கவிதைகளையும் அவர் எழுதினார்.

நமது நாட்டின் கிரிக்கெட் விளையாட்டில் 11.09.1985 மறக்கமுடியாத ஒருநாள் ஆகும். அன்றுதான் இந்தியாவைத் தோற்கடித்து கிரிக்கெட்டில் டெஸ்ட் அந்தஸ்தைப் பெற்றுக் கொண்டது.

இதனை முன்னிட்டு நாடு முழுவதும் அமர்க்களமாகக் கொண்டாட்டங்கள் இடம்பெற்றதுடன் அரசாங்கம் ஒரு நாள் விடுமுறையும் அறிவித்தது.

இலங்கையில் கிரிக்கெட் ஜனரஞ்சகமானது.

இவ்வாறானதொரு காலகட்டத்தில் “கிரிக் கெட்” என்ற தலைப்பில் கவிஞர் தினகரனில் ஒரு கவிதை எழுதினார்.

அந்தக் கவிதையின் சில வரிகள் பின்வருமாறு
யார் சொன்னது
வெற்றிபெற்றால்தான்
விடுமுறை என்று ?
மைதானத்தில்
விளையாட்டு
இடம்பெறும் போதே
காரியாலயங்களில்
கதவுகளைத்
திறந்து கொண்டும்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதிரைகளில்
அமர்ந்து கொண்டும்
விடுமுறையோடு தானே
விளையாடிக்
கொண்டிருக்கிறோம்.

"கிரிக்கெட்" என்ற தலைப்பில் கவிஞர் பீர் முகம்மது 1986 இல் எழுதிய அக்கவிதையை சந்தர்ப்பம் பார்த்து உள்ளடக்கம் கருதி இருபத்தைந்து வருடங்கள் கடந்து 27.02.2011ல் தினகரன் மீள் பிரசுரம் செய்தது.

இன்னுமொரு சந்தர்ப்பத்தில் "வால்வெள்ளித் தோரணம்" என்று ஒரு கவிதை எழுதினார்.

எழுபத்தாறு வருடங்களுக்கு ஒருமுறை வான் வெளியில் வருகை தரும் "ஹெய்லி" என்ற வால் நட்சத்திரத்தை இலங்கை மக்களுக்கு1986.02.09 இல் பார்க்கக் கிடைத்தது.

"வால்வெள்ளித்தோரணம்" என்ற கவிதை பிறந்தது. அதன் சில வரிகள் இது

எழுபத்தாறு வருட
இடைவெளிவிட்டு
மக்களை ஏன்
சந்திக்கிறாய் என்பது விஞ்ஞானிகளை
விழிப்படையச் செய்யட்டும்
அரசியல் வாதிகள்
அறியாமலே இருக்கட்டும்

சிந்தாமணி பத்திரிகை ஒரு தடவை சிலேடையில் வெண்பா எழுதி அனுப்புமாறு ஒரு அறிவித்தல் போட்டிருந்தது. அடுத்த வாரம் சிந்தாமணியில் கவிஞரின் சிலேடை வெண்பா வெளிவந்திருந்தது . சுரண்டல் சுவீட் டிக்கெட் மற்றும் காதல் என்ற இரண்டு விடயங்களைத் தொடர்பு படுத்தி அந்த வெண்பா வெளிவந்தது .

ஆரும் பெறலாம் அதன் பின்பு ஏமாற்றம் ஊரும்
அறியாதுழைப்பும்போம் - ஒருங்கால்
வெற்றி ஒருசிலர்க்கு வேறுபல்லோர் துன்புறுவர்
உற்றிடு காதல் சுரண்டல் சீட்டு

வாசிக்கும் போது காளமேகப் புலவரை -நினைக்கிறோம்.

"செங்கதிர்" சஞ்சிகையில் (2008 ஜனவரி) "வீடு" என்ற கவிதை வெளிவந்தது. வீடு என்ற சொல் ஆறு பொருளில் வருவதை அக்கவிதை வெளிப்படுத்தியது.

அதேபோல,
இரவை அழைத்து வந்து
பகலை அறிமுகம் செய்தேன்
புன்னகை செய்தது பகல்

கடலை அழைத்து வந்து
தரையை அறிமுகம் செய்தேன்
கைகொடுத்து மகிழ்ந்து தரை
-------- ---------- -----
தாகத்தை அழைத்து வந்து
தண்ணீரை அறிமுகம் செய்தேன்
எதிர்காலம் பற்றிய
கனவுகளால்
கண்ணீர் விட்டன
தண்ணீரும் தாகமும்
(ஜீவநதி - ஜூலை 2021)

போன்ற கவிதைகள் கவிஞரின் புதிய அணுகுமுறைகளை வெளிப்படுத்தியது. ஆளுமைகளைப் பாடும் கவிதைகளையும் எழுதினார்.

கியூபா நாட்டின் தலைவர் பிடல் கஸ்ட்ரோ மரணமானபோது "இதுவரையில் அரசியல் சரித்திரத்தில் வாழ்ந்தாய். இனி சரித்திர அரசியலில் வாழ்வாய்" என்று எழுதினார்.

கவிக்கோ அப்துல் றகுமானை எழுதும்போது
வெள்ளை உடை தரித்து
வீதிக்கு வந்தால்
தமிழ் வருகுதென்று
தலைவணங்கியோரும் உண்டு
கவிதை வருகுதெனக்
காலில் விழுந்தோரும் உண்டு.

தலைவர் எம்எச்எம் அஷ்ரப், இந்திய ஜனாதிபதி அப்துல் கலாம், கலைஞர் கருணாநிதி, கவிஞர்களான வாலி, சண்முகம் சிவலிங்கம், மஹாகவி ஆகியோர் பற்றியெல்லாம் கவிதை எழுதினார் என்று அறிய முடிகின்றது.

**கவியரங்கம்**

கவிஞர் ஏ. பீர் முகம்மது அவர்களின் கவிதா ஆற்றல் கவியரங்குகளிலும் ஜொலித்தது. கைதட்டல்களும் பெற்றது. இது பலரும் அறிந்த விடயம்.

கொழும்பு "வகவம்" கவியரங்கில் 03.05.2015 இல் "கனவுக் காட்சியும் கவிஞர்கள் ஆட்சியும்" என்ற தலைப்பிலும் 10.05.2017 இல் "பேஸ்புக் உலகம்" என்ற தலைப்பிலும் பாடிய கவிதைகள் பலரையும் கவர்ந்தன.

இலங்கை ஒலிபரப்பு கூட்டுத் தாபனத்தின் ( 16.11.1985) மீலாத் கவியரங்கு மற்றும் (26. 06. 2017) பெருநாள் கவியரங்கு ஆகியவற்றிலும் பங்கு பற்றியுள்ளார்.

ரூபவாஹினி நேத்ரா அலைவரிசையில் 2016 ஹஜ் பெருநாள் கவியரங்கில் கலந்துகொண்டவர்

பல கவியரங்குகளைத் தலைமை தாங்கியதும் உண்டு. கவிஞர் எஸ் ஜனூஸ் எழுதிய "தாக்கத்தி" என்ற நூலின் வெளியீட்டின்போது (20.02.2012) கவியரங்கத் தலைமை ஏற்றார்.

அவ்வரங்கில் பாடிய பலர் இன்று பிரபல கவிஞர்களாகவும் வானொலி தொலைக்காட்சிகளின் முக்கிய பிரமுகர்களாகவும் இருக்கின்றனர். வகவம் அமைப்பினர் கொழும்பில் நடத்திய 39 வது கவியரங்கு (08.07.2017) இவர் தலைமையிலேயே நடைபெற்றது. சுமார் பத்துக்கு மேற்பட்ட கவியரங்குகளில் தலைமையேற்ற கணக்குகள் உண்டு.

அவுஸ்திரேலிய தமிழ் இலக்கிய கலைச்சங்கம் 13.11. 2021 இல் ஏற்பாடு செய்த "புதியதோர் உலகை நோக்கி" என்ற தலைப்பிலான மெய்நிகர் பன்னாட்டுக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவியரங்கில் கலந்து கொண்டவர்.

இந்தியாவின் தலைநகர் புதுடில்லியில் சார்க் நாடுகளின் இலக்கியப் பிரிவான குழுஞுறுயுடு அமைப்பு ஏற்பாடு செய்த தெற்காசிய நாடுகளுக்கான இலக்கியப் பெருவிழாவில் கலந்துகொண்டு "தண்ணீரின் மரணம்" ( Death Of Water) என்று ஆங்கிலத்தில் கவிதை எழுதி வாசித்தவர்.

இவருடைய ஆங்கிலக் கவிதைகள் இணைய சஞ்சிகைகளில் வெளியாகியுள்ளன.

**கவிதை நூல்**

தொகுதிகள் பல போடும் அளவுக்கு அவரிடம் கவிதைகள் இருந்தாலும் இதுவரை ஒன்பது நூல்களை அவர் வெளியிட்டிருந்தாலும் அவரின் கவிதைத் தொகுதி இன்னமும் வெளியாகவில்லை. ஆனால் கவிஞரின் ஆற்றலுக்குச் சான்று பகரும் வகையில் அவர் எழுதிய சிறுவர் கவிதை தொகுதி ஒன்று பற்றி இங்கு குறிப்பிட விரும்புகின்றேன்

சுனாமி வந்தபொழுது அதனால் ஏற்பட்ட அனர்த்தங்களைப்பற்றி 2010 ஆம் ஆண்டில் ஒரு கவிதை தொகுதி வெளியிட்டார். அது சிறுவர்களுக் கானது. "கடல் ஒருநாள் எங்கள் ஊருக்குள் வந்தது" என்ற கவிதைத்தொகுதி. பேராசிரியர் எஸ்.மௌனகுரு அவர்களின் அணிந்துரையோடு வெளிவந்தது.

இவர் கொண்டிருந்த கவிதைப் புலமையும் ஆற்றலும் பலவகைகளில் இக்கட்டுரையில் சொல்லப் பட்டுள்ளது அதன் ஆதார சுருதியாக இவர் பெற்ற ஒரு விருதை இங்கு குறிப்பிடலாம்..

கிழக்கு மாகாண முதலமைச்சர் விருது 2011 ஆம் ஆண்டு கவிதைகளுக்காக இவருக்கு வழங்கப் பட்டது என்பது இவரின் கவிதைமீதான தொடர் பங்களிப்பை எங்களுக்குத் தெரிவிக்கின்றது.

கவிஞர் ஏ. பீர்முகம்மது அவர்களின் கவிதை வெளியானது அவர் பயணித்த நிகழ்வுகளில் , எடுத்து எழுதிய வடிவங்களில், உள்ளடக்கங்களில் என்று பல விடயங்களை இக்கட்டுரை தெரிவிக்கின்றது.

அவற்றின் சாரம்சத்தைப் பின்வருமாறு தொகுத்துத் தரலாம்.

அவர் கவிதை வெளியில் நீண்டகாலம் சஞ்சரித்துள்ளார்(1965-இன்றுவரை).மரபுக் கவிதையில் தொடங்கி சமகாலத்தில் "மரபு மீறாத" புதுக்கவிதை களை எழுதிவருகிறார்.

காதல்,ஆன்மீகம், சமூக நோக்கு, பொது விடயம், இயற்கை, ஆளுமைகள் என பல விடயத் தலைப்புகளில் அவரின் கவிதா சிந்தனை பயணித் துள்ளது.

கவிதையின் முக்கிய வடிவங்கள் எல்லா வற்றிலும் இவரின் கவிதைகள் வெளிவந்துள்ளன. படிமக் கவிதைகளும் எழுதியுள்ளார்.

கவிதைப் பயணம் ஆரம்பமான காலத்தி லிருந்து இன்றுவரை ஆன்மீகக் கவிதைகளில் ஈடுபாடு காட்டி வருகிறார்.

இவரின் ஆன்மீகக் கவிதைத் தலைப்புகள் எல்லாமே மூன்று எழுத்துச் சொற்களாக அமைந் துள்ளமை விசேடமாகக் கவனிக்க வேண்டியது.

கவியரங்கங்களில் பாடியதுடன் பத்துக்கு மேற் பட்ட கவியரங்குகளுக்குத் தலைமையேற்றுமுள்ளார்.

தற்காலத்தில் மிகவும் அரிதாகவே எழுதப்படும் இரட்டைப் பொருள்தரும் சிலேடை வெண்பாவை எழுதும் திறன் வாய்க்கப் பெற்றவர்.

ஆங்கிலத்திலும் கவிதை எழுதும் ஆற்றல் வாய்க்கப் பெற்றவர்.

கவிஞர் பீர்முகம்மது அவர்களின் கவிதை வெளி பரந்த எல்லைகளைக் கொண்டது என்பதுடன் ஈழத்துத் தமிழ்க் கவிதை நெடும்பரப்பில் அவருக்கான இடம் தவிர்க்க முடியாதது என்பதுமாகும்.

## குறிப்பு : 01

"அப்போது லிட்டரரி கிரிட்டிசம் என்பதை இலக்கிய விமர்சனம் என்று சொல்லிக் கொண்டு இருந்தார்கள். அது எனக்கு என்னவோபோல் இருந்தது. அப்ப முதன் முதல்ல திறனாய்வு என்ற சொல்லைப் புதுசா உண்டாக்கி கலைமகளில் எழுதினேன். அப்போது பலத்த எதிர்ப்புக்கள். ஆனந்தவிகடனில் ஒரு குட்டித் தலையங்கமே எழுதினார்கள்.

திறனாம். ஆய்வாம். அருமையான விமர்சனம் என்ற வார்த்தை இருக்கின்ற போது ஏன் இந்த அ.ச. இப்போது புதிதாக ஒரு வார்த்தையை உண்டாக்கி பிராணனை வாங்குகிறார் என்று எழுதினார்கள். அப்புறம் பத்து வருஷம் கழித்து வாசன் என்கிட்ட வரும்பொழுது அவர்கள் பத்திரிகையிலேயே திறனாய்வு என்று எழுத ஆரம்பிச்சுட்டாங்க. என்னை வாசன் அப்படிக் கலாட்டா பண்ணினார். இப்ப விமர்சனம்னு எழுதுனா ஆனந்தவிகடனை கொளுத்திப் புடுவான். ஆகவே திறனாய்வு என்று எடுத்துகிட்டோம்" என்றார்.


"அப்படி ஒரு "ஆக்ஸிடெண்டலா " வந்ததே தவிர நான் அதைத் தேடிப் போனேன் என்று சொல்வது முறையல்ல"

( பேராசிரியர் அ.ச.ஞா வின் பதில்கள் என்ற நூலிலிருந்து பக் 40)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீரன்.ஆர்.எம். நௌஷாத்




# கடல் ஒருநாள் எங்கள் ஊருக்குள் வந்தது..

**அழிவிலிருந்து ஆக்கம் பெறுதலை வலியுறுத்தும் சிறுவர் கவிதைப் பிரதி**

பீடிகை:

கவிஞர் ஏ.பீர்முகம்மது அவர்கள் எழுதிய "கடல் ஒருநாள் எங்கள் ஊருக்குள் வந்தது" என்ற சிறுவர் கவிதை நூல் பற்றிய திறனாய்வு முயற்சிகள் 2010 களில் ஒரு சில மட்டங்களில் செய்யப் பட்டிருந்தன. எனினும் அவை துர திஷ்டவசமாக எங்கும் தொகுக்கப் படாமல் போயின.

**நூல் சுருக்க விபரம் :**

"கடல் ஒருநாள் எங்கள் ஊருக்குள் வந்தது" என்ற இக் கவிதை நூல் மொத்தமாக 20 பக்கங்கள் கொண்ட, ஒரு சிறிய சிறுவர் கவிதை நூல் ஆகும்.

இது 2004 ஆம் ஆண்டில் ஏற்பட்ட சுனாமி கடற்கோள் அனர்த்தத்தை சிறுவருக்குப் புரியும் படியாக இலகு தமிழில் எழுதப்பட்ட ஒரு நீண்ட கவிதையைக்கொண்டது. அழகிய, கவர்ச்சியான அட்டைப் படம் ஆர்.எம். அஸ்மி என்பவரால் வடிவமைக்கப்பட்டுள்ளது.


சாய்ந்தமருது மாவடி வீதியில் உள்ள கல்முனை கலை இலக்கியப் பேரவையின் வெளி யீடாக வந்த இந்நூல் கல்முனை ஸாஹிரா கல்லூரி, சாய்ந்தமருது அல்.ஜலால் வித்தியாலயம், சாய்ந்தமருது அல். கமரூன் வித்தி யாலயம் ஆகியவற்றின் தோற்றத் துக்கும் ஆரம்பகால வளர்ச்சிக்கும் அடிநாதமாக விளங்கிய முன்னாள் கிராம சபை உறுப்பினர் மர்ஹூம். ஐ.அலியார் அவர்களுக்கும் அவருக்கு உறுதுணையாக இருந்த மர்ஹூமா ஏ. உதுமானாச்சி ஆகிய நூலாசிரியரின் பெற்றோருக்கு சமர்ப்பணம் செய்யப் பட்டுள்ளது.

**நூலின் முன் சோடனைகள்:**

இந்நூல்பற்றி நூலாசிரியர் தன் எண்ண வெளிப்பாட்டை "என்னுள் இருந்து" என்ற தலைப்பில் முக்கியமான சில விபரங்களைக் கூறியுள்ளார். அதில் அவர்

"........ ஆறு வருடங்களைக் கடந்து வந்த அனுபவக் கவிதை இது. அப்போதே பிரசுரித்திருக்கலாம்.பிரசுரமாகவில்லை. இப்போதுதான் பிரசுரம் ஆகின்றது என்பதனால் ஏதும் குறைந்து விட்டதாக எனக்குப் படவுமில்லை"

என்ற அவரது கருத்து காலம் கடந்தும் கவிதைகள் வாழும் என்பதை உறுதிப்படுத்துகின்றது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கடல் ஒருநாள் எங்கள் ஊருக்குள் வந்தது என்ற தலைப்பு சற்று நீளமானதுதான். பரவாயில்லை என்று அதனையே தலைப்பாக இட்டிருக்கிறேன்" என்று இன்னுமொரு கருத்தை முன்வைக்கிறார்.

கடல் அலைபோல் ஓசை எழுப்பி வருகிறது கவிதையின் தலைப்பு.

"அழிவிலிருந்து ஆக்கம் பெறுதல் என்பதே கவிதையின் உயிர்ப்பொருள். சிறுவர்களை மனதிற் கொண்டு இன நட்புறவு, ஒற்றுமை, முயற்சி என்ப வற்றின் ஊடாக எளிமையாக காட்சி வெளிப்பாடாக்கி, இக்கவிதையினைப் புனைந்துள்ளேன். இக்கவிதை நூல் ஆரம்பப் பிரிவில் கற்கும் மாணவர்களுக்கு மிகவும் பொருத்தமானது..."

என்று நூலின் நுழைவாயிலில் நூலின் நோக்கப் பொருளை தெளிவாக எடுத்துக் கூறியுள்ளார்.

கவிதையை முழுமையாக வாசித்து முடித்தால் நோக்கம் அடையப் பெற்றுள்ளது என்பதை அவதானிக்கலாம். அது நூலின் வெற்றியாகும்.

இந்நூலுக்கு ஒரு மதிப்புரை தந்துள்ளார் பேராசிரியர் சி.மௌனகுரு அவர்கள்.

பேராசிரியர் தன் உரையில்,

"....பேச்சுமொழியில் கவிபொழியும் மக்கள் நிறைந்த ஊர் சாய்ந்தமருதுவும் அயற் கிராமங்களும். பேச்சு மொழியில் சுனாமியின் அழிவைக் கூறுகிறார். அழிவை நினைத்து ஏங்காது ஆக்கத்தை நோக்கும் பார்வை மகிழ்ச்சி தருகிறது...".

என்று கூறியுள்ளார்.

அழிவில் இருந்து ஆக்கம் பெறும் உளவியல் கட்டமைப்புக் கவிதை என்ற பேராசிரியரின் கூற்று கவிதையை சிறப்பாகப் படம் பிடிக்கின்றது.

கவிதையும் பாடுபொருளும்:

"கடல்
ஒரு நாள் எங்கள்
ஊருக்குள் வந்தது.
சுனாமி என்று
சொல்லிக் கொண்டு
கடல்
ஒரு நாள் எங்கள்
ஊருக்குள் வந்தது"

"தோணிகள் உடைந்து
மரத்தில் தொங்கின.
வீட்டின் கூரைகள்
வீதிக்கு வந்தன.
பாலம் உடைந்து
பாதிகள் ஆயின.
பாடசாலைகள்
பார்வைக்கு மறைந்தன"

"வீடுகள் இன்றி
வீதியில் மக்கள்.
ஆயிரக் கணக்கில்



அகதி முகாம்கள்.
மரத்தின் கீழே
வகுப்பறைப் பாடம்
வைத்தியசாலை
வீதியின் ஓரம்"

"அறிவிப்பின்றி
அனர்த்தம் நிகழ்ந்ததால்
ஊரின் ஒரு பகுதி
உயிரையே இழந்தது.
சுனாமி என்ற
சொல்லைக் கேட்டு
எமனும்கூட
எரிச்சல் கொண்டார்"

மேற்படி வரிகளில் சுனாமி தந்த பேரழிவை ஆசிரியர் சிறாருக்குப் புரியும் மொழியில் மிகவும் எளிமையாக விளக்கியுள்ளார்.

சிறுவரின் மனதில் ஒரு சித்திரக்காட்சியாய் செதுக்கியுள்ளார். இலகுவாக மனனம் செய்யும் வகையிலும் இசைகூட்டிப் பாடும் வகையிலும் இயற்றியுள்ளார்.

"சுனாமி என்ற சொல்தான் புதிது
பூம்புகார் என்ற பழைய ஊரை
கடல் வந்துதான்
கடத்திச் சென்றதாம்
இலக்கிய ஏடுகள்
இதனைக் கூறின".

இவ்வரிசையில் நூலாசிரியர் உரத்த சிந்தனை, படிமங் களின் மேலாண்மை இல்லாமல், ஒரு பழைய வரலாற்று நிகழ்வை சுனாமியுடன் ஒப்பிட்டு விளக்கியுள்ளார்.

மற்றும் சுனாமி அனர்த்தத்தின்போது நான்கு சமயம் சார்ந்த மக்களும் தம் எல்லாப் பகைமைகளையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மறந்து மனிதாபிமானமாக ஒருவருக்கொருவர் ஒத்தாசையாக செயற்பட்டதை காமினி, கந்தசாமி, மத்தியு, தௌபீக் என்ற சமயப் பெயர்களை இலாவக மாக கையாண்டு விளக்கியுள்ளார்.

“நாடு முழுவதும் ஒன்றாய் ஆயின..
ஒற்றுமைக் கோஷம் ஓங்கி ஒலித்தது
எங்கள் நாடு எழுச்சி பெற்றது
இயற்கை அனர்த்தம் இறைவனின் பரிசு”.

“காலையில் விழுந்தால்
மாலையில் எழுவோம்.
மாலையில் விழுந்தால்
காலையில் எழுவோம்.
உலகில் மீண்டும்
உயர்வைப் பெறுவோம்.
அழிவில் இருந்து
ஆக்கம் பெறுவோம்”

ஏற்பட்ட இயற்கை அனர்த்தம் என்பது இறைவனின் பரிசு என்று நூலாசிரியர் நுட்பமாக ஒரு விடயத்தை குறிப்பிடுகிறார்.

சுனாமி அழிவால் இலங்கை மக்களிடையே ஏற்பட்ட இன, மத ஒற்றுமை, மனிதாபிமானம் போன்ற உன்னதநிலை இறைவனின் பரிசு என்பதைத் தொட்டு விளக்குகிறார்.

சுனாமியின் அழிவிலிருந்து ஆக்கம் பெறுதல் என்பதை அழகான முறையில் விளக்கியுள்ளார்.

**நூலாசிரியர் பற்றி:**

நூலின் இறுதியில் “ஓசை எழுப்பாமல் ஒரு புல்லாங்குழல்” என்ற தலைப்பில் இந்நூலாசிரியர் பற்றி சில விபரங்கள் தொகுக்கப்பட்டுள்ளன.

கல்முனையில் கேட்முதலியார் எம்.எஸ். காரியப்பர் (பா.உ) அவர்களின் தலைமையில் 1967 இல் நடைபெற்ற மீலாத் விழா பேச்சுப் போட்டியில் பீர் முகம்மது முதலிடம் பெற்றார். இதற்காக தமிழகத்தி லிருந்து வருகை தந்த அன்பர் பூபதிதாசன் அவர்களால் தங்கப் பதக்கம் அளித்து கவிஞர் கௌரவிக்கப்பட்டார் என்ற தகவல் காணப்படுகின்றது.

ஸாஹிரா கல்லூரியின் வெளியீடான ““சாஹிரா”, நிழல்”, மற்றும், சம்மாந்துறை வலயக் கல்வி அலுவலக வெளியீடான “வசந்தம்”, பலாலி ஆசிரிய கலாசாலை வெளியீடான “யாழ்.பிறை”, “கலாவதி” முதலான பல சஞ்சிகைகளுக்கு பொறுப்பாசிரியராக இருந்துள்ளார் என்ற செய்தியும் உள்ளது.

“அரசியல் வானில் அழகிய முழுநிலா” என்ற ஸ்ரீல.மு.கா.கட்சியின் தலைவர் எம்.எச்.எம். அஷ்ரப் பற்றிய கவிதைத் தொகுதியின் பதிப்பாசிரியாக இருந்துள்ளார் என்ற செய்தியும்

செங்கதிர் சஞ்சிகையில் இரண்டாம் விஸ்வா மித்திரன் என்ற புனைபெயரில், முப்பதுக்கும் மேற்பட்ட இலங்கை எழுத்தாளர்களின் நூல்கள் பற்றிய திற னாய்வை செய்துள்ளார் என்ற செய்தியும் தகவல்களாக நூலில் காணப்படுகின்றன.

**பின்னட்டைக் குறிப்பு:**

இந்நூலுக்கு ஒரு பின்னட்டைக் குறிப்பு வழங்கியுள்ள கலாபூஷணம் மர்ஹூம் யூ.எல். ஆதம் பாவா அவர்கள், நூலாசிரியர் பற்றிக் கூறுகையில், “...புலமைத் தேடலில் இன்னும் சலிக்காது நீந்துபவர். வெண்பா தொடக்கம் நூல் விமர்சனம் ஈறாக இலக்கி யத்தில் பல்துறை ஆட்டக்காரரான ஏ. பீர்முகம்மது அவர்கள் இன்னும் பல நூல்களை நல்க வேண்டும்....” என்று கூறியுள்ளார்.

சிறுவர் நூலுக்கான சிறப்பம்சங்களான பெரிய எழுத்து, கவர்ச்சியான அட்டை, சிறுவர் பயன்பாட்டு முறையில் மீண்டெழும் சொற்கள் என்று சிறுவர் நூலுக்கான தேவைகளை அழகாகவும் அளவாகவும் கொண்டமைந்த நூல் இது.

சிறுவர் கவிதையுலகம் இதன் மூலம் இன்னு மொரு சிறப்பான கவிதை நூல் ஒன்றைப் பெற்றுக் கொண்டது.

**முடிவாக.**

கடல் ஒருநாள் எங்கள் ஊருக்குள் வந்தது என்ற சிறுவர் கவிதை நூலுடன் இதுவரை கட்டுரை வாழ்வியல் ஆய்வு சிறுகதை பாடநூல்கள் என்று ஒன்பது நூல்களை வெளியிட்டுள்ள கவிஞர் மேலும் பல நூல்களை வெளியிடுவார் என்பதோடு சிறுவர் நூல்களையும் தருவார் எனவும் எதிர்பார்க்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நேர்காணல்

பீர் முகம்மது அவர்கள் பல்துறை ஆளுமையுள்ள படைப்பாளர். படைப்பாளர் என்பதற்கும் அப்பால் சிறந்ததொரு கல்வியியலாளர். இலக்கியப் பரம்பரையில் தோன்றியவர். ஆழ்ந்த தமிழ்ப்புலமை மிக்கவராக காணப்படுகின்றார். சிறுகதை, கவிதை, ஆய்வு, கட்டுரை, விமர்சனம் என இலக்கியத்தின் பல்வகைமைகளிலும் இயங்கி வருபவர். இரண்டாம் விசுவாமித்திரன் என்னும் புரனபெயரிலும் எழுதி வருபவர். ஜீவநதி வாசகர்களுக்கு பீர் முகம்மதுவின் நேர்காணழல தருவதையிட்டு மகிழ்கின்றோம்.

ஏ. பீர்முகம்மது
சந்திப்பு : பரணீ

**பரணீ :**

**வாசகர்களின் நலன்கருதி உங்கள் இலக்கியப் பின்னணி பற்றியும் குடும்பப் பின்னணிபற்றியும் கூறுங்கள்.**

**பீர் முகம்மது:**

என்னுடைய குடும்ப உறுப்பினர்கள் பலரும் இலக்கியத்தோடு தொடர்புபட்டவர்கள்.

எனது தந்தை பள்ளு பிரபந்தம் என்னும் இலக்கிய வடிவத்தைக் கையாண்டு பாடல் இயற்றும் திறன் வாய்த்தவர்.

இதுபற்றி "சாய்ந்தமருது வரலாறு" என்ற நூலிலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

எனது தாய் "நல்லதங்காள் கதை" "சேவல் பாட்டு" போன்ற வற்றைத் தன் பிள்ளைகளுக்கு வாசித்து விளக்கும் தன்மையினர். மூத்த சகோதரன் மணிப்புலவர் மருதூர் ஏ.மஜீது. பிரபல தமிழ் எழுத்தாளர். சிறுகதை, கவிதை, கட்டுரை, ஆய்வு என்று இருபதுக்கு மேற்பட்ட நூல்களை வெளியிட்டவர். இரண்டாவது சகோதரன் ஏ.எம்.கான். பிரபல தமிழாசிரியர். நாடகம், வில்லுப்பாட்டு போன்ற வற்றில் ஈடுபாடு கொண்டவர். அத்துறையில் மாணவர்களைப் பயிற்றுவித்தவர். இன்னுமொரு சகோதரர் கவிஞர் மருதூர் அலிக்கான். ஊடகவியலாளராக இருந்தவர். பல சிறுகதைப் போட்டிகளில் பரிசு வென்றவர். இன்னுமொரு சகோதரன் ஏ. அக்பர் அலி. "எழுபதுகளில் கவிதைகளை எழுதியவர்" என்று எமது பிரதேச வரலாற்றுக் குறிப்புகள் தகவல் தருகின்றன. கடைசித் தம்பி மருதூர் ஹசன். "அனாமிகா" என்ற கவிதைத் தொகுதி உட்பட மூன்று நூல்களை வெளியிட்டவர். கிழக்கிலிருந்து நாடகக் குழுக்களை தலைநகர் கொழும்புக்கு அழைத்துச் சென்று பிரபல நாடக அரங்குகளில் நாடகங்களை அரங்கேற்றியவர்.

எனதான இலக்கியச் செயற்பாடுகளுக்கும் அப்பால் இத்தகைய குடும்பத்தைச் சேர்ந்தவன் என்ற பரவலான ஒரு அறிமுகமும் எனக்கு இருக்கிறது.

ஆனால் எனது இலக்கிய ஆர்வத்தின் பின்னால் இன்னுமொரு காரணமும் உண்டு.

எனக்குத் தமிழ் கற்பித்த ஆசிரியர்கள் அனைவரும் பிரபல தமிழ் அறிஞர்களாகவும் இலக்கியவாதிகளாகவும் இருந்தனர்

ஆரம்ப வகுப்புக்களில் வே. கனகசபை (அழகையா மாஸ்டர்) என்ற அழகியற் கலை ஆசிரியர் எனக்கு மூன்றாம் வகுப்பிலேயே தமிழார்வத்தை ஊட்டினார். நாடகங்களில் முக்கிய பாத்திரமேற்று நடிக்கவும் பயிற்சி தந்தார்.

பேராசிரியர் சி.மௌனகுரு, தமிழ் அறிஞர் மா.சிவராசா, இஸ்லாமிய தமிழறிஞர் ஜே.எம். எம். அப்துல் காதிர், பன்னூலாசிரியர் எஸ்.எச்.எம்.ஜெமீல், மணிப்புலவர் மருதூர் ஏ.மஜீது, கலாபூஷணம் யூ.எல்.ஆதம்பாவா, கவிஞர் ஏ.யூ.எம்.ஏ கரீம் போன்றவர்களிடம் தமிழ் ஓதும் பாக்கியம் எனக்குக் கிடைத்தது. கவிஞர் சண்முகம் சிவலிங்கம் ஆங்கில இலக்கியம் பற்றி எனக்கு அறிமுகம் செய்தவர்.

இவர்கள் அனைவரும் ஏதோவொரு வகையில் தமிழ் அறிந்த இலக்கிய விற்பன்னர்களாக இருந்தனர். அது என் பேறு.

**பரணீ :**

**தங்களின் இலக்கியப் பயணம் தொடங்கிய தகவல்களைத் தாருங்கள்.**

**பீர் முகம்மது :**

பத்தாம் வகுப்பு பயிலும் காலத்திலேயே இளம்பிறை என்ற சஞ்சிகையை சந்தா கட்டி நான் வாங்கி வாசித்தவன். அச்சஞ்சிகை இஸ்லாமிய கோலம் காட்டினாலும் சரிக்குச் சரியாக தமிழர்களும் முஸ்லிம்களும் அதில் இலக்கியம் பரிமாறி வந்தனர். எஸ்.பொன்னுத்துரை கவிஞர் மஹாகவி பேரா.சதாசிவம் ஜே.எம்.எம். அப்துல் காதிர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன்றவர்களின் ஆக்கங்கள் அதில் வெளி வந்தன. குறிப்பாக எஸ்.பொன்னுத்துரை கவிஞர்மஹாகவி ஆகியோரின் எழுத்திலும் கவிதையிலும் எனக்கு ஈர்ப்பு ஏற்பட்டது. கவிஞர் மஹாகவியின் குறும்பாக்களை வாசித்ததன் மூலம் என்னாலும் குறும்பா எழுத முடியுமா? என்ற ஒரு கேள்வி எனக்குள் உருவாவதை நான் உணர்ந்தேன். 1965 செப்ரம்பர் இதழில் எனது குறும்பா இளம்பிறையில் பிரசுரமானது.

இதனை எழுதியதன் மூலம் கவிஞர்மஹாகவி குறும்பாவை தமிழுக்கு அறிமுகம் செய்த புதிதில் குறும்பாவை உரிய வடிவத்தில் எழுதியவர் என்ற பெருமை கிடைத்தது.

அன்றிலிருந்து இன்றுவரை குறும்பாவோடு தொடர்புபட்டிருப்பவன் என்ற உரிமை எனக்கு இருக்கிறது. எழுபதுகளின் பின்னரே பலரும் குறும்பா எழுதத் தொடங்கினர் என்பது வரலாறு.

அன்று தொடங்கிய எனது இலக்கியப் பயணம் இன்றுவரை நீண்டிருக்கிறது. ஆனாலும் 60 வருட கால இலக்கியச் செயற்பாட்டில் நான் தொடர்ந்து இயங்கி வந்தேன் என்று சொல்வதற்கில்லை. இயங்கு நிலையிலும் உறங்கு நிலையிலும் என்று அந்த காலங்கள் கழிந்தனவே தவிர 60 வருடகால தொடர் இலக்கியப் பணியில் எனது வரலாறு இல்லை என்பதுதான் உண்மை.

**பரணீ :**

**நீங்கள் இயங்கிய துறைகள் எவை எனச் சொல்ல முடியுமா?**

**பீர் முகம்மது:**

ஆரம்ப காலத்தில் கவிதைத்துறையில் எனக்கு ஈடுபாடு இருந்தது, பின்னர் சிறுகதைகள் எழுதினேன். கட்டுரை சொற்பொழிவு என்று காலம் கழிந்தது.

புதிய நூற்றாண்டு உதயமானபோது மீண்டும் இலக்கியத்தின் மீதான ஆர்வம் ஏற்படலாயிற்று. கவிதை கவியரங்கம் கவியரங்கத் தலைமை நூல் வெளியீட்டு உரைகள் என்று தானாகவே காலம் தள்ளிப் போய்க் கொண்டிருந்தது.

அவ்வேளையில்தான் செங்கதிரோனை ஆசிரியராகக் கொண்டு கிழக்கிலிருந்து வெளிவந்த "செங்கதிர்" சஞ்சிகை விசுவாமித்திர பக்கம் ஒன்றை ஆரம்பித்து இரண்டாம் விசுவாமித்திரன் என்ற புனைபெயரில் சுதந்திரமாக இயங்குவதற்கு என்னை அழைத்தது.

சமகால இலக்கிய சமாச்சாரங்களுக்குள் மூக்கை நுழைத்து சூடும் சுவையுமாகத் தந்து இரண்டாம் விசுவாமித்திரன் செங்கதிரின் விசுவாமித்திர பக்கத்தில் உற்சாகமாக உலா வந்தான்.

மீண்டும் கவிதை கட்டுரை சிறுகதை திறன் நோக்கு என்று என் பணி பரவலாகத் தொடங்கிற்று.

செங்கதிர் தனது பயணத்தை முடித்துக் கொண்டபோது தமிழ்த் தேசியப் பத்திரிகைகளுக்கு வெளியே ஜீவநதி, ஞானம் போன்ற சஞ்சிகைகளில் எனது ஆக்கங்கள் வெளிவரத் தொடங்கின.

இன்றுவரையான என் எழுத்தூழியம் தோளில் இலக்கியத்தைச் சுமந்து திரிகிறது.

**பரணீ :**

**சமகாலத்தில் எத்துறையில் நீங்கள் ஈடுபட்டு வருகின்றீர்கள்?**

**பீர் முகம்மது :**

எந்தத் துறையிலும் இருந்து நான் விலகி இருக்கவில்லை. பரந்தும் பறந்தும் திரியும் என் மனம் இன்றுவரை இலக்கியத்தின் எல்லாத்துறைகளிலும் இருக்கவும் சுவைக்கவும் விரும்புகின்றது.

தேவைப்பட்டால் கவிதைகளை எழுதி பத்திரிகை சஞ்சிகைகளுக்கு அனுப்பி மகிழ்கிறேன். இணைய இதழ்களிலும் இலக்கிய சஞ்சிகைகளிலும் சிறுகதைகள் சிற்றாய்வுக்கட்டுரைகள் எழுதி என் பொழுது கழிகிறது.

கடந்த இரண்டு வருடங்களில் (2021 - 2022) இரண்டு வாழ்வியல் ஆய்வு நூல்களை வெளியிட்டேன்.

இந்த வருடப் பிறப்பின்போது "தைலாப் பொட்டி" என்னும் சிறுகதைத் தொகுதி வெளியாகி இருந்தது.

தொடர்ந்தும் சிறுகதைகளை எழுதவே என் மனம் விண்ணப்பிக்கின்றது.

எதிர்காலத்தில் சிறுகதைகளை எழுதவும் இஸ்லாமிய சரித்திர நாவல் ஒன்றை எழுதவும் உத்தேசம் உள்ளது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரணீ:

**பிரபல எழுத்தாளர் எஸ்.பொன்னுத்துரை முஸ்லிம்களுடன் கொண்டிருந்த தொடர்புகள்பற்றி நூல் ஒன்றை எழுதியுள்ளீர்கள். எஸ்.பொ மீதான ஈர்ப்பின் பின்னணி என்ன?**

பீர் முகம்மது :

இளம்பிறை என்ற சஞ்சிகை ஊடாகவே அவரின் எழுத்து எனக்குப் பரிச்சயமானது. மொழியும் எழுத்தும் அவருக்குச் சேவகம் செய்யும் பாங்கினை அப்பொழுது விளங்கிக் கொண்டேன்.என்னை மீறிய ஒரு தவிப்பு அவரில் எனக்கு ஏற்பட்டது.

நான் கல்வி கற்று வந்த வந்தாறுமூலை மத்திய கல்லூரியில் அவர் ஆசிரியராக இருந்தவர். அவரிடம் நான் பாடம் கேட்கவில்லை. அவர் இடம் மாற்றம் பெற்றுச் சென்ற பின்னாலும் அவர் பற்றிய பேச்சு பாட சாலை எங்கும் வியாபித்திருந்தது. ஓய்வு நேரமெல்லாம் நண்பர்கள் சேர்ந்தால் "பொன்னுத் துரை உலா" பற்றியே பேசுவோம்.

மட்டக்களப்பில் அவர் கலந்து கொள்ளும் எல்லா இலக்கியக் கூட்டங்களிலும் தவறாது கலந்து கொள்வேன். அவரோடு கதைத்துள்ளேன். பேசிப் பழகியுள்ளேன்.

எனது இலக்கிய நண்பர்கள் என்னிடம் கேட்டுக் கொண்டதற்கு இணங்க கல்முனையில் ஒரு கூட்டம் ஒழுங்கு செய்யப்பட்டது. அதில் வந்து அவர் உரை யாறினார்.

அவர் எழுதிய எல்லா நூல்களும் (ஒரு சில தவிர) என்னிடம் உள்ளன. அவர் பற்றிய நூல்களும் உள்ளன.

"வரலாற்றில் வாழ்தல்" என்ற அவரின் சுய சரிதை நூலையும் "இஸ்லாமும் தமிழும்" என்ற நூலையும்பல தடவைகள் வாசித்துள்ளேன்.

வரலாற்றில் வாழ்தல் என்ற நூலில் அவரிடம் எழுத்துப் பயின்றவர்களின் பட்டியலில் எனது பெயரும் உள்ளது.

2014 நவம்பரில் அவர் மரணித்தபோது மட்டக்களப்பில் நடைபெற்ற இரங்கல் கூட்டத்தில் நான் உரையாற்றினேன்.

கூட்ட முடிவில் தலைமை தாங்கியவர் என்னிடம் "எஸ்.பொன்னுத்துரையிடம் படித்த நீங்களோ" என்று கேட்டார்.

"நான் அவரிடம் படிக்கவில்லை. அவரைப் படித்திருக்கிறேன்" என்று பதில் சொன்னேன்.

"எஸ்.பொன்னுத்துரை முஸ்லிம்களுடனான உறவும் ஊடாட்டமும்" என்று நான் எழுதிய நூல் முஸ்லிம்களுடன் அவர் கொண்டிருந்த தொடர்பை மட்டுமல்ல முஸ்லிம் தமிழ் உறவின் தேவையையும் ஒலிபரப்புச் செய்தது.

அந்த நூல் புலம்பெயர் நாடுகளில் எனக்கான ஒரு அறிமுகத்தைப் பெற்றுத் தந்தது.

பரணீ :

**நீங்கள் "திறனாய்வு என்ற சொல் காலாவதியாகி விட்டது" என்று எழுதியும் பேசியும் வருகிறீர்கள். இதுபற்றி கொஞ்சம் விபரம் தர முடியுமா?**

பீர் முகம்மது :

ஆரம்பகாலங்களில் இலக்கியத்தில் நூல் மதிப்பீட்டுத் துறையில் விமர்சனம் என்ற சொல் பயன் பாட்டில் இருந்து வந்தது. தமிழ்நாட்டில் சினிமா,நாடகம் போன்ற துறைகளில் விமர்சனம் என்ற சொல் இன்றும் கூட கோலோச்சுகின்றது.

முதன்முதலாக பேராசிரியர் ஆ.முத்து சிவன் என்பவரே "அசோகவனம்"(1944) என்ற நூலில் "கிரிட்டிஸம்"(criticism) என்ற ஆங்கிலச் சொல்லுக்கு மாற்றுத் தமிழாக "விமர்சனம்" என்ற சொல்லைப் பயன்படுத்தினார்.

அதனைத் தொடர்ந்து தமிழக பேராசிரியர் அ.ச.ஞானசம்பந்தன் என்பவர் 1940களில் பச்சையப்பன் கல்லூரியில் மாணவர்களுக்கு இலக்கிய விமர்சனம் (literary criticism ) என்ற பாடத்தைக் கற்பிக்கத் தொடங்கியபோது விமர்சனம் என்ற சொல்லை விரும்பாமல் எதேச்சையாக எந்தவொரு கலந்துரை யாடலோ தேடலோ இன்றி விமர்சனம் என்ற சொல்லுக்கு ஈடாக திறனாய்வு என்ற சொல்லை அறிமுகப்படுத்தினார். கலைமகளில் கட்டுரை எழுதினார்.

"திறனாய்வு என்ற சொல் "ஆக்ஸிடெண்டலா" வந்ததே தவிர நான் அதைத் தேடிப் போனேன் என்று சொல்வது முறையல்ல" என்று பேரா. அ.ச.ஞான சம்பந்தன் ஒரு கேள்விக்குப் பதில் தெரிவித்துள்ளார்.

"பேராசிரியர் அ.ச.ஞாவின் பதில்கள்" என்ற நூலில் 40ம் பக்கத்தில் இந்தத் தகவல் பதிவாகி உள்ளது.

இவ்வாறான ஒரு சூழ்நிலையில்தான் பலரும் திறனாய்வு என்ற சொல்லை இறுகப் பிடித்துக் கொண்டார்கள்.

இலங்கையில் திறனாய்வு என்ற சொல்லைப் பரவலான பயன்பாட்டுக்குக் கொண்டு வந்தவர் பேரா.க..கைலாசபதி அவர்கள்.

திறனாய்வு என்ற சொல் அறிமுகமான காலத்திலும் மிக அண்மைக் காலத்திலும் பொருத்த மான ஒரு சொல்லாக அது இருக்கலாம். ஆனால் தற்போது திறனாய்வு என்ற சொல் பொருத்தமற்றது என்று நான் கருதுகின்றேன்.

திறனாய்வு என்ற சொல்லில் உள்ள "ஆய்வு" என்ற சொல்லின் ஆழமும் நூல் மதிப்பீடுகளைப் பேராசிரியர்களே மேற்கொள்ளும் சாத்தியத்தை வெளிப் படுத்தின. அதனால் பல்கலைக்கழக தமிழ்த் துறை யினரே பெரும்பாலும் அத்தகைய முயற்சிகளில் ஈடுபட்டனர்.

பல்கலைக்கத்துக்கு வெளியே மூத்த தலை முறையினர் என்ற வகையில் எஸ்.பொன்னுத்துரை, கே.எஸ். சிவகுமாரன் போன்ற ஒரு சிலரே இத்துறையில் இருந்தனர்.

ஆனால் இன்றைய தமிழ்இலக்கியப் வெளியில் பேராசியர்களைவிட பல்கலைக்கழகங்களுக்கு வெளி யில் அதிக எண்ணிக்கையில் பலர் இத்துறையில் ஈடுபட்டு வருகின்றனர்.

நாளொரு வண்ணமும் பொழுதொரு மேனியு மாக நூல் மதிப்பீடுகள் இடம் பெறுகின்றன.நூல் எப்போது வெளிவரும் என்று காத்திருந்து வெவ்வேறு கோலங்களில் அவை இன்று தோற்றம் தருகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே தான் திறனாய்வு என்ற சொல்லுக்கு ஈடாக புதிய சொல் ஒன்றின் தேவை உள்ளது என்று நான் கருதினேன்.

திறனாய்வு என்ற சொல் காலாவதியாகி விட்டது என்றும் அச்சொல் திறன் நோக்கு என்பதால் பிரதியீடு செய்யப்பட வேண்டும் என்று நான் எழுதியும் பேசியும் வருகிறேன்.

**பரணீ :**

**திறன் நோக்கு என்ற சொல்லைத் தேர்ந்தெடுத்தமைக்கு ஏதும் பின்னணி உள்ளதா?**

**பீர்முகம்மது :**

ஏற்கனவே நான் சொன்னதைப்போல அறுபது எழுபதுகளில் இளம்பிறை சஞ்சிகை நான் இலக்கியம் பயில உறுதுணையாயிருந்தது.

அச்சஞ்சிகையில் எஸ்.பொ போன்றவர்கள் "நோக்கு" என்ற சொல்லைப் பயன்படுத்தி வந்தனர்.

செங்கதிர் சஞ்சிகையில் இரண்டாம் விசுவா மித்திரன் என்ற புனைபெயரில் நூலாய்வு மதிப்பீடுகளை நான் மேற் கொண்டபோது "நோக்கல்" என்ற சொல்லைப் பயன்படுத்தினேன்.

நூல் மதிப்பீட்டுக் கட்டுரைகளைத் தொகுத்து நூலாக வெளியிட்டபோது திறன் நோக்கு என்ற சொல்லை அறிமுகம் செய்தேன்.

திறன் நோக்கு என்ற சொல் திறனாய்வு என்ற சொல்லுக்கு இணையானதும் பொருத்தமானதும் என்று நான் இன்றுவரை விசுவாசிக்கின்றேன்.

**பரணீ :**

**இது தொடர்பில் நீங்கள் ஏதாவது எதிர்வினைகள் பெற்றுக் கொண்டீர்களா?**

**பீர்முகம்மது :**

பெரிதாக எதிர்வினைகள் எதனையும் நான் பெற்றுக் கொள்ளவில்லை. அது பற்றி நான் கவலைப் படவும் இல்லை.

பேராசிரியர் செ.யோகராசா மாத்திரம் என்னிடம் தொடர்பு கொண்டு திறன் நோக்கு என்ற சொல் பற்றி கலந்துரையாட வேண்டுமென்று கேட்டிருந் தார். அதற்கான வாய்ப்பு வராமலே போயிற்று.

முகநூலில் சிலர் எழுதும் நூல் மதிப்பீடு களுக்கு திறன் நோக்கு என்று தலைப்பிட்டு எழுதுவதை அவதானித்துள்ளேன். நூல் வெளியீட்டு அழைப்புகள் சில திறன் நோக்கு என்ற சொல்லைத் தாங்கி வெளிவர ஆரம்பித்துள்ளன.

நான் தமிழ் இலக்கிய வெளியில் எனது கருத்தைப் பிரேரித்துள்ளேன். அவ்வளவுதான்.

நான் ஒரு பல்கலைக்கழக பேராசிரியர் அல்லவே. திறன் நோக்கு என்ற சொல்லை ஒரு பேராசிரியர் முன் மொழிந்திருந்தால் எந்த எல்லை வரை அது சென்றிருக்கும் என்பது நாம் அனைவரும் அறிந்ததே.

பேராசிரியர்களான ஆ.முத்துசிவன், அ.ச. ஞானசம்பந்தன் தொடங்கி இன்றுவரை நிலைமை அதுதான்.

திறனாய்வு என்ற சொல்லுக்குப் பதிலாக திறன் நோக்கு என்ற சொல்லையோ அல்லது அதற்கு ஈடான இன்னுமொரு சொல்லையோ பல்கலைக்கழக தமிழ்த் துறை நமக்குத் தரும்வரை காத்திருப்போம்

**பரணீ :**

**நீங்கள் எழுதிய ஒன்பது நூல்களில் உங்களுக்கு மனத்திருப்தி தந்த நூல் எது?**

**பீர்முகம்மது :**

விபுலாநந்த அடிகளும் முஸ்லிம்களும் என்ற நூல்தான். 2013 இல் வெளியானது. எனது முதலாவது ஆய்வு நூல். அது என்னை ஆய்வின் பக்கம் அழைத்துச் சென்றது.

தமிழ் முஸ்லிம் உறவை ஒவ்வொரு அத்தியாய மும் வலியுறுத்தியது. விபுலாநந்தர் இலங்கையில் கலந்துகொண்ட கடைசி விழா மட்டக்களப்பு மீலாத் விழா என்பதை ருசுப்படுத்தியது. விபுலாநந்த அடிகளுக்கு அறபு மொழி தெரியும் என்பதை பல ஆதாரங்களோடு எண்பித்தது.

அந்த நூல் மீதான எனது திருப்தி மகா விசேஷமானது.

**பரணீ :**

**ஜீவநதி தொடர்பில் ஏதாவது கூற விரும்புகிறீர்களா?**

**பீர்முகம்மது :**

தமிழ் இலக்கியப் பரப்பில் இலங்கையிலும் இலங்கைக்கு வெளியிலும் ஜீவநதியின் பெரும் இலக்கிய அர்ப்பணிப்பினையும் பங்களிப்பினையும்பற்றிப் பேசப் படுவதை நான் அறிவேன்.

2007 தொடங்கி இன்றுவரையான 17 வருட கால இடைவெளியில் 220 இதழ்களை வெளியிட்டு எம்மை ஆச்சரியப்படுத்தி இருக்கிறது.

இலங்கையில் இருந்து வரும் சிறந்த சஞ்சிகை களுக்காக கு.சின்னப்பாரதி விருது உட்பட இரண்டு இந்திய விருதுகளை சஞ்சிகை தொடங்கி மிகக் குறுகிய காலத்தில் பெற்றுக் கொள்வது என்பது சாதாரண விடயமல்ல.

புலம்பெயர் நாடுகளுக்கான சிறப்பிதழ்

பெண்ணியச் சிறப்பிதழ் இளம் எழுத்தாளர் சிறப்பிதழ், சிறுகதைச் சிறப்பிதழ் ஈழத்து நாவல் விமர்சனச் சிறப்பிதழ், சிற்றிதழ்ச்சிறப்பிதழ், சாதியச் சிறப்பிதழ் என்று ஜீவநதி கைதட்டல் வாங்கி இருக்கிறது. நாவல் இலக்கியச் சிறப்பிதழில் எனது கட்டுரையும் பிரசுரமாகியுள்ளது.

தமிழ் முஸ்லிம் மலையக எழுத்தாளர்களை வரவேற்று மகிழ்வதும் பிரதேச வேறுபாடுகளை ஒறுத்து யாதும் ஊரே யாவரும் கேளிர் என்று அழைத்துச் செல்வதும் ஜீவநதியின் தமிழ் ஊழியம்.

இப்போது ஆளுமைச் சிறப்பிதழ்களை வெளியிட்டு வருவது மகிழ்ச்சியான செய்தி. எதிர் காலத்தில் ஜீவநதியின் சிறப்பிதழ்கள் சமூக ஆவணமாக (Social Document) அங்கீகரிக்கப்படும் என்பது என் விசுவாசம்.

ஜீவநதிக்கு என் வாழ்த்தும் மகிழ்ச்சியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏ.பீர் முகம்மது

இந்தக் கதையின் நாயகன் தீவிர கொரோனா நோயாளி. நாலு நாளாய் ஆஸ்பத்திரிக் கட்டிலில் படுத்துக் கிடக்கிறான். இந்த நாலுநாள் வாழ்க்கையை நினைத்துப் பார்க்கிறான்.

"என்ன வருத்தமெண்டாலும் வந்து எண்ட உசிரு போகட்டும். இந்தக் கொரோனாவால மட்டும் எண்ட உசிரு பொய்த்திரப் போடா. புள்ள குட்டிகளுக்கு அது பெரிய வடுவாப் போயிரும்"

நினைவுகளின் துளிர்ப்பு. அடிக்கடி தனியாக மனதுக்குள் கதைப்பதும் நடந்ததை நினைத்து இரை மீட்டுவதுமாக அவன்.

அசைபோடும் மாடுதானே மனிதன்.


மெயின் வீதியைக் கடந்து செல்லும் மண்புழுவின் வேகத்தில் நாலு நாட்கள் கடந்து விட்டன.

"ஊர உட்டு வந்து நாலுநாள். அதில ஊர் ஆஸ்பத்திரில ஒருநாள். பக்கத்து ஊர் பெரியாஸ்பத்திரில ரெண்டு நாள். பொறகு இந்த ஆஸ்பத்திரில ஒரு நாள். எல்லாமா நாலுநாள். பொஞ்சாதி புள்ளைகள் எல்லாரையும் கொண்டுபோய் தனியா ஆக்கள வெச்சிரிக்கிற எடத்தில வெச்சிரிக்காங்களாம். கொரோனாவாம். புதுநாணயமான கொரோனா நோய். இதுமாதிரி தொத்து நோயொண்டு முந்தின காலத்தில வந்ததா கேள்விப்பட்டிரிக்கன். சின்னப்புள்ளைக்கும் தெரியிது கொரோனா பொறுப்பான நோயெண்டு. ஆண்டவன் நம்முட தலையில இந்த நோயக் கொண்டந்து எறக்கி இரிக்கான். டீவி செய்தியக் கேட்டா கொரோனாட படத்தத்தான் போட்டுப் போட்டுக் காட்ராக. வம்மிப் பூ மாதிரி அதுர படம் இரிக்கி. வம்மிப் பூவ பாத்தா வடிவா இரிக்கும். பயம் வெர மாட்டா. ஆனா அந்தப் படத்தப் பாத்தா பயமா இரிக்கி. ராவு கனவுலயும் வம்மிப்பூ வம்மிப் பூவா வந்துக்கிட்டே இருந்திச்சி. வெள்ளக்காரன்ட ஊருலயும் வம்மி மரம் நிக்கி தாக்கும். இல்லாட்டி ஏன் அந்தப் பேர வெய்க்கான்".

அவனைப் படாத பாடுபடுத்தும் நாலுநாள் நினைவுகள். தனது நிலையை எண்ணிக் கவலைப்பட்டுக் கொண்டான். மரணத்திற்குப் பயமில்லை. ஆனால் கொரோனா நோயால் மரணம் என்ற பெயர் வந்து விடக்கூடாது என்பது அவனது தீராத விருப்பம்.

மதபோதகர்களைவிட வாழைப்பழத்தில் ஊசி ஏற்றும் பாங்கில் மிக இலகுவாக மரணத்தை நினைவூட்டிவிடுகிறது ஆஸ்பத்திரிக் கட்டில்.

# வம்மிப் பூ





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீட்டில் இருந்தபோது தடிமனும் வரண்ட இருமலும் காய்ச்சலும் அவனை வாட்டி எடுத்தது. எலுமிச்சை பழச்சாறு குடித்துக் குடித்துப் பேசாமல் இருந்து விட்டான். பெனடோல் மாத்திரை அவனின் காய்ச்சலைக் குறைக்கவும் இல்லை. கொரோனா வந்தால் எப்படியெல்லாம் ஆகுமோ என்ற கவலையில் மூடி மறைக்க முயற்சித்தான். மூச்சு விடுவது கஷ்டமாக இருந்தபோதுதான் ஆஸ்பத்திரிக்குப் போய் பார்க்க வெளிக்கிட்டான்.

கொரோனாவாக இருக்கலாம் என்று சந்தேகப் பட்டு அவனப் பிடித்து ஆஸ்பத்திரிக் கட்டிலில் படுக்க வைத்துவிட்டார்கள். ஒருநாள் வைத்திருந்துவிட்டு மேலதிக சோதனைக்காகப் பக்கத்து ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தார்கள். இரண்டு நாள் சோதனை களுக்குப் பிறகு கொரோனா உறுதிப்படுத்தப்பட்டு இந்த ஆஸ்பத்திரிக்கு அனுப்பியிருக்கிறார்கள்.

சிலர் கொரோனாவில் இருந்து பூரண குணம் அடைந்து வீட்டுக்குப் போகிறார்கள் என்பதை அவன் இங்கு வந்து ஒரு நாளைக்குள் அறிந்து கொண்டான். அவனுடைய மனம் வீடு திரும்பி விடலாம் என்றுதான் சொல்லிக் கொண்டிருந்தது.

மீண்டும் அசை போடுதல்.

"இங்கு வந்ததில இருந்து பிஎச்ஐமாரு வந்து கேட்ட கேள்வியப் பாத்தா கோபம் பத்திக்கிட்டு வருகுது. எங்கிட ஊட்ல இருந்து கொஞ்சம் தூரத்தில ஆலமரத்துச் சந்தி இரிக்கி. அந்தச் சந்தில இருந்து நாலு எட்டு நடந்தா கீச்சார்ர ஒழுங்க வரும். ஏழெட்டு நாளைக்குள்ள அந்த ஒழுங்கயால எங்கயும் போனயா எண்டு பீஎச்ஐ கேக்கான். கீச்சார்ர ஒழுங்கயப்பத்தி அவன் ஏன் எனக்கிட்டக் கேக்கணும். கேட்டுப் போட்டு பக்கத்தில இருந்தவனுக்கிட்ட கண்ணக் காட்டிச் சிரிக்கான். பொறகு வாறம் எண்டு சொல்லிப் போட்டு அவனுகள் போயிட்டானுகள். எனைக்கிண்டா வேருத் துக் கொட்டுது. என்ன இருந்தாலும் கொரோனா காலத் தில அந்த ஒழுங்கப் பக்கம் போயிருக்கப்படா. அந்த வெசயம்தான் எண்ட மனசப் போட்டுக் கொல்லுது"

ஆஸ்பத்திரி கொரோனா நோயாளிகளால் நிரம்பி வழிகின்றது. வைத்தியர்கள் தாதியர்கள் சுகாதாரப் பரிசோதகர்கள் என்று எல்லோரும் விண்வெளி வீரர்களைப்போல உடை அணிந்து காட்சி தருகிறார்கள். சில நோயாளிகளை பொலிசாரும் வந்து விசாரணை செய்வது தெரிகிறது. நோயாளிகளைப் பார்வையிடும் நேரம் என்ற விளம்பரப் பலகையை கழற்றி ஒரு மூலைக்குள் போட்டிருந்தார்கள். ஒரு தாதி வந்து அவனின் கட்டிலில் கட்டி இருந்த வைத்திய அறிக்கையில் ஏதோ எழுதி விட்டு செல்கிறாள். அவள் வந்ததிலிருந்து போகும்வரையும் அவளையே இமை கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தான் நமது கதாநாயகன்.

மனித மாடு மனதுக்குள் மேய்கிறது, மீண்டும் இரைமீட்டல். மீண்டும் மீண்டும் ஒழுங்கையின் ஞாபகம்.

"கீச்சார்ர ஒழுங்கயில இரிக்கிற மீசக்காரண்ட பொண்டிர ஊட்ட ஆளரவம் இல்லாத நடுச்சாமத்தில நான் போனது பீஎச்ஐமாருக்கு எப்பிடித் தெரியும். அது தான் எனக்கு வெளங்கல்ல. சே. இந்தக் கொரோனாக் காலம் இந்த மாதிரி ஒழுக்கம் கெட்டுப் போயிருக்க போடா. அவளும் எணங்கியிருக்கப் போடா"

சுய நினைவுக்கு வருகிறான்.

எதிரே இரண்டு போலீஸ்காரர்கள் அவனிடம் வாக்குமூலம் பெற வந்திருக்கிறார்கள். அவனின் ஊரில் உள்ள கீச்சார் ஒழுங்கையில் வசிக்கும் மீசைக்காரண்ட பொண்டி என்று அழைக்கப்படும் பெண்ணுக்கு கொரோனா. ஆண்கள் எவரும் இல்லாத அவளின் வீட்டுக்கு இரவு நடுச்சாமம் ஏன் போனீர் என்ற கேள்விக்கு பதில் சொல்ல முடியாமல் விழி பிதுங்கினான். பொலிசார் ஆதாரத்துடன் சொன்னபோது உண்மையை ஒத்துக் கொண்டான். கையொப்பம் பெற்ற பின்னர் பொலிஸ் போய்விட்டது.

இப்பொழுது பொலிஸ்காரன் சொன்னது ஞாபகத்துக்கு வருகிறது.

எழுமாறான பிசிஆர் சோதனையில் கீச்சார் ஒழுங்கையில் கொரோனா. ஓமானில் வேலையில் மீசக்காரன். இங்கே அவனின் மனைவிக்கு கொரோனா. அவசர அவசரமாக அம்புலன்ஸ் வந்து அவளைக் கொண்டு போனதான போலீஸ்காரனின் தகவலால் அவன் குலைந்து போனான்.

கொரோனாவின் கரைச்சலைவிட பொலிஸ் காரனின் தகவல்கள் அவனை எரிச்சல் ஊட்டுகிறது.

"ஊட்டுல இருந்து மகள் ஏழெட்டு நாளா வெளிய போகயும் இல்ல" எண்டு மீசக்காரண்ட பொண்டிர தாய்க்காரி சொன்னதாம்

"ஆம்புள வெளிநாட்டில. சின்னப் புள்ள ஒண்டிரிக்கி. அதுக்கும் கொரோனா இல்ல. எனக்கிம் கொரோனா இல்ல. என்ர மகளுக்கு மட்டும் எப்படி கொரோனா வரும். என்ன மாயம் எண்டு தெரியல்ல" எண்டு தாய்க்காரி புலம்பி இருக்காள்.

"மீசக்காரண்ட பொண்டி பயத்துல எண்ட பேரைச் செல்லி இருக்காள். அந்தத் தொழுப்புறி எண்ட பேரச் செல்லாமல் விட்டிரிக்கலாம்"

"இப்ப ஊரெல்லாம். தெரிஞ்சிரிக்கும். எப்பிடி உசிரோட திரும்பி ஊருக்க போற. ஆண்டவா இந்தக் கொரோனாட சாட்டுல எண்ட உசிர இங்கயே எடுத்திரு ஆண்டவா"

கொரோனாவினால் மரணம் என்ற பெயர் கிடைக்க வேண்டும் என்று முதன்முதலாகப் பிரார்த் தனை செய்கிறான். வம்மிப் பூ அவனின் மனதுக்குள் வந்து வந்து போகிறது. இரண்டு சொட்டுக் கண்ணீர் வடிக்கிறான்.

ஆஸ்பத்திரி வாட்டுக்கு வெளியே ஏதோ பரபரப்பு.

மேல் மாடியில் இருந்து குதித்து மீசைக்காரண்ட பொண்டி தற்கொலை செய்து கொண்டாள் என்ற செய்தி இன்னும் நமது கதாநாயகனுக்கு தெரியாது.


(ஞானம் அக்டோபர் 2021)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திக்குவல்லை கமால்.

# "தைலாப்பெட்டி" முழுமையான பேச்சுவழக்கு சிறுகதைத் தொகுப்பு




கிழக்கிலங்கை சாய்ந்தமருதுவைச் சேர்ந்த ஏ.பீர்முகம்மதுவின் "தைலாப்பெட்டி" சிறுகதை நூல் கஸல் வெளியீடாக (2023) வெளிவந்துள்ளது. "இரண்டாவது விசுவாமித்திரன்" என்ற பெயரிலும் இவர் எழுதுவதுண்டு.

இவரது முதலாவது சிறுகதை "இலட்சியங்கள் நிறைவேறுகின்றன"(1980) தினகரனில் வெளி வந்துள்ளது. இன்றுவரையில் இருபத்தொரு சிறு கதைகள் மாத்திரமே எழுதியுள்ளார். அண்மித்த சில ஆண்டுகளில் எழுதப்பட்ட பதின்மூன்று சிறுகதைகள் இந்த தைலாப்பொட்டிக்குள் பத்திரமாக இருக்கின்றன.

"எனது சகோதரர்கள் எல்லோருமே இலக்கிய வாதிகள்"- என்று மருதூர் ஏ.மஜீத் சொல்லுவார். இதைக்கொஞ்சம் தேடிப்பார்த்தபோது, சகோதரர்கள் மட்டுமன்றி தாய் - தந்தையர்கூட இலக்கிய ஈடுபாடு கொண்டவர்கள்தான் என்பது தெரியவந்தது.

அப்போது பலாலி ஆசிரியர் வளாகத்தில் நாங்கள் பயிற்சி ஆசிரியர்களாக இருந்தோம். கலைவாதி கலீல் - அன்பு ஜவஹர்ஷா - மூதூர் முகைதீன் - ஜவாத் மரைக்கார் - போன்ற நாங்கள் ஓர் இலக்கியக் குழுவாக இயங்கினோம். எங்களைப் "பஞ்சபாண்டவர்கள்" என்பார்கள். அதற்கு அப்பாலும் இலக்கியவாதிகள் இருந்தனர். அப்படியான ஒருவர் தான் பீர்முகம்மது. எங்கள் கைகளில் "மல்லிகை" இருக்கும்போது அவரது கையில் "இளம்பிறை" இருக்கும். அவ்வளவுதான் வித்தியாசம். ஆனால் எல்லோரும் எல்லாவற்றையும் வாசிப்போம்; விவாதிப் போம்.

பயிற்சியின் பின்னரும் எழுத்து முயற்சிகளில் ஒரு பற்றற்ற போக்கே அவரிடம் காணப்பட்டது. சிலபோது உயர்கல்வி நாட்டம்- அதிபர்/ ஆசிரியர் பொறுப்புக்கள் - அரசியல் ஈடுபாடு - போன்றன அவரைப் பங்குபோட்டுக்கொண்டிருக்கலாம். என்ன இருந்தாலும் இலக்கியம்தான் தனது பெயரை நாளை பேசுமென்று விளங்கிக்கொண்டதனாலோ என்னவோ, ஓய்வின் பின்னர் இலக்கியத்தில் முழுமூச்சாக இறங்கி விட்டார்.

சுனாமிச் சிறுவர் கவிதைகள், திறன் நோக்குக் கட்டுரைகள், விபுலானந்த அடிகளார் - எஸ் எச்.எம். ஜெமீல் - எஸ்.பொன்னுத்துரை - இளம்பிறை எம்.ஏ. ரஹ்மான் போன்றோரின் வாழ்வியல் சார்ந்த நூல்களை அடுத்தடுத்து வெளியிட்டு தனது இடைவெளியை நிரப்பிக் பொண்டார் என்றே சொல்ல வேண்டும். இன்னுமொருபடி மேலாக அவரைப் பேசவைக்கும் விதமாக தைலாப்பொட்டி அமைந்துள்ஏது.

பொதுவாக சிறுகதைகளில் இரண்டு விதமான நடை கையாளப்படுவதை அறிவோம். ஒன்று கதையை வளர்த்துச் செல்வதற்காக கதாசிரியர் கையாளும் நடை. மற்றது, கதையில் இடம்பெறும் கதாமாந்தர்கள் தமக்கிடையிலான உரையாடல்களின்போது வெளிப் படும் பேச்சுவழக்கு நடை. இவ்விரு நடைகளும் ஒரு கதையைப் பொறுத்து கூடவோ குறையவோ அமையலாம்

கிழக்கின் மூத்த எழுத்தாளர்களான பித்தன் ஷா, அ.ஸ.அப்துஸ்ஸமது முதல் அறஃபாத், ஆர்.எம். நௌஷாத் வரையிலானவர்களின் கதைகளில் கள நிலைமைக்கேற்ப பேச்சுவழக்கைக் காணலாம். ஏன் சோலைக்கிளியின் கவிதைகளில்கூட காத்துக்கட்டி, மீசான்கட்டை, கடியன், குஞ்சுநோனி, மல்லிப்பேயன் போன்ற சொற்கள் இடம்பெற்றுள்ளன. ஆனால் இத் தொகுப்பில் எல்லாத் தலைப்புக்களும் எல்லாக் கதை களும் பேச்சு வழக்கிலேயே அமைந்துள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐம்பது அறுபது காலகட்டக் கதைகள் அதிக மாகவும் பிற்பட்ட கதைகள் சிலவும் காணப்படுகின்றன. எல்லாக் கதைகளிலும் பண்பாட்டம்சங்கள் மேலோங்கி இருக்கின்றன. கதாசிரியர் பேச்சு வழக்கில் அதிக அக்கறையெடுத்து கதையம்சங்களைக் கைவிட்டு விடுவாறோ என்ற சந்தேகம் முதலாம் கதையான தைலாப்பொட்டியை வாசிக்கும் எவருக்கும் ஏற்படும். ஆனால் அப்படி நடக்கவில்லை.

முதற்கதையில் குடும்ப சமாச்சாரங்களுடன் சம்பந்தப்படுத்தி கதை நகர்கிறது. நீண்ட இடை வெளிக்குப்பின் உதுமான் வந்திருந்தான். கதவின் அடிப்பகுதி பழுதாகி இருப்பதைக் காண்கிறான். இதுபற்றி தங்கையிடம் கேட்டபோது "தைலாப் பொட்டில இருக்கிற முதிரப் பலகத் துண்டுகளக் கழட்டி இனித்தான் கதவ எணக்கணும்" என்று அவள் சொல்கிறாள். அவனுக்கு வார்த்தைகள் வரவில்லை. உதுமான் அழுதேவிடுகிறான். சில மனிதர்களைப்போல தைலாப்பொட்டியின் கதையும் இனி அவ்வளவுதான் .

"செவப்புக்கல் தோடு" செய்னம்புவுக்கு முதல் குழந்தை கிடைத்த மகிழ்ச்சியில் கணவன் கொடுத்த பரிசு. "என்ன கயிட்டம் வந்தாலும் தோட வித்திரப்படா " என்ற நிபந்தனையும் விதிக்கிறான். அவனது மரணத்தின் பின்னர் பல கஷ்டங்கள் வந்தனதான். காலப்போக்கில் தான் பாதுகாத்த பெறுமதியான பொருட்களை எல்லாம் அடுத்தவர்களுக்கு கொடுத்து விட்டபோதும், செவப்புக்கல்தோடை மாத்திரம் மூன் றாம் பரம்பரைக்கு சேரும் வகையில் பாதுகாத்தாள். கணவனின் வார்த்தைக்கு கொடுத்த மரியாதை மெய் சிலிர்க்கச் செய்கிறது.

"நோக்காடு" கதையில் மருத்துவிச்சி முன்னின்று வீட்டில் நடாத்தும் சுகப்பிரசவம் சித்தரிக் கப்படுகிறது. மகள் பிறந்து ஐம்பத்தொரு வருடங்களின் பின்னர் பேத்தி பிரசவத்துக்காக ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்தாள். பெறுபேற்றை எதிர் பார்த்துக் காத்திருந்தார் காசிம்காக்கா. சீசர் என்ற தகவல் வந்து விழுந்தபோது அவர் இடிந்து போனார். கோபத்தை வெளிக்கொட்ட முடியவில்லை. அவரது கண்கள் கலங்கின. இத்தனை வசதி வாய்ப்புக்கள் வந்த பின்பும் இதுதானா நிலை? என்ற கேள்வியே அவரை அழவைத்தது. நியாயந்தான்.

" மொலப்பால்" அண்மைக்கால நெருக்கடிகள் காரணமான மருந்தித் தட்டுப்பாடு பற்றிப் பேசுகிறது. சிறுகுழந்தைக்கு டாக்டர் எழுதிக் கொடுத்த பென டோல் சிரப் கடைகளில் இல்லை. அந்நாட்களில் பரிசாரிமார் முலைப்பாலில் கரைத்துக் கொடுக்குமாறு சில மருந்துகளைக் கொடுப்பதுண்டு. அவ்வாறு செய்யுமாறு சிலர் அபிப்பிராயம் தெரிவித்தனர். பெனடோல் துண்டொன்றைத் தூளாக்கி, மொலப்பால் தேடி, கரைத்துக் கொடுப்பதைத் தவிர வேறுவழி இருக்கவில்லை.

தமிழ் - முஸ்லிம் கிராமங்களிடையே உறவும் பரஸ்பரம் வியாபாரத் தொடர்பும் இருந்த காலமது.ஊரில் கொமருப் பிள்ளைகள் பின்னும் பன்பாய்களைச் சேகரித்துக்கொண்டு சென்று வியாபாரம் செய்பவன் அவன். கிராமங்களிடையே சண்டைகள் மூண்டதால் அதைத் தொடர முடியாத நிலைக்குள்ளாகிறான். பன்பாய்க் கைத்தொழிலும் வீழ்ச்சியடைகிறது.தனது கிராமத்துக்குள்ளேயே நைலோன்பாய் வியாபாரத்தை ஆரம்பிப்பதை "பாய்யாவாரம்" என்ற கதை வெளிப் படுத்துகிறது.

மண்ணின் மொழியில் மக்களின் கதைகள் என்று நூலாசிரியர் குறிப்பிடுவதுபோல, மொழியும் கதையும் பிணைந்து செல்வதுடன் ஒவ்வொரு கதையும் ஒவ்வொரு செய்தியை வெளிப்படுத்தவும் தவறவில்லை.

இத்தொகுப்பில் இரண்டு கதைகள் வித்தியாச மாக இருப்பதையும் குறிப்பிட்டுத்தான் ஆகவேண்டும்.

"பொண்டுகச் சட்டி" என்ற கதையில் மம்மவக்கன் என்று அறிமுகமாகின்றவன் பெண்களோடு சகவாசம் மிக்கவன். கதையின் கடைசியில் துஷாராவாக வருகிறான்.அவன் வெளிநாடு போவதாகச் சென்று, பின்னர் இந்தியாவில் இருப்பதாகத் தெரிவிக்கிறான். அங்கு சினிமாவில் சம்பந்தப்பட்டு திருநங்கைப் பாத்திர மேற்று நடிக்கிறான். அவன் நேர்காணலொன்றில் தெரிவிக்கும் விடயங்களிலிருந்து குடும்பத்தவர்கள் அவன் மம்மவக்கன் என்பதை விளங்கிக்கொள்கின்றனர். ஊரில் இருக்கும்போது அவனுக்கு பாடசாலையில் நாடகம் பழக்கிய ஆசிரியரும் அவனுக்கு வயிற்றுவலி ஏற்படும்போதெல்லாம் வைத்தியம் செய்த டாக்டரும் ஒன்றாக வீடு தேடிவந்தபோது குடும்பத்தாருக்கு மேலும் உறுதியாகிவிட்டது.

திருநங்கையர்கள் சங்கம் அமைத்து ஊர்வலங் களும் விழாக்களும் நடாத்தும் காலமிது.

இது ஒரு கற்பனைக் கதையாக இருந்தாலும் கூட, இப்படியான விடயங்கள் முஸ்லிம் சமூகத்திலும் இல்லாமலில்லை.ஆனால் அவை வெளிச்சத்திற்கு வருவதுமில்லை. கதைகளாகக்கூட எழுதப்படுவது மில்லை. இந்நிலையில் ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்தக் கூடிய ஆக்கமாக இதனைக் கருதலாம்.

அடுத்த கதை "ரெண்டு இத்தா". சமய ஒழுங்கு களின்படி கணவன் இறந்தால் மனைவி மறைவாக இருக்கக்கூடிய காலம் இத்தா எனப்படும். ரசீன் மாஸ்டருக்கு இரண்டு மனைவிகள். அவர் இறந்து விட்டார். இரு மனைவிகளும் தத்தமது வீடுகளில் இத்தா அனுஷ்டித்தனர். முதல் மனைவி நான்கு மாதங்களும் பத்து நாட்கள் எனும் காலக்கெடு முடிந்து வெளியேறு கிறாள். அந்த நேரத்தில் சமயக் கிரியைகள் செய்யவந்த லெப்பை, மோதீன் போன்ளவர்கள் "மனைவிமார் ஒற்றுமையா இருந்தால்தான் கணவனுக்கு ஈடேற்றம்" என்று சொல்லிவிட்டுச் செல்கின்றனர். உண்மையில் மனைவிமார் உடன்பாட்டோடு இருக்கவில்லை. மௌன முரண்பாடே நிலவியது. வசதி வாய்ப்பு உண்டென்பதற் காக இன்னொரு திருமணம் செய்துகொள்ளலாமா? முதல் மனைவியின் விருப்பமில்லாமல் செய்வது ஆகுமா? இப்படிப் பல கேள்விகள் எழுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டாம் மனைவி கர்ப்பமாக இருந்ததால்

குழந்தை கிடைக்கும் வரை இத்தாக்காலம் தான். என்ன இருந்தாலும் கணவனின் ஈடேற்றத்தைக் கருதி தன்பிடிவாதத்தைத் தளர்த்தி இரண்டாம் மனைவியின் வீட்டுக்குச் சென்றான். வீட்டை நெருங்கியதும் "அவர் இருந்தபோது வராத நீ இப்போது எதற்கு வருகிறாய்?" இப்படிக் கேட்டுவிட்டால் என்ன பதில் சொல்வதென்று எண்ணி அப்படியே நின்று விட்டான். அத்தோடு கதையையும் முடித்துவிட்டார் கதாசிரியர்.

மொத்தத்தில் இத்தொகுதியில் அடங்கியுள்ள பதின்மூன்று கதைகளும் வெவ்வேறு பரப்புகளில் பொறுக்கி எடுக்கப்பட்ட பூக்களா இருக்கின்றன. அதனால் வெவ்வேற பேச்சுவழக்குச் சொற்கள் திரளும் வாய்ப்பு உயர்ந்துள்ளது.அனுபவித்துப் படிக்கும்போது ஏற்படும் சுவாரஸ்யம் அலாதியானது.

எழுத்தாளர்கள் வகைமாதிரியான கதை களைத் தெரிவு செய்வர். வித்தியாசமான உத்திகளைக் கையாள்வர். எல்லாப் படைப்பாளிகளும் பேச்சு வழக்கிலோ பிரக்ஞை ஓட்டத்திலோ ஓரிரு கதைகள் எழுதியிருப்பார்கள்தான்.

எஸ்.பொன்னுத்துரை பல்வேறு விதமாகவும் கதை எழுதமுடியும் என்பதை செய்து காட்டியவர் என்பது அறிந்ததே.

பீர் முகம்மதுவும் ஒரே பாத்திர உரையாடல் உத்தியில், யாழ்ப்பாணப் பேச்சு வழக்கில் "ஜெனீவாவுக் குப் போன ஜெமீந்தாரு" என்ற கதையை எழுதியுள்ளார். மற்றும் ரஷ்ய எழுத்தாளர் சொலக்கோவின் மீன் கதையை ஒட்டி "இறைவனின் சித்தம்" என்ற ஒரு பரிசோதனைக் கதையும் எழுதியுள்ளமை கவனிக்கத் தக்கது.இதன் தொடர்ச்சியாக பேச்சு வழக்கில் கதைத் தொகுதியொன்று வெளியிடும் உந்துதல் அவருக்கு ஏற்பட்டிருக்கக்கூடும்.

எனது வாசிப்பு அநுபவமும் ஞாபகசக்தியும் சரியாக இருக்குமென்றால், இலங்கையில் இப்படியொரு நூல் வெளிவரவில்லை என்றே சொல்வேன். அந்த நிலையில் "தைலாப்பொட்டி" யைப் பாராட்டாமல் இருக்க முடியாது.

உருவகக் கதை

# இறைவனின் சித்தம்

ஏ.பீர் முகம்மது

தன் கூட்டத்திலிருந்து சிறிய மீன் தனியாகப் பிரிந்து செல்லச் சித்தம் கொண்டது. வெளியுலகம் நோக்கிப் புறப்பட்டது.

பயணத்தின் பாதித்தூரம் கடக்காத நிலையில் சிறிய மீனுக்கு அதிர்ச்சி காத்திருந்தது.

எதிரில் வாயைப் பிளந்தவரே ஒரு பெரிய மீன்.

"உன் போன்றதொரு இரைக்காகவே இத்தனை நாழிகை காத்திருந்தேன்" என்று பெரிய மீன் தன்னை அறிமுகம் செய்தது.

"இரை தேடி உண்ணும் உன் வாழ்வு முறையினை ஏற்கிறேன். ஆனால் இத்தனை சிறியவனான என்னை விட்டு விடு. வாழ்வில் எதையுமே அனுபவத் திராத எனக்கா இந்த நிலை ? இறைவனுக்கே அடுக்காத இச்செயலை...." என்று சொல்லிக் கொண்டிருக்கும் போதே பெரிய மீன் குறுக்கீடு செய்தது.

"இறைவன்பற்றி இங்கே எதுவும் பேசாதே. எனக்கு நீ இரையாவதுதான் இறைவனின் ஏற்பாடு?" என்றது பெரிய மீன்.

" என்ன? உனக்கு நான் இரையாக வேண்டுமா? உனக்கு வாழ்வு. எனக்குச் சாவு. இறைவனின் ஏற்பாடு? இறைவனின் இந்த தத்துவத்தை விளங்க முடிய வில்லையே" என்றது சிறிய மீன்.

"உன்னை விழுங்கும் சக்தி எனக்கு இறைவன் தந்தது. உனக்கு அந்த சக்தியை இறைவன் தரவில்லை. முடியுமானால் என்னை விழுங்கு பார்க்கலாம்" என்றது பெரிய மீன்.

"சிறிய மீனை பெரிய மீன் விழுங்குவது தான் இறைவன் சித்தம். ஆனாலும் ...."

சிறிய மீன் தயக்கத்தோடு சற்று தாமதித்தது.

"என்ன? ஆனாலும்"

பெரிய மீன் கேட்டது.

"இறைவன் சித்தப்படியே எதுவும் நடக்கும்" என்று சொல்லி முடிப்பதற்குள் அது நடந்து முடிந்தது.

குளத்தருகே நெடுங்காலூன்றி உணவுக்காய்த் தவமிருந்த கொக்கு தன் நீண்ட அலகினால் பெரிய மீனைக் கௌவிக் கொண்டு சற்றுத் தூரம்

பறந்து சென்றது.

குளத்தருகே மீண்டும் தரையிறங்கியது. நீண்டதும் கூரானதுமான கொக்கின் அலகு தன் உடலைப் பதம் பார்க்கும் கணங்களை எதிர்பார்த்தவாறு பெரிய மீன்.

வயல் வேலைகளை முடித்துவிட்டு கட்டுத் துவக்குடன் காத்திருக்கும் ஒரு விவசாயி.

வீடு செல்லும்போது பகல் உணவுக்கு ஒரு பறவையின் இறைச்சி என்பது அவன் எண்ணம்.

கண்ணெதிரில் அந்தக் கொக்கு

குறி பார்த்து ஒரு தாக்குதல். குண்டடி பட்டதா? இல்லையா?

கொக்கு தன்னைச் சுதாகரித்தவாறே மீண்டும் பறந்து சென்றது.

பெரிய மீன் தப்பிப் பிழைத்து குளத்தில் விழுந்து நீந்தி சென்றது.

சிறிய மீன் - பெரிய மீன் - கொக்கு

வாழ்வும் சாவும் இறைவனின் சித்தம்.


(செங்கதிர் பெப்ரவரி 2012)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அ. யேசுராசா

# இளம்பிறை எம். ஏ. ரஹ்மான் இருட்டடிப்புகளை மீறி வெளிச்சத்துக்கு வந்தவர்




பொது நூலகம் யாழ்ப்பாணம்

இலக்கியத்துறையில் வெவ்வேறு காலங்களில் ஏராளமானோர் செயற்பட்டுள்ளனர். விசேடமாகச் சிலர், தாம் ஈடுபட்டவற்றில் சிறப்பாற்றலை வெளிக் காட்டியுமுள்ளனர். அங்கீகாரம், மதிப்பு, விருதுகள் போன்றவை ஆற்றல்காட்டிய எல்லோருக்குமே உரிய வகையில் வழங்கப்பட்டதாகச் சொல்லவும் இயலாது! பலருக்கு அவை வழங்கப்படுகின்றன; பலருக்கு வழங்கப்படுவதில்லை! பாரபட்சங்கள் தொடர்கின்ற நிலைமைதான் உள்ளது. அதன்காரணமாக பலரின் பங்களிப்பு உரியவகையில் வெளிச்சத்துக்கு வராமலே போய்விடுகின்றது!; சிறிய வட்டத்தினர் மத்தியிலேயே அந்தப் பங்களிப்பாளர்கள் மதிப்புடன் நோக்கப்படு கின்றனர். எம். ஏ. ரஹ்மானும் உரிய மதிப்பு வெளிச்சத் துக்குள் கொண்டுவரப்படாத ஒருவராக, தற்காலச் சூழலில் பலராலும் அறியப்படாதவராகவே இருக்கிறார்!

ஆனால், நூல் பதிப்பு, இதழியல், உருவகக் கதை, சிறுகதை, நாடகம், சிறுவர் இலக்கியம் போன்ற வற்றில் தடம்பதித்த ஒருவராகவே அவர் இருக்கிறார்; எழுத்தாளர் எஸ். பொவுடனான இணைவு, அவரது செயற்பாடுகளுக்கு வலுவான ஊட்டத்தை அளித்திருக் கிறது. அறுபதுகளிலும் எழுபதுகளின் நடுப்பகுதி வரையிலும் இலங்கையிலும் - பிறகு தமிழ்நாட்டிலுமான அவரது பணிகள் கவனத்துக்குரியவை. அவை பற்றிய தாகவே இந்த நூல், எழுத்தாளர் ஏ. பீர் முகம்மதுவி னால் எழுதப்பட்டுள்ளது. எழுத்தாளராகவும் கவிஞராகவுமுள்ள அவர், தனது சொந்த அனுபவங்க ளையும், வேறு நூல்கள், இதழ்களை உசாத்துணை யாக வைத்தும் இதனை ஆக்கியுள்ளார். இதன் வழியாக எம். ஏ. ரஹ்மான்பற்றிய பல தகவல்களை வாசகர் அறிவதற்கு வாய்ப்பு ஏற்பட்டுள்ளமை, மகிழ்ச்சிக் குரியது.

தமிழகத்தில் திருப்புத்தூர் என்னுமிடத்தில் 1934 இல் பிறந்து, 14 வயதில் இலங்கை வந்து செயற்பட்டு, 1976 இல் ஊர்திரும்பி, தற்போது சென்னையில் ரஹ்மான் வாழ்கிறார்.

"சன்மார்க்கக் கல்வி பயிலவென இலங்கை வந்த ரஹ்மான் இலக்கியத்தில் ஈடுபாடு கொண்டவராக மாறத் தொடங்கினார். ரெயின்போ அச்சகம் தொடங் கினார். அரசு வெளியீடு ஆரம்பித்தார். இளம்பிறை சஞ்சிகையின் ஆசிரியரானார். பிரபல எழுத்தாளர் எஸ். பொன்னுத்துரை உட்பட சிங்கள தமிழ் முஸ்லிம் இலக்கியவாதிகள் பலருடனும் நெருங்கிப் பழகினார்." என,. இந்நூலில் (பக். 15) குறிப்பிடப்பட்டுள்ளது.

**

### 1. அரசு வெளியீடு

எழுத்தாளரின் சிறந்த நூல்களை சிறந்த வடிவமைப்புடன் வெளியிடும் நோக்கத்தில் அரசு வெளியீடு தொடங்கப்பட்டது; தனது நண்பர் பலருடன் உரையாடிக் கருத்துப் பரிமாறி, இந்த வெளியீட்டை ரஹ்மான் தொடங்கினார்; இம்முயற்சியில் இணைந்து முக்கிய பங்கினை எஸ். பொ. வழங்கினார்.

"நோக்கத்தைக் கொண்டு வரும் நூல்களைத் தெரிவுசெய்தல், நூலின் கட்டமைப்பை உருவாக்குதல், பிரதிகளை கூர்மையாக்குதல் போன்றவற்றை எஸ். பொ. பொறுப்பெடுக்க வேண்டுமென ரஹ்மான் கேட்டார். எஸ். பொ. ஏற்றார். பல்வேறு சிரமங்களோடு ரஹ்மான் முதலீடுகளைத் தேடி எடுத்து வெளியீட்டை நிறுவினார்.

.... அரசு வெளியீட்டின் ஒவ்வொரு நூலும் ஒவ்வொரு வகையானவை. உருவகக் கதை, சிறுகதை, கவிதை, வரலாறு, விமர்சனம், சொற்பொழிவு, பேனாச் சித்திரம், அங்கதம் என்று வண்ணத்துக்கொன்றும் வகைக்கொன்றுமாக அச்சிலே கொண்டு வரும் ஆற்றல் வாய்க்கப்பெற்றவர் ரஹ்மான்." என்னும் குறிப்புகள் நூலிலுள்ளன.

நூல்தேர்வின்போது கிழக்கிலங்கைப் பிரதேச நூல்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டது. முதலாவது நூலாக வ. அ. இராசரத்தினத்தின் சிறுகதைத் தொகுதி யான 'தோணி', 1962 இல் வெளியிடப்பட்டது. இரண்டாவதாக. க. செபரத்தினத்தின் 'வாழையடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழை', மூன்றாவதாக புலவர்மணி ஏ. பெரிய தம்பிப்பிள்ளையின் 'பகவத் கீதை வெண்பா'வின் முதற்பாகம் ஆகியன வெளிவந்தன. கனக செந்தி நாதனின் 'ஈழத்து இலக்கிய வளர்ச்சி', எஸ். பொவின் 'வீ' சிறுகதைத் தொகுதி, மஹாகவியின் 'குறும்பா', மு. தளையசிங்கத்தின் 'புதுயுகம் பிறக்கிறது' சிறுகதைத் தொகுதி, சானாவின் 'பரியாரி பரமர்' பேனாச் சித்திரம், ஏ. ஜே. கனகரத்தினாவின் 'மத்து' கட்டுரைத் தொகுதி, எஸ். பொவின் 'சடங்கு' நாவல், எம். ஏ. ரஹ்மானின் 'மரபு' முதலிய முக்கிய நூல்கள் பின்னர் வெளியாகின. அரசு வெளியீடு எல்லாமாக 36 நூல்களை வெளி யிட்டுள்ளது.

புத்தக அமைப்பில் கூடுதலான கவனம் செலுத்தப்பட்டது; பல நூல்களின் வடிவமைப்பு ஆச்சரியத்தையும் மகிழ்ச்சியையும் ஏற்படுத்தியது. இங்கு ஒரு முக்கிய விடயத்தை நான் குறிப்பிடலாம். எழுபதுகளின் பிற்பகுதியில் அல்லது எண்பதுகளின் முற்பகுதியில் தமிழகம் சென்ற நண்பர் பத்மநாப ஐயர், அரசு வெளியீடுகள் சிலவற்றையும் - அக்காலத்தில் நவீன அமைப்புடன் தமிழில் நூல்களை வெளியிட்டு வந்த முன்னோடிப் பதிப்பாளரான - க்ரியா ராம கிருஷ்ணனிடம் கொடுத்திருக்கிறார். அவற்றைக் கூர்ந்து பார்த்தபின், "அறுபதுகளிலேயே இலங்கையில் இவ்வாறு நவீன வடிவமைப்புடன் நூல்களை வெளி யிட்டிருக்கிறீர்களே!" என்று, மிகுந்த ஆச்சரியத் துடன் அவர் பாராட்டினாராம்.

**2. இளம்பிறை**

மாணவப் பருவத்திலேயே பத்திரிகை வெளி யிடும் ஆர்வம் ரஹ்மானிடம் இருந்துள்ளது. கையெழுத் துப் பத்திரிகையையும் அக்காலங்களில் தயாரித்தாலும் அவை அவருக்குத் திருப்தியளிக்கவில்லை. தனது 'ரெயின்போ' அச்சகம் தொழிற்பட்ட காலத்தில் ஓர் இதழைக் கொண்டுவர முயல்கிறார்; அதுதான் 'இளம்பிறை' என்னும் வடிவில் வெளிவந்தது. அவரின் ஆதர்சபுருஷராக இருந்தவர், இந்திய சுதந்திரப் போராட்ட வீரரான மௌலானா அபுல்கலாம் ஆசாத் அவர்கள்.

"ஆசாத் உர்து மொழியில் 'அல்ஹிலால்' என்ற பத்திரிகையை நடத்தியவர். அல்ஹிலால் என்ற சொல்லுக்கு இளம்பிறை என்று தமிழில் பொருள்படும். தானும் அதுபோல் ஒரு பத்திரிகை தொடங்க வேண்டு மென்று மனதுக்குள் ரஹ்மான் நினைத்ததுண்டு." (பக்.46) என்னும் குறிப்பு நூலிலுள்ளது. "முஸ்லிம் சாயல் கொஞ்சம் தூக்கலாகத் தெரியும் வண்ணம் இளம்பிறை இலக்கிய உலகில் வலம்வரத் தொடங்கியது." என்னும் குறிப்பும் உள்ளது.

நொவெம்பர் *1964* இல் முதலாவது இதழ் வெளிவந்தது.

"முதலாவது இதழில். கலாநிதி ஆ. சதாசிவம் 'பாஞ்சாலி சபதம்' பற்றியும் இலங்கைப் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த எம். ஏ. எம். சுக்ரி இஸ்லாமிய நூல்நிலையங்கள் பற்றியும் எழுதிய கட்டுரைகள் பிரசுரமாகியுள்ளன.

"...'நாமும் நாங்களும்' என்ற பகுதி கொண்டோடி சுப்பர் என்பவரால் எழுதப்பட்டுள்ளது. கொண்டோடி சுப்பர் வேறு யாருமல்ல எஸ். பொதான்.

பதின்மூன்றாம் பக்கம் ஆர். பாலகிருஷ்ணனால் எழுதப்பட்டுள்ளது. இப்பக்கம் நடைமுறை வாழ்க்கை யில் இடம்பெறும் நிகழ்வுகளின் விஞ்ஞானபூர்வ விளக்கங்களைத் தந்தன.

.... முதல் இதழிலேயே இளம்பிறை குஞ்சம் சூடத் தொடங்கியது." - பக். *49*

தரமான சிறுகதைகள் இளம்பிறையில் வந்துள்ளன. எஸ். பொவின் 'தேர்' முதலிய சிறுகதைகள் மட்டுமல்லாது, எஸ். எல். எம். ஹனிபா முதலிய புதியவர்கள் பலரின் சிறுகதைகள் வந்துள்ளன. மஹாகவியின் 'குறும்பா'வை மக்கள்மயப்படுத்திய தும் இளம்பிறைதான். ஆங்கிலத்தில் தான் படித்த முக்கிய நூல்கள் பலவற்றைத் தன் ஆழமான பார்வையுடன் வாசகருக்கு அறிமுகப்படுத்தும் கட்டுரைகளை - 'செகராசசேகரன்' என்னும் புனைபெயரில் - ஏ. ஜே. கனகரத்தினா எழுதியதும் இளம்பிறையில்தான்!

"கவிக்கோ அப்துல் ரஹ்மான், கவிஞர் மீரா, ஈரோடு தமிழன்பன் போன்ற தமிழகத்துப் பெருங் கவிஞர்கள் குறும்பாபற்றி சிலாகித்துப்பேசும் அளவுக்கு இன்று நிலைமை மாறியிருக்கிறது என்றால் மஹாகவி, எஸ். பொன்னுத்துரை, எம். ஏ. ரஹ்மான் ஆகியோர் இளம்பிறையூடாக குறும்பா தொடர்பில் அன்று முன்னெடுத்த தீர்மானம் தீர்க்கதரிசனமானது என்பது இப்போது எண்பிக்கப்பட்டு வருகின்றது." - பக். *67*

*1974* வரை இளம்பிறையின் *34* இதழ்கள் வெளிவந்துள்ளன; பல இதழ்கள் - ஈத் மலர், கல்வி மலர், விபுலானந்தர் சிறப்பிதழ், அருள்வாக்கி மலர், சாகித்திய மலர், இளைஞர் மலர், ஆசாத் மலர், ஸாகிர் ஹுசைன் மலர், மீலாத் மலர்கள், திருக்குர்ஆன் மலர், காந்தி நூற்றாண்டு, தை அ. சிறப்பு மலர் எனச் சிறப்பிதழ்களாக அதிக பக்கங்கள்கொண்டவையாக வந்துள்ளன. இவை பற்றிய விரிவான தகவல்கள் நூலில் தரப்பட்டுள்ளமை முக்கியமானது!

**3. உருவகக் கதையில்....**

இந்த அத்தியாயத்தில் எம். ஏ. ரஹ்மானின் உருவகக் கதை முயற்சிபற்றிய விவரிப்புகள் உள்ளன. *1961* இல் தினகரன் பத்திரிகை நடத்திய உருவகக் கதைப் போட்டியில், ரஹ்மான் முதற்பரிசு பெற்றார்; அதன் பின்னர் உருவகக் கதைத் துறையில் முழுமையாக ஈடுபடலானார். ரஷ்ய எழுத்தாளர் சொலொக்கோவின் 'சின்னமீன்' கதையை 77 சொற்களில் தனது நடையில் எழுதினார். அவரின் உருவகக் கதைகளின் தொகுதியாக 'மரபு' நூல், அரசு வெளியீடாக வந்தது.

"....இந்தத் துறையிலே தாய்த் தமிழகத்தை ஈழத் தமிழகம் மிஞ்சிவிட்டதென்றே கூறவேண்டும். எம். ஏ. ரஹ்மானின் பதினைந்து உருவகக் கதைகளைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்ட மரபு என்னும் தொகுதி 1964 இல் வெளி வந்துள்ளது. தமிழில் வந்த உருவகக் கதைத் தொகுதிகளிலே இதுவே முதலாவது என்று தெரிகிறது." (பக்.78) என, புதுடில்லி பல்கலைக்கழக தமிழ்த் துறைப் பேராசிரியரான சாலை இளந்திரையன் குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ந்து ரஹ்மானால் எழுதப்பட்ட உருவகக் கதைகளைத் தொகுத்து, 'தீபன்' என்னும் பெயரில் வெளியிட ஆயத்தம் செய்யப்பட்டபோதிலும், ஏனோ அது வெளிவர வில்லை; ஆனால் இருபத்தைந்து வருடங்களின் பின்னர்,

"மரபு என்ற நூலிலிருந்து பதினைந்து கதைகளும் தீபன் கதைகள் பதினைந்துமாக முப்பது கதைகளுடன் மரபு இரண்டாம் பதிப்பு, 1996 இல் மித்ர வெளியீடாக சென்னையில் வெளிவந்தது.

.... மரபு தொகுதியின் மூன்றாம் பதிப்பு இளம்பிறை வெளியீடாக ஜனவரி 2013 இல் பிரசுரமானது." (பக். 80)

உருவகக் கதைத்துறையில் ரகுமானின் முக்கியத்துவம் நன்கு பதிவுசெய்யப்பட்டுள்ளது.

4. சிறுகதைத் துறையிலும் ரஹ்மான் பங்களித்துள்ளார். ஐம்பதுகளின் பின்பாதியில் அவர் சிறுகதைகள் எழுதத் தொடங்கினாரென அறிய முடிகிறது; வீரகேசரியில் சில கதைகள் வெளிவந்துள்ளன.

"ரஹ்மானின் சிறுகதைகளில் 'பூ' முன்னாசனத்தில் அமர்ந்த கதை. அவரின் சிறுகதைகள் பற்றிப் பேசும் எவரும் 'பூ'வைத் தொடாமல் செல்வதில்லை.

.... மட்டக்களப்பிலே 1963 ஆகஸ்ட் மாதம் மிகவும் கோலாகலமாக தமிழ் விழாவொன்று நடைபெற்றது. அதையொட்டி நாடளாவியரீதியில் சிறுகதைப் போட்டி ஒழுங்குசெய்யப்பட்டிருந்தது. .... போட்டியில் 'பூ' முதலிடம் பெற்றது." (பக். 83)

ரஹ்மான் எழுதிய ஆறு சிறுகதைகள் ஒன்று சேர்க்கப்பட்டு, 'சிறுகை நீட்டி' என்னும் பெயரில், 128 பக்கங்கள்கொண்ட தொகுப்பாக, 1998 இல், சென்னை 'மித்ர' வெளியீடாக வந்துள்ளது.

**5. சிறுவர் இலக்கிய ஈடுபாட்டில்....**

சிறுவர்களின் உளவிருத்தியிலும் வாசிப்புப் பழக்கத்தின் வளர்ச்சியிலும் சிறுவர் இலக்கியத்துக்கு முக்கிய பங்கிருக்கிறது. எழுத்தாளர், கல்வியாளர், ஓவியர் போன்றோரின் கூட்டுழைப்பில் சிறுவர் இலக்கியம் பிறமொழிகளில் நன்கு வளர்ச்சி பெற்றுள்ளது; இங்கு சிங்கள மொழியிலும் அதன் வளர்ச்சியைக் காணலாம். ஆனால், இங்கு நமது தமிழ்மொழியில் போதியளவில் அவ்வளர்ச்சி இல்லை என்ற ஆதங்கம் நிலவுகிறது!

"இலக்கியப் பணியாக நான் வரித்துக் கொண்டவற்றுள் சிறுவர் இலக்கிய வளர்ச்சிக்கும் வளத்திற்கும் என் சக்தியின் உச்ச ஆற்றலுக்கு ஏற்ப உழைத்தல் வேண்டும் என்பதும் ஒன்றாகும். சிறுவரை மிகவும் நேசிக்கிறேன்." என்ற ரஹ்மானின் கூற்று அவரை சிறுவர் இலக்கியத்தோடு தொடர்புபடுத்திப் பார்ப்பதற்கு எமக்கு வசதி தருகிறது.

சிறுவர்களின் வாசிப்புக்காக இளமைப் பருவத்திலே (1962), காந்தி போதனை (1969), மற்றும் இஸ்லாமிய வரலாற்றுக் கதைகள் (1972) ஆகிய மூன்று நூல்களைத் தந்தவர்." - பக். 88

மூன்று நூல்களைப் பற்றிய விரிவான குறிப்புகள், வாசகருக்குப் பயன்தரும் வகையில் நூலில் தரப்பட்டுள்ளன.

**6. நாடக இலக்கியத்தில்....**

இந்த அத்தியாயத்தில் ரஹ்மானின் நாடகப் பங்களிப்புப் பற்றி விபரிக்கப்பட்டுள்ளது. அவரது நாடக ஆற்றலை அறிந்து அதனை வெளிக்கொண்டுவருவதில் பங்களிப்புச் செய்தவராக நால்வர் - பிரதி அமைச்சராகவுமிருந்த மூதூர் ஏ. எல். அப்துல் மஜீது, இலங்கை வானொலியில் பணியாற்றிய இருவர் எம். எச். குத்தூஸ், வீ. ஏ. கபூர்; மற்றும் எஸ். பொ. ஆகியோர் குறிப்பிடப் பட்டுள்ளனர்.

"எம். எச். குத்தூஸ் புத்தளத்தைச் சேர்ந்தவர். இந்தியா சென்று இசையை முறைப்படி கற்று பயிற்சி பெற்று வந்தவர். அவரே இலங்கை வானொலியில் சரித்திர நாடகமொன்றை எழுதுமாறு ரஹ்மானைக் கேட்டவர்.

.... 'தாஜ்மஹால் நிழலில்' என்பது முஸ்லிம் சேவையில் ஒலிபரப்பான சரித்திரத் தொடர் நாடகமாகும். வானொலியில் ஒலிபரப்பான முதலாவது சரித்திரத் தொடர் நாடகமும் அதுதான். அதனை வானொலிக்கெனத் தயாரித்தவர் எம். ஏ. ரஹ்மான். அவரின் நாடக ஆற்றலை பிரசித்தம் செய்த பெருமை 'தாஜ்மஹால் நிழலில்' என்ற நாடகத்தையே சேரும். மேற்படி நாடகத்துக்குத் தேவையான வரலாற்றுத் தகவல்களை எஸ். பொன்னுத்துரை சேகரித்து ரஹ்மானுக்கு வழங்கினார்." - பக். 96 - 97

ஓரங்க நாடக முயற்சியிலும் ரஹ்மான் ஈடுபட்டுள்ளார்; பிறரின் ஓரங்க நாடகங்களைத் தனது இளம்பிறை இதழில் வெளியிட்டுமுள்ளார்.


"எம். ஏ. ரஹ்மான் இளம்பிறை 1968 ஜூன் இதழில் 'நம்பிக்கை' என்ற ஓரங்க நாடகத்தை எழுதினார். இஸ்லாம்கூறும் சகோதரத்துவ போதனையை மையப் பொருளாகக்கொண்டு அது எழுதப்பட்டது.

அந்நாடகம் இளம்பிறையில் வெளியான பிற்பாடு கிடைக்கப்பெற்ற பிரதிபலிப்புகள் ரஹ்மானை மகிழ்ச்சிப் படுத்தியது. நான்கு பிரதான சமயங்களின் ஊடான அடிப்படைத் தத்துவங்களை மையமாக வைத்து மேடையில் அரங்கேற்றத் தக்கதாக நான்கு பா நாடகங்களை எழுதும் எண்ணம் உதிக்கலாயிற்று. க்ஷதரிசனம்; என்னும் தலைப்பில் நான்கு நாடகங்கள் தயாராயின. நம்பிக்கை (இஸ்லாம்) சகோதர தத்துவத்தையும் ஞானம் (கிறிஸ்தவம்) ஈசா நபியின் மரணத்தின் தரிசனமாகவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







கானம் (இந்து) கீதையின் உபதேசங்கள் தந்த விளக்கமாகவும் தானம் (பௌத்த) மதபோதனையை விளக்கும் வகையிலும் நான்கு நாடகங்களும் அமைந்தன. இவை தரிசனம் என்ற பெயரில் கொழும்பில் மேடையேற்றப்பட்டு மிகப்பிரமாண்டமான வரவேற்பைப் பெற்றது." – பக். 100 – 101

7. ஸாஹிரா மகாநாடும்
முட்டையடி வாங்கிய சாகித்திய விழாவும்

இலக்கிய உலகில் கருத்து முரண்பாடுகள் இருப்பது வழமைதான்; ஆனால் அவற்றை வன்முறையின்மூலம் அணுகுவது கண்டிக்கத்தக்கது. இலங்கைச் சூழலில் நடைபெற்ற இரண்டு முக்கிய சம்பவங்களின் பதிவுகள், இவ்வத்தியாயத்தில் உள்ளன. அரசியல் சூழலில் நடைபெறும் வன்முறைகளைப் பெரிதும் கண்டிப்பவர்கள்கூட, இவற்றைப் பொருட்படுத்தாமல் இருப்பது, முரண்நகையாகும்!; சில சந்தர்ப்பங்களில், முற்போக்கு அணியைச் சேர்ந்த சிலர் தற்போதும் அவற்றை நியாயப்படுத்தும் அவலமும் நிகழ்கிறது!

எஸ். பொன்னுத்துரை அக்காலத்தில் முற்போக்கு அணியிலிருந்தாலும் சில விடயங்களில் மாறுபட்ட கருத்துகளைக் கொண்டிருந்தார்.

"இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம் ஆயிரத்துத் தொளாயிரத்து அறுபதுகளின் முதலாம் வருடத்தின் ஆரம்பத்தில் மார்க்சிய சித்தாந்தங்கள் மட்டுமே தமிழ் இலக்கியப் படைப்பு முயற்சிகளின் உட்பொருளாக அமைதல் வேண்டுமென்று இயங்கத் தொடங்கியது. சமூகம் சார்ந்த பார்வை என்று அத்தர் பூசி இதனைச் சாதிக்க முனைந்தது.

எஸ். பொன்னுத்துரை இதற்கு எதிரான கருத்தைக் கொண்டிருந்தார். இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம் என்பது வெறுமனே இடதுசாரித்துவத்தை மட்டும் முன்னெடுக்கும் கம்யூனிஸ்ட் கட்சியின் தொழிற்சங்கமாக அல்லாமல் கலை இலக்கிய தமிழ்த்துவத்தையும் சமாந்தரமாகக் கொண்டு செல்லும் அமைப்பாகவும் இயங்க வேண்டுமென்று திருத்தம் முன்வைத்தார்." – பக். 34

அ). இந்தப் பின்னணிச் சூழலில் ஸாஹிரா மகாநாடு, 28. 04. 1962 இல் தொடங்கி இருநாள் நடைபெற்றது. முதல்நாளன்று எஸ். பொ., எம். ஏ. ரஹ்மான், வ. அ. இராசரத்தினம், கனக செந்திநாதன் முதலியோர் சேர்ந்து சென்றனர்.

"மகாநாட்டு மண்டபம் கொஞ்சம் பரபரப்பாகக் காணப்பட்டது. கொழும்பு துறைமுகத்தில் வேலை செய்யும் தமிழ் ஒழுங்காகப் பேசவராத சிங்கள கம்யூனிஸ்டுகளும் கலந்துகொண்டிருப்பதை எஸ். பொ. அவதானித்தார். எஸ். பொவின் நண்பர் ஒருவர் வந்து "குழப்பம் வரும்போல் தெரிகிறது. நீங்கள் என் அருகில் இருந்துகொள்ளுங்கள்" என்று சொன்னார்.

கூட்டம் ஆரம்பமானது. தலைவரின் உரை முடிந்ததும் எஸ். பொன்னுத்துரை எழுந்து "எழுத்தாளர்கள் மட்டும்தானா இந்தக் கூட்டத்தில் கலந்து கொள்கிறார்கள்" என்று கேட்டார். மேடையில் அமர்ந்திருந்த இளங்கீரன் 'ஆம்' என்று பதிலளித்தார்.

"எழுத்தாளன் கம்யூனிஸ்டாக இருக்கலாம். ஆனால் கம்யூனிஸ்ட்கள் எல்லோரும் எழுத்தாளராக இருக்க முடியுமா; என்று கூட்டத்திலே எஸ். பொ. தொடர்ந்தும் கேள்வி எழுப்பினார். இதனைச் சொன்ன போது அதனுடைய சூட்சுமம் சட்டென்று சிலருக்குப் புரிந்துவிட்டது. நீர்வை பொன்னையன் எழுந்து எதிர்க்கோசமிட துறை முகத்திலே வேலை செய்யும் தொழிலாளர்கள் கதிரைகளைத் தூக்கி யெறிந்து தாக்குதலுக்குத் தயாரானார்கள்.

சில புறூட்டஸ்களும் கூட்டத்தில் கலந்து கொண்ட எழுத்தாளர் அல்லாதவர்களும் எஸ். பொன்னுத்துரையை நேரடியாகத் தாக்க முனைந்தனர். குறிப்பாக நீர்வை பொன்னையன் எஸ். பொமீது தாக்குதலுக்குத் தயாரான அதேநேரம் ரஹ்மான் எங்கே என்று சத்தமிட்டவாறு எம். எஸ். எம். இக்பாலும் இன்னும் சிலரும் அவரை நோக்கி ஓடிவந்தனர்.

.... எஸ். பொவுக்கு விசுவாசமான நண்பர்களால் அவர் பாதுகாக்கப்பட்டு பத்திரமாக மண்டபத்துக்கு வெளியே கொண்டுவரப்பட்டார். எழுந்துநின்ற ரஹ்மானை எஸ். குருசாமி என்னும் இலக்கியப் பிரமுகர் தன்னுடன் இணைத்துக்கொண்டார். நண்பர்களால் ரஹ்மானும் வெளியே கொண்டுவரப்பட்டார்.

... மகாநாடு பற்றி எஸ். பொ பின்வருமாறு பதிவு செய்துள்ளார்.

இதை இலக்கிய நெஞ்சங்கள் யாராவது தமிழ் ஊழியத்தின் ஒரு அங்கமாக ஏற்றுக்கொள்வார்களா? இத்தகைய ஒரு படுபாதக நிலையில் ஓர் எழுத்தாளர் சங்கம் திசைமாறி கம்யூனிஸ்ட் கட்சியினுடைய ஏவல் நாயாகக் குரைக்கக்கூடிய எழுத்தாளர் சங்கத்தை நடத்த விரும்புகின்றது என்ற ஞானம் அப்போதுதான் எனக்குச் சடுதியாக உதயமாயிற்று." – பக்.35 – 36

ஆ). ஸாஹிரா மகாநாட்டின் பின்னஉ எஸ். பொவும், ரஹ்மானும் தங்களோடு உடன்பாடுகொண்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுத்தாளருடன் இணைந்து சளைக் காது செயற்பட்டனர்.

இந்தச் சூழலில்,

"சாகித்திய விழா யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி யில் குமாரசாமி மண்டபத்திலே 05. – 06. 10. 1963 இல் இரு நாட்கள் நடைபெற்றது. 1962 இல் பிரசுரமான புலவர்மணி ஏ. பெரியதம்பிப் பிள்ளையின் "பகவத்கீதை வெண்பா"., மகாவித்துவான் எப். எக்ஸ். சி. நடராஜா எழுதிய 'மட்டக்களப்பு மான்மியம்', வ. அ. இராசரத்தினத்தின் 'தோணி', அக்கரைப்பற்றைச் சேர்ந்த ஏ. ஆர். எம். சலீம் தந்த 'ஈழத்து முஸ்லிம் புலவர்கள்' ஆகிய நான்கு நூல்களுக்கும் அந்த விழாவிலே பரிசு கிடைத்தன.

.... இந்த விழாவில் இளங்கீரன் எழுதிய 'நீதியே நீ கேள்' என்ற நாவலுக்கு பரிசு கிடைக்கவில்லை என்று முற்போக்குக் கூட்டணி கோபத்தில் கொதித்துக் கொண டிருப்பதான தகவல் மெல்லக் கசிந்து வந்திருந்தது.

பரிசளிப்பு மேடையிலே விழாத் தலைவரான தமிழறிஞர் க. நடேசபிள்ளை, சாகித்திய மண்டல தமிழ் பிரிவுத் தலைவர் டாக்டர் ஆ. சதாசிவம், மகா வித்துவான் எப். எக்ஸ். சி. நடராஜா, பல்கலைக்கழக சமஸ்கிருதப் பேராசிரியர் கலாநிதி கைலாசநாத குருக்கள், யாழ்ப்பாணம் தேவன், சிறுகதை மூலவர்களுள் ஒருவரான எழுத்தாளர் சம்பந்தன் ஆகியோருடன் பரிசு பெற்றவர்களும் அமர்ந்திருந்தனர். அழைப்புக் கிடைத்தநிலையிலும் பொன்னுத்துரை மேடையைத் தவிர்த்துக்கொண்டார்.

நிகழ்ச்சிகள் ஆரம்பமானபோது முற்போக்குக் கூட்டணியின் முக்கிய உறுப்பினரும் பின்னாளில் கல்விப் பணிப்பாளராக உயர்ந்தவருமான ஏ. முகம்மது சமீம் "சாகித்திய மண்டலம் முஸ்லிம்களைப் புறக் கணித்து விட்டது. தான் சாகித்திய மண்டல உறுப்பினராக இருந்தும் தனக்கு ஏன் அழைப்பு அனுப்பவில்லை" என்று கேள்வி தொடுத்தார். கூட்டம் பரபரப்பானது. சபையிலிருந்த மார்க்சிய முற்போக்கு எழுத்தாளர்கள் கூச்சலிட்டனர். டொமினிக் ஜீவாவும் சுப்பிரமணியமும் கதிரைகளைத் தூக்கி வீசினர். மேடையை நோக்கி கூழ் முட்டைகள் வீசப்பட்டன. கலாநிதி ஆ. சதாசிவம், சம்பந்தன், யாழ்ப்பாணம் தேவன் உட்பட சகலரும் கூழ் முட்டைத் தாக்குதலுக்கு ஆளாகினர். பஞ்சமர் புகழ் டானியல் தலைமையிலான சண்டியர் குழு திட்டமிட்டவாறு கூச்சலிட்டு கூழ் முட்டைகளை மேடைநோக்கி வீசி பத்துநிமிடங்களாக ஆர்ப்பாட்டம் செய்தபின்னர் மண்டபத்தை விட்டு வெளியேறினார்கள்."

–பக்.. 37 – 38

"மீண்டும் கூட்டம் தொடர்வதற்கு முன்னர் எம். ஏ. ரஹ்மான் கவிஞர் அண்ணலை அழைத்துக் கொண்டு கஸ்தூரியார் வீதியில் உள்ள பூபாலசிங்கம் புத்தகசாலைக்குச் சென்றார். இருவரும் கடைக்கு










வெளியே பூபாலசிங்கம் அவர்களோடு பேசிக்கொண் டிருக்கும்போது யோ. பெனடிக்பாலன் அவ்விடம் வந்து ரஹ்மானிடம் 'போட்டிக் கதைகள்' பற்றி விசாரித்தார். அது நூலாக வெளிவருவதற்கான ஆயத்த வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருப்பதாக ரஹ்மான் பதில் கூறிக்கொண்டிருந்தபோது 'ஏய்' என்று சத்தமிட்டு ஆவேசத்தோடு அவரை அடிக்கக் கையை உயர்த்தி னார். தற்காப்புக் கலை நுட்பங்களை அறிந்திருந்த கவிஞர் அண்ணல் சற்றும் எதிர்பாராவிதமாக கையைப் பிடித்துத் தடுத்தார். அண்ணலின் ஆவேசத்தைப் பார்த்த பெனடிக் பாலன் அவ்விடம் விட்டு அகன்றார்.

அதேநேரத்தில் எஸ். பொ. அவர் வீட்டிற்குச் சென்று கொண்டிருந்தார். அவரை வழிமறித்த கும்பலொன்று "நீயும் ரஹ்மானும் சேர்ந்து எங்களை அழிக்கப் பார்க்கிறீர்கள். உங்களை நாங்கள் என்ன செய்கிறோம் பார்" என்று குரலை உயர்த்தியபோது அங்குவந்த எஸ். பொவின் நண்பர்களால் அவர் காப் பாற்றப்பட்டு வீட்டுக்கு அனுப்பப்பட்டார்." –பக். 38 – 39

* *

எம். ஏ. ரஹ்மான்பற்றி நன்கு அறிந்து வைத்துள்ள நூலாசிரியர், மேலும் பல தகவல்களைத் திரட்டி அவற்றை விபரமாகத் தந்துள்ளார். ரஹ்மானுடன் இணைந்து பயணித்த சகா எஸ். பொவினதும் பங்களிப்பையும் உரியவகையில் வெளிப்படுத்தியுள்ளார். பல தகவல்கள் எஸ். பொவின் நூல்களிலும் ஏனைய வற்றிலிருந்தும் பெற்றமையை ஒவ்வொரு அத்தியா யத்தின் கீழும் நேர்மையுடன் குறிப்பிட்டுள்ளா. 'அமைப்பாக' இயங்கிய அக்கால இடதுசாரி முற்போக்கு அணியின் வன்முறையின் அசிங்கம், தற்போதைய வாசகர் அறிந்துகொள்ளும் வகையில் விபரமாக முன்வைக்கப்பட்டுள்ளமையும் முக்கியமானது! ஏனெனில், இன்றும் ஆங்காங்கே – குறிப்பாக முகநூலில் – அறிவுலகப் பயங்கரவாதிகள் போல் சிறுகுழுக்களாக ஒருங்கிணைந்து, கருத்துகள் என்றபெயரில் (ஆங்கிலத்தையும் நுழைத்து!!!) மற்றவர்மீது வன்முறை நிகழ்த்தப்படுகிறது!

மறக்கப்பட்ட ஒரு முக்கிய ஆளுமையை வெளிக் கொண்டுவரும் முனைப்பில் சிரமத்துடன் செயற்பட்ட ஏ. ஆர். பீர் முகம்மதுவிற்கு, எனது வாழ்த்து!

– 18. 01. 2024



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பீர் முகம்மது பற்றிய சிறு தகவல் குறிப்புகள் (இரண்டாம் விசுவாமித்திரன்)

பிறப்பு : 28.12.1949

தந்தை - ஐ.அலியார்

தாய் - ஏ.உதுமானாச்சி

மனைவி - ஏ.சமீரா

பிள்ளைகள் - இஸ்ஸத் சில்மியா, அகமது முஜாவித், இஸ்ஸத் ஷெஸ்னி, அகமது முபாசிர், அகமது முசாரப்.

ஆரம்பக் கல்வி -

சாய்ந்தமருது வடக்கு தமிழ் கலவன் பாடசாலை(அல்ஜலால் வித்)

இடைநிலைக் கல்வி -

கல்முனை ஸாஹிரா கல்லூரி

உயர்தரக் கல்வி-

1967 இல் புலமைப் பரிசில் பெற்று மட்/ வந்தாறுமூலை மத்திய கல்லூரி

முதல் நியமனம் கணித ஆசிரியர் - (15.11. 1971)

வகித்த பதவிகள் -

தொலைக்கல்வி போதனாசிரியர்

அதிபர் ( கல்முனை ஸாஹிரா கல்லூரி)

கோட்டக்கல்விப் பணிப்பாளர் கல்முனை

ஓய்வு நிலை (2008)

2010 ,2015 ஆகிய இரு வருடங்கள் அரசாங்க மீள்நியமனம்

பட்டங்கள் (கல்வி)

BA , PGDE, Dip in Edu.Mgmt,

Dip in Psychology

விருதுகள். கௌரவங்கள் -

சர்வோதய தேசிய விருது (2006)

சாமஸ்ரீ தேசகீர்த்தி விருது (2008)

கிழக்கு முதலமைச்சர் விருது (2011)

கலாபூஷணம் விருது (2011)

தமிழ் மருத மாமணி பட்டம் ( 2011)

இல்லாமிய தமிழ் இலக்கியப்

பொன்விழா கௌரவம் (2016)

சுவதம் விருது (2017)

கலைமுத்து (2020)

பல்கலை வேந்தன் (2020)

பல கவியரங்குகளைத் தலைமை தாங்கியமை

வெளியிட்ட நூல்கள் -

அனுபவம் பெறுவோம் (பாடநூல்-தரம் 1)

கருதுகோள் (பாடநூல் க.பொ.த உ.ஃத வகுப்பு)

கடல் ஒரு நாள் எங்கள் ஊருக்குள் வந்தது. (சிறுவர் கவிதை)

ஒரு கிராமத்து சிறுவனின் பயணம் (வாழ்வியல் - தொகுப்பாசிரியர்)

திறன் நோக்கு (நூல் மதிப்பீட்டுக் கட்டுரைகள்)

விபுலாநந்த அடிகளும் முஸ்லிம்களும் (வாழ்வியல் ஆய்வு)

எஸ்.பொன்னுத்துரை:முஸ்லிம்களுடனான உறவும் ஊடாட்டமும் (வாழ்வியல் ஆய்வு)

இளம்பிறை எம்.ஏ. ரஹ்மான் இருட்டடிப்புகளை மீறி வெளிச்சத்துக்கு வந்தவர் (வாழ்வியல் ஆய்வு)

தைலாப்பொட்டி (சிறுகதை தொகுப்பு) - விரைவில்

மகாநாடுகள்

மூன்றாவது உலக இஸ்லாமிய தமிழாராய்ச்சி மகாநாடு (இந்தியா- 1978)

உலக இல்லாமிய தமிழ் இலக்கியப் பொன்விழா (கொழும்பு- 2016)

தெற்காசிய இலக்கிய பெருவிழா (புதுடில்லி -2019)

(ஆங்கில மொழியில் கவிதை வாசிக்கும் வாய்ப்பு பெற்றவர்.

கல்முனை தனி மாவட்ட கோரிக்கையை முன்வைத்து வாக்குமூலம் (ஜூன்1977)

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு முன்னிலையில் வாக்குமூலம் (27.03. 2011)

## குறிப்பு 02

"ஒரு மிகப்பெரிய உலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய பெரும் மகாநாட்டில் வாசிக்கப்பட வேண்டிய ஆற்றப்பட வேண்டிய ஒரு அருமையான உரையை இன்றைக்கு இந்த கருத்தரங்கத்தின் மூலமாக கல்வியலாளர் கவிஞர் பன்னூல் ஆசிரியர் சகோதரர் கலா பூஷணம் பீர்முகம்மது அவர்கள் தந்திருக்கின்றார். உண்மையாகவே அவருக்கு எமது பாராட்டுகளை தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறோம். அது மட்டுமல்ல அவர் ஆற்றிய இந்த உரையை அவர் சிறு நூலாக வெளியிடுவாரேயானால் தமிழ் கூறும் நல்லுலகத்துக்கு பெருத்த பயனை அது நல்கும் என்பது உண்மையாகும்"

(16.07.2021 இல் இஸ்லாமிய இலக்கியக்கழகம் நடத்திய இணையவழிக் கருத்தரங்கில் "வரலாற்றில் வாழும் அறபுத் தமிழ்" என்ற தலைப்பில் ஏ.பீர்முகம்மது அவர்கள் ஆற்றிய உரையின் பின்னர் கருத்தரங்குக்குத் தலைமை தாங்கிய பேராசிரியர் முனைவர் சேமுமு . முகம்மதலி அவர்கள் தலைவர்,இஸ்லாமிய இலக்கியக் கழகம், கூறிய குறிப்பு.

youtube Channel : Semumu Mohamadali Live இல் இருந்து)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இச் சஞ்சிகை அல்வாய் கலையகம் வெளியீட்டு உரிமையாளர் கலாநிதி த. கலாமணி அவர்களால் மதி கலர்ஸ் நிறுவனத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org